

கல்கி



KALKI 31-8-1969 40 காசு



இவன்தான் கிரீஷ்
மூன்று மாதக் குழந்தை.
பிறந்த முதல்
வாரத்திலிருந்து
இவன் அமுல்ஸ்ப்ரே
சாப்பிட்டு வருகிறான்.
இவனது வளர்ச்சி
வியக்கும்படியாக
இருக்கிறது.

இப்பொழுது அவனைப் பாருங்கள்!

"அமுல்ஸ்ப்ரே சாப்பிட்டு உயிர்த்துடிப்புடன் விளங்கும் இவன், நாள்தோறும் அறிவு வளர்ச்சியும் பெற்று வருகிறான்" என்கிறார், 13 மாதக் குழந்தையான கிரீஷின் தந்தை திரு. திலீப் சௌபல்.

உங்கள் குழந்தையின் எடை, பிறந்த ஆறு மாதங்களுக்குள் இரட்டிப்பாகவும், ஒரு வருடத்திற்குள் மும்மடங்காகவும் அதிகரிக்க வேண்டும். எனவேதான் அமுல்ஸ்ப்ரே, எளிதில் ஜீரணிக்கக் கூடிய சரிவிகித உணவாக அமைக்கப்பட்டுள்ளது. இது குழந்தையின் உடல் வளர்ச்சிக்கு மிகவும் அவசியமான புரதச்சத்தை அதிகமாக கொண்டிருக்கிறது.

குழந்தை உணவுகள் தயாரிக்க அமெரிக்காவில் உபயோகிக்கப்படும் உன்னதமான ஸ்ப்ரே-ட்ரையிங் செய்முறையினால் ஆக்கம்பெற்றது அது.

ஆயிரக்கணக்கான தாய்மார்கள், தங்கள் குழந்தைகள் பிறந்த முதல வாரத்திலிருந்தே அவற்றிற்குத் தாய்ப் பாலுக்குப் பதிலாகவோ அல்லது உபரி உணவாகவோ அமுல்ஸ்ப்ரே புகட்டி வருகிறார்கள். அதனால்தான், தயாரிக்கத் தொடங்கிய இரண்டு ஆண்டுகளுக்குள்ளாகவே அமுல்ஸ்ப்ரே இந்தியாவிலேயே உச்ச விற்பனையுள்ள குழந்தை உணவாகிவிட்டது.



அமுல்ஸ்ப்ரே


தாய்ப்பாலுக்குப் பதிலாகப் புகட்டச் சிறந்தது!

கல்கி பொருளடக்கம்

சௌமிய, ஆவணி 15உ ○ 1969 ஆகஸ்டு 31உ

ராஷ்டிரபதி தேர்தல்	(தலையங்கம்)	...	3
ராஜாஜியின் கருத்துக்கள்	...	...	6
பக்கத்து வீட்டுப் பிரமுகர்	கோமதி சுவாமிநாதன்	...	7
மறுபடியும் குறிஞ்சி மலர்	நா. பார்த்தசாரதி	...	10
அண்ணா அல்ல; தம்பிகளுள் ஒருவர்!	பேட்டி: பாபு	...	15
பொன்னியின் செல்வன்	அமரர் கல்கி	...	17
இதய மலர் (நாடக விமர்சனம்)	...	...	25
ராமாயணம்	ராஜாஜி	...	26
அம்புலிக்கு அப்பால்...	கதை:புஷ்பா படம்:விஜயா	...	30
அரசும் அற்பமே!	ரா. கணபதி	...	32
வேஷங்கள்	இந்திரா பார்த்தசாரதி	...	38
முதல் சந்திப்பு	நஜன்	...	45
தீராத விளையாட்டு	கு. அழகிரிசாமி	...	46
நெஞ்சக் கனல்	கோமகள்	...	58
படித்துப் பாருங்கள்	...	...	67
உறவின் ஆதாரம்	நா. கிருஷ்ணமூர்த்தி	...	69
எதிர்பாராத மகிழ்ச்சி	...	...	73
வெறி நடுவே...	எஸ். கிருஷ்ணமூர்த்தி	...	74
வட்ட மேஜை	...	...	80

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.



ராஷ்டிரபதிக்கு நல்வாழ்த்து!

பாரதத்தின் நான்காவது ராஷ்டிரபதியாகப் பதவி ஏற்றிருக்கும் ஸ்ரீ வி. வி. கிரி அவர்களுக்கு நல்வாழ்த்துக் கூறுகிறோம். அவர் பழம்பெரும் தேச பக்தர். விடுதலைப் போராட்டத்தில் அவரது குடும்பமே பங்குகொண்டது. வாழ்நாள் நெடுகச் சிறந்த காந்தியவாதியாகவே அவர் இருந்து வந்திருக்கிறார். பதவிகளை வகிக்காத காலத்தில், தொழிற்சங்க வாதியாக இருந்து அவர் ஆற்றிய சேவை புகழ் படைத்தது. இந்திய தொழிற்சங்க இயக்கத்தின் ஆரம்பகாலத் தலைவர்களில் அவர் ஒருவர்.

ஸ்ரீ கிரி பல பதவிகளைத் திறம்பட வகித்த பரந்த அநுபவசாலி. இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் உபராஷ்டிரபதியாக உயர்ந்தார். இப்போது ராஷ்டிரபதியாகி, நமது அரசியல் சாஸனத்தின் காவலராகச் சேவை புரியும் வாய்ப்பு அவருக்குக் கிடைத்துள்ளது. இனி பாரத சமுதாயம் அனைத்திற்கும் அவர் தலைவர். எல்லாக் கட்சிகளுக்கும் அப்பாற்பட்ட உயர் நிலையில் இருந்து தேசத்தின் சாஸனத்தையும், சுதந்திரத்தையும் அரண் செய்து காக்கும் பொறுப்பை அவர் செவ்வனே நிறைவேற்றி வைப்பார் என நம்பி, இதற்கு ஆண்டவன் துணையைப் பிரார்த்திக்கிறோம்!



தமிழ்த்திருநாடு தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்

மலர் 29 □ இதழ் 5

ராஷ்டிரபதி தேர்தல்

ராஷ்டிரபதி தேர்தலுக்கு சஞ்சீவ ரெட்டியை அபேட்சகராக நியமித்ததை அடுத்து, பிரதம மந்திரியும் காங்கிரஸ் அக்கிராசனரும், கட்சிக் கொறடாவை நீக்கி வாக்காளர்களுக்கு வாக்குச் சுதந்திரம் அளித்திருக்க வேண்டும் என்று நான் முதலிலேயே சொன்னேன். அதற்குச் செவி சாய்த்திருந்தால் இப்போது ஏற்பட்டுள்ள மோசமான நிலையைத் தவிர்த்திருக்கலாம். ஆனால் புத்திமதி மனத்தில் ஏறுவது சிரமம். அகந்தையுடன் கூடிய ஆசைகளும், சந்தேகங்களும் உடையவர்கள் விஷயத்தில் இது அதிக சிரமமானது.

''ஏழைகளை நம்ப வைப்பது சுலபம். நம்பிக்கையைத் தந்திரமாக உருவாக்குவது, சொற்சிலம்பத்தால் மக்களை மயக்குவது — இவையெல்லாம் பிற நாடுகளில் கையாண்டு பார்த்த உபாயங்களே. ஆனால் காந்தி, நேரு இவர்களின் வழி வந்த லட்சியங்களை அடைய அவை உதவ மாட்டா. இந்தப் புதுவகை ராஜீய வித்தைகள் அதில் ஈடுபடுவோருக்கு வெறி போதையைத் தரலாம். ஆனால் மக்களை அவை கெடுத்து விடுகின்றன. பொய்யைப் பெரிதாக்கிச் சொல்லும் யுக்தி, திரும்பத் திரும்ப ஒரே புகார்களை எடுத்துச் சொல்லி ஒரு நபரையோ அல்லது குழுவையோ மோசமாகச் சித்திரித்துக் காட்டுவது போன்ற வழிகளைக் கையாள்வது மக்களை மொத்தமாக வசப்படுத்தும் சாதனங்களில் ஒன்று. இந்த வித்தையில் கம்யூனிஸ்டுகள் கைதேர்ந்தவர்கள். பாங்குகளை அரசு உடைமை யாக்கியது போன்ற, சாமான்ய மக்களுக்கு உவப்பான ஒரு முடிவைப் பிரமாதப்படுத்திக் காண்பிப்பது இவ்வகையில் குறிப்பிடத்தக்கதே'' என்று ஸ்ரீ அசோக மேத்தா கூறியுள்ளார். இது காங்கிரஸிலும், அதற்கு வெளியிலும் உள்ள சோஷலிஸ்டுகளின் சிந்தனைக்கு உரிய வாசகம்.

அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி பெங்களூரில் கூடியபோது ஸ்ரீமதி இந்திரா காந்திக்குத் தனிப்பட்ட முறையில் நேசப் பான்மையில் ஒரு கடிதம் எழுதினேன். பிரதம மந்திரிப் பொறுப்பை மொரார்ஜி தேசாயிடம் ஒப்படைத்துவிட்டு ஸ்ரீமதி இந்திராவே ராஷ்டிரபதி பதவிக்கு வேட்பாளராக நிற்க வேண்டும் என்று அதில் கூறியிருந்தேன். அப்பதவியை ஏற்க அவர் முன்வந்திருந்தால் அதற்கு மிகப் பெரிய வரவேற்புக் கிடைத்திருக்கும். காங்கிரஸ் கட்சிக்கும் தேசத்துக்கும் அவர் சேவை செய்ய அதுவே சிறந்த வழி என்று கடிதத்தில் வற்புறுத்தியிருந்தேன். என் கடிதம் நிச்சயமாக அவர் கைக்குக் கிடைத்திருக்க வேண்டும். ஆனால் கடிதம் வந்ததாகக்கூட அவர் பதில் எழுதவில்லை. என்னுடைய வேண்டுகோள் அவருக்கு உவப்பாக இல்லை என்று ஊகித்துக் கொண்டேன்.

ஆசைகள் காரணமாகப் போற்றத் தக்க வகையில் மனிதன் செயலாற்றுவது உண்மை. ஆனால் அந்த ஆசைகளைக் கட்டுத் திட்டத்தில் வைத்துக் கொண்டாலொழியத் தவறு நிகழ்ந்தே தீரும். தேரோட்டும் சாரதி கடிவாளத்தை உறுதியாகத் தன் கைகளில் வைத்துக் கொண்டாலொழிய முரட்டுக் குதிரைகளால் பேராபத்துத்தான் விளையும் என்று எச்சரிக்கிறது உபநிடதம்.

ராஷ்டிரபதித் தேர்தலில் வாக்குச் சுதந்திரம் அளிக்க வேண்டும் என்று நானும், சுதந்திரக் கட்சியும் முதலில் செய்த பிரேரணையைப் பிரதமர் ஏற்கவில்லை; காங்கிரஸ் கட்சியும் நிராகரித்து விட்டது. அபேட்சகராக நிற்பதற்கு சஞ்சீவரெட்டியின் இசைவைக் காங்கிரஸ் பெற்றது. அதற்காக அவர் சபா நாயகர் பதவியை ராஜிநாமாச் செய்தார். பிரதம மந்திரியும், காங்கிரஸ் கட்சித் தலைவர்களும் அவரது நியமனப் பத்திரங்களைத் தாக்கல் செய்தனர். எனவே தார்மிக ரீதியில் அவரை ஆதரித்தாக வேண்டிய பொறுப்பு அவர்களுக்கு ஏற்பட்டது. அந்த வாக்குறுதி

யைக் கௌரவித்தாக வேண்டிய கடமை அவர்களுக்கு உண்டு.

நிலைமை இப்படியிருந்தும் பிரதம மந்திரி தம் சொந்தச் செல்வாக்கை உபயோகித்தார். ஆயினும் அவரைப் பொருட்படுத்தாது. பெருவாரியான காங்கிரஸ்காரர்கள் ஸ்ரீ சஞ்சீவ ரெட்டிக்கு ஆதரவு கொடுத்திருக்கிறார்கள். சுதந்திர சகாப்தத்தின் புதிய வருடத்தை நம்பிக்கைத் துரோகத்துடன் அவர்கள் தொடங்கவில்லை. ஒழுக்கமற்ற செயல்கள் அரசியலிலேயே மக்களுக்கு நம்பிக்கை இல்லாமல் செய்துவிடும்; இதன் விளைவாக, நல்லவர்கள் பொது விவகாரங்களிலிருந்து விலகி நின்று தமது சொந்த க்ஷேம நலனை மட்டுமே நாடத் தொடங்குவர்.

கட்சித் தலைமையின் முடிவு எவ்வாறு இருந்த போதிலும், பிரதம மந்திரிக்கு விசேஷ சக்தி இருக்கிறது. அவர் கையில் இருப்பது அரசாங்க அதிகாரம். ஆனால் கட்சித் தலைமையினரிடம் அம்மாதிரி அதிகாரம் இல்லை.

காங்கிரஸில் நடந்திருப்பதைப் பற்றி நினைக்கவே அருவருப்பாயிருக்கிறது. காங்கிரஸ் மிகவும் சீர்கெட்டுக் கிடக்கிறது. அது தகுதியற்றது என்பது ருசுவாகி விட்டது. எனவே நல்ல ஆரோக்கியம் ஏற்படக்கூடிய வகையில் தேசத்தின் அரசியல் வாழ்வில் புது முயற்சிகள் தோன்ற வேண்டும்.

மனிதன் ஒன்று நினைக்கிறான்; தெய்வம் வேறொன்று நினைக்கிறது. காந்திஜீ அருள்வாக்குப் போல் அன்று சொன்னதைக் கேட்காமல் காங்கிரஸ் கட்சி அதிகாரத்தை உடும்புப் பிடியாகப் பற்றிக் கொண்டது. இத்தகைய கட்சி வெளிப்படையாகப் பிளவுபட வேண்டியதுதான் என்பது கடவுளின் திருவுள்ளம் போலும். ஒத்துழையாமை இயக்கத்தின்போது ஒரு நெருக்கடி ஏற்பட்டது. அதில் ஈடுபட்ட எல்லோரும் பெருமக்கள். எனவே பிளவு தவிர்க்கப்பட்டது. இன்று காங்கிரஸில் ஏற்பட்டுள்ள பெரிய பிளவு இன்றுள்ளவர்களால் சமாளிக்க இயலாத அளவு விரிந்துவிட்டது. கம்யூனிஸ்டுகள், அவர்களைச் சார்ந்தவர்கள் ஆகியோரின் உதவியுடன் தேசத்தைத் தம்மால் நடத்திச் செல்ல முடியும் என்று ஸ்ரீமதி இந்திரா காந்தி நினைப்பதாகத் தோன்றுகிறது. நிதானப் போக்கு உள்ளவர்கள் தமது சோஷலிஸ்டு முயற்சிகளுக்கு இடையூறாக இருப்பதாகக் கருதி, அவர்களைப் புறக்கணிக்க விரும்புகிறார். ஆனால் கம்யூனிஸ்டுகளையும் மறைமுகக் கம்யூனிஸ்டுகளையும் ஒருகாலும் இந்தியா தலைவர்களாக ஏற்றுக் கொள்ளாது. சுதந்திரமான வாழ்க்கை வழியில் நம்பிக்கை வைத்துக் கொண்டு முன்னேறுவதுதான் இந்தியாவின் தார்மிக விதி. மேலெழுந்தவாறு பார்க்கும் போது கவர்ச்சிகரமாகத் தோன்றும் ஒரு செயல் முறையை ஸ்ரீமதி இந்திரா காந்தி ஏற்றுக் கொள்வது நாட்டுக்கோ, அவருக்கோ நல்லதல்ல.

ஸ்ரீமதி காந்தியும் மற்றவர்களும் கொண்டுள்ள சமவிநியோக சோஷலிஸ நோக்கங்கள் நிறைவேற வேண்டுமாயின் அதற்கு முன்னதாக நாட்டில் உற்பத்தியும் செல்வமும் பெரிய அளவில் அதிகரிக்க வேண்டும். ஆகஸ்ட் 17ந் தேதி ''இந்தியன் எக்ஸ்பிரஸ்'' இதழில் ஸ்ரீமதி நயன தாரா ஸாகல் ஒரு கட்டுரை எழுதியிருக்கிறார். அதில் அவர் கூறுகிறார்: ''எந்தக் கட்சி பதவி வகித்தாலும் சர்க்கார் பொறுப்புள்ளதாக இருந்தால், உற்பத்திப் பெருக்கில்தான் மேலும் மேலும் கவனம் செலுத்த வேண்டும். இன்னும் பல ஆண்டுகளுக்கு இதுவே இந் நாட்டின் பணியாக இருந்தாக வேண்டும். வேறு எதுவும் இதை முந்திக் கொள்ளும்படி விடக் கூடாது. அதிக உற்பத்திக்கு ஊக்க மளிக்கும் வகையில் பங்கீட்டு ஏற்பாடும் அமைய வேண்டும். மக்களின் நலனில் கருத்துள்ள சர்க்கார், உற்பத்தித் திறன் பெருகுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். அதிகாரத்துக்கு நெருக்கடி வந்து விட்டது, அல்லது ஒரு தலைவருக்குச் சிரம நிலை ஏற்பட்டுவிட்டது என்பதற்காக மேற்கொள்ளும் (அரசாங்க) நடவடிக்கை பொறுப்புள்ளதாகாது. பாங்குகளை நாடக பாணியில் அவசர, அவசரமாக அரசுடைமையாக்கியது இத்தகைய சூழ்நிலையில்தான் நடந்தது என்பதற்கு ஆதாரமிருக்கிறது.''

நேருவின் மகளுக்கு எதிராக நேருவின் சகோதரி மகள் எழுதியதை எடுத்துக் காட்டுவதில் இங்கிதக் குறைவு இல்லை. இப்போதைய முக்கிய தேவை அதிக உற்பத்திதான் என்பதை நயன தாரா சுட்டிக்காட்டுகிறார். அந்த நிலைமையைத் தோற்றுவிப்பதற்கு உழைப்பது நமது முதல் கடமை. ஆனால் ஸ்ரீமதி இந்திரா காந்தி செய்ய நினைப்பது உற்பத்திப் பெருக்கைப் பாதிக்கும்.

(''ஸ்வராஜ்யா''வில் ராஜாஜி எழுதியது.)




ஹுமாயூன் கபீர் மறைவு

ஹுமாயூன் கபீரின் மறைவில் இந்தியா தனது தலைசிறந்த குடிமகன் ஒருவரை இழந்து விட்டது. தம் மனசாட்சிப்படி வாழ்ந்த ஒருவர் அவர். நாட்டு நடப்புகளில் பேத உணர்ச்சியும் அவிவேகமும் தலைதூக்கியுள்ள இக்காலத்தில் அவர் நல்லாரோக்கியத்துடன் மேலும் பல ஆண்டுகள் வாழ்ந்திருப்பாராயின் ஒற்றுமைக்கு மகத்தான பணி புரிந்திருப்பார்.



வரவர மாமியார்"



ராஜாஜியின் கருத்துக்கள்

ராஷ்டிரபதி தேர்தலில் வாக்களித்த சுமார் 4000 பேர்களில் கணிசமான பெரும் பகுதியினர் — 2000க்கும் மேற்பட்டவர்கள்— பாரத நிர்வாகத்தின் உச்ச ஸ்தானத்தில் உள்ள பிரதமர் காட்டிய வழியைப் பின் பற்றவில்லை. இதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். பார்லிமெண்ட் அல்லது வெவ்வேறு ராஜ்ய சட்டசபை வாக்குகளுக்கு உள்ள மதிப்பைக் கொண்டு வேட்பாளர்கள் பெற்ற வாக்குகளைப் பெருக்கி வானொலியிலும் பத்திரிகைகளிலும் செய்திகள் தரப்பட்டதால், முக்கியமான வேட்பாளர்கள் லட்சக் கணக்கில் வாக்குகள் பெற்றிருப்பதாகக் காண்கிறோம். இதனால் எந்த வேட்பாளருக்கு எத்தனை வாக்காளர் வோட் போட்டிருக்கிறார் என்பது பற்றிப் பாமர மக்களுக்குக் குழப்பம் ஏற்படக்கூடும். ராஷ்டிரபதி தேர்தலில் மொத்தம் வோட் செய்தவர்கள் பார்லிமெண்ட் அங்கத்தினர்களான 745 பேரும், ராஜ்யங்களிலுள்ள சட்டசபைகளைச் சேர்ந்த 3303 அங்கத்தினரும் ஆவார். இவர்களில் 1910 வாக்காளர்கள் ஸ்ரீ கிரிக்கு முதல் வாக்கு அளித்துள்ளனர். ஸ்ரீ சஞ்சீவ ரெட்டி, ஸ்ரீ தேஷ்முக் ஆகிய இருவருக்குமாகச் சேர்த்து 2012 வாக்காளர்கள் முதல் வாக்கு அளித்திருக்கின்றனர். (ஸ்ரீ சஞ்சீவ ரெட்டி: 1503; ஸ்ரீ தேஷ்முக்: 509)

வானொலியிலும், பத்திரிகைகளிலும் வாக்குகளின் எண்ணிக்கை லட்சக்கணக்கில் கொடுக்கப்பட்டதற்குக் காரணம், பார்லிமெண்ட் வோட் ஒவ்வொன்றும் 576 மதிப்பெண் பெற்றிருப்பதும், அவ்வாறே ராஜ்ய சட்டசபை வோட்டுக்கள் அந்தந்த ராஜ்யத்தைப் பொறுத்து 174லிருந்து 94 வரை மதிப்பெண் பெற்றிருப்பதுமே.

மதிப்பெண்ணைக் கொண்டு பெருக்கிய பெருந் தொகையை மறந்து விட்டுப் பார்ப்போமாயின் மொத்தம் 4048 வாக்காளர்கள் கலந்து கொண்ட இத்தேர்தலில்— பிரதமருக்கும் காங்கிரஸ் ஸ்தாபனத்துக்குமிடையே நடந்த போட்டியில் — 1910 பேர் பிரதமருக்கு ஆதரவாகவும் 2012 பேர் எதிராகவும் முதல் வாக்களித்துள்ளனர்.

இவ்விவகாரத்தில் மிகவும் குறிப்பிடத்தக்க அம்சம், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த பிரதமர் — பார்லிமெண்டில் காங்கிரஸ் கட்சியின் தலைவராக இருப்பவர் — காங்கிரஸைத் தோல்வியுறச் செய்வதற்குத் தம்மால் இயன்ற அவ்வளவையும் செய்து, அதில் வெற்றியும் பெற்றிருக்கிறார்! இந்தியாவின் புது ராஷ்டிரபதி காங்கிரஸுக்குப் பிரதிநிதித்துவம் வகிக்கவில்லை. சர்க்கார் சர்வாதிபத்தியவாதிகள், கம்யூனிஸ்ட்கள், அவர்களின் 'சக—பிரயாணிகள்' ஆகியோரில் பிரதமரை ஆதரிப்பவர்களுக்கே பிரதிநிதியாக உள்ளார் புதிய ராஷ்டிரபதி.

இதை நான் எழுதுகிற வரையில், காங்கிரஸை உத்வேகத்துடன் எதிர்த்த பிரதமரின் மீது கட்சியின் மேலிடம் எடுக்க வேண்டிய நடவடிக்கை யாது என்று முடிவாகவில்லை.

பிரதமர் அல்லது வேறெவரின் கட்டுப்பாடோ, கட்டளையோ இன்றி ராஷ்டிரபதித் தேர்தலில் வாக்காளர்கள் சுதந்திரமாக வாக்களித்திருந்தால், அப்போது எவர் தேர்வு பெற்றிருப்பினும் நான் மகிழ்ச்சியுற்றிருப்பேன். ஆனால் இப்போது நடந்திருப்பதற்கும் சுயேச்சையான தேர்வுக்கும் வெகு தொலைவு உள்ளது. அதிகாரத்துக்காக நடக்கும் கசப்பான சண்டையில் ஏற்பட்ட நெரிசலின் விளைவே இன்றைய தேர்தல். இதனால் ராஷ்டிரபதியைக் குறித்து ஏற்படும் மனோபாவம் பாதிக்கப்படுகிறது.

★

மக்கட் சபையில் ஆகஸ்ட் 21ந் தேதி நடைபெற்ற விவாதத்தில் ஸ்ரீ ஹநுமந்தையாவும் ஸ்ரீ பிரகாச வீர சாஸ்திரியும் தெலிங்கானாவைத் தனி ராஜ்யமாகப் பிரிக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திச் சர்க்காருக்கு அறிவுரை கூறி எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

தேசத்தின் இன்றைய நிலையை அநுசரித்துத் தாம் வெளிப்படையாகப் பேச வேண்டியிருப்பதாகக் கூறிய ஸ்ரீ ஹநுமந்தையா, 'நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் பயங்கரப் பிரச்னைகள் தலைதூக்கியுள்ளன. இவை பட்சபாதமின்றி ஆராயப்படவில்லை. இவற்றுக்கு உரிய காலத்தில் பரிகாரம் காணப்படவும் இல்லை. தனிப்பட்டவர்கள் அல்லது கட்சிகளின் சௌகரியத்தை அநுசரித்து இப்பிரச்னைகள் வளர விடப்பட்டிருக்கின்றன. மக்களின் விருப்பத்தைக் கொண்டு முடிவு செய்யவேண்டிய விஷயங்களில் மேலாதிக்கம் செலுத்த நம்மில் எவருக்கும் உரிமை இல்லை. இவ்வாறு உரிமை கொண்டாடினால் நாம் ஹிட்லர்கள் ஆவோம்' என்றார். மக்களின் விருப்பத்தை முன்னிட்டு ஒரே மொழி பேசுவோருக்காக ஒரு ராஜ்யம் இரண்டாகப் பிரிக்கப்படுமாயின் இது நாட்டின் ஐக்கியத்தை ஒருவிதத்திலும் பாதிக்காது என்று ஆசாரிய ரங்கா கூறியிருப்பதை ஸ்ரீ ஹநுமந்தையா எடுத்துக் காட்டினார்.

ஸ்ரீ பிரகாச வீர சாஸ்திரி பேசுகையில், தெலிங்கானா பிரச்னை அரசியல்வாதிகள், போலீஸார் ஆகியோரின் கைமீறிப் போய் விட்டதாகவும், தனி ராஜ்யம் பிரிப்பது தவிர வேறு வழியில்லை என்றும் கூறினார்.

கோயம்பேட்டில் கொடி ஏறுகிறது!

சென்னை அமைந்தகரையை அடுத்த கோயம்பேடு புராதனப் பிரசித்தி பெற்ற சைவ — வைணவத் தலம். புராதனப் பிரசித்தியுடன் நிகழ்காலப் பிரசித்தியும் பெறுகிற வண்ணம் இத்தலத்தில் ஒன்றன்பின் ஒன்றாகப் பல திருப்பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்த ஆகஸ்ட் 31ந் தேதியன்று பிற்பகல் இரண்டு மணிக்கு வைகுண்டவாசப் பெருமான் ஆலயத்தில் புதிய துவஜஸ்தம்பம் பிரதிஷ்டையாகிறது. விழாவில் அன்பர்கள் பங்கு கொண்டு திருவருள் பெற வேணும்.



பக்கத்து வீட்டுப் பிரமுகர்

''நானும் நண்பர் சுந்தரவடிவேலு அவர்களும் கடந்த இருபத்தியொரு வருஷங்களாக அக்கம்பக்கத்து வீட்டுக்காரர்களாக இந்த சென்னை நகரிலே வாசம் செய்து கொண்டிருக்கிறோம்'' என்று தொடங்கும் திரு ராமாராவ் சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் பற்றிய ருசிகரமான தகவல்களைக் கூறுகிறார்.

என் வீட்டு நம்பர் தொண்ணூற்றி ஒன்று. அவர் வீட்டு நம்பர் தொண்ணூறு. இந்த உறவு ஏற்பட்ட காலத்திலே நாங்க ரெண்டு பேருமே சென்னை நகர கார்ப்பொரேஷனில்தான் பணியாற்றிக் கொண்டிருந்தோம். அவர் ஆசிரியர் பயிற்சி பெற்ற கல்வித் துறையாளர். நான் பொறியியல் அனுபவம் பெற்ற நகர அமைப்புத் துறையைச் சேர்ந்தவன். சீக்கிரமே, 1951லே என்று நினைக்கிறேன்—அவர் கல்வித்துறையில் வேறு பதவியை ஏற்க நகரசபையை விட்டுப் போய் விட்டார். பதவிகள் மாறிக் கொண்டே இருந்தன. ஆனால் எங்கள் நட்பும் சகஜபாவமும் ஒரே மாதிரியாக அன்று இருந்தது போலத் தான் இருந்து வருகின்றன.

இப்பவும் அவர் பங்களூர் போயிட்டு வந்தால் நிறைய காய்கறிகள் வாங்கி வருவார். அதில் பாதி எங்கள் வீட்டுக்கு வந்து விடும். அதே மாதிரி நான் ஆந்திராவுக்குப் போய் வரும் போது கொண்டு வரும் மாம் பழங்கள் அவர் வீட்டுக்குப் போகும்.

என் பையன் பிரசாத்துக்கு அட்சராப்பியாசம் செய்து வைத்தவரே என் நண்பர் சுந்தர வடிவேலுவின் மனைவியார்தான். பிரசாத் இப்போது எம். பி. பி. எஸ். படித்துக் கொண்டிருக்கிறான்.

ஒரு சந்தர்ப்பத்திலே நல்லதாக ஓர் அல்சேஷியன் நாய் வளர்க்க ஆசைப்பட்டேன். ஒரு குட்டியும் வந்து சேர்ந்தது. என் வீட்டு மாடி அறையில் கட்டிப் போட்டிருந்தேன். புது இடம் என்பதாலோ என்னவோ அது இரவு முழுதும் இடைவிடாமல் குரைத்தது. மறு நாளும் அப்படியே. மறு நாள் அடுத்த வீட்டு அம்மையாரைப் பார்த்த போது, நாயைப் பற்றி விசாரித்தார். நான் புரிந்து கொண்டேன். அன்றே அந்த அல்சேஷியன் நாய்க்குட்டி துணையுடன் விஜயவாடாவுக்குப் போய் விட்டது.

அடுத்த வீட்டுக்குக் காலையிலும், மாலையிலும் பார்வையாளர்கள் நிறையவே வந்து போவார்கள். பாமரரும் வருவார்கள், பண்டிதர்களும் வருவார்கள். யாரையும் அநாவசியமாகக் காத்திருக்கச் செய்யக் கூடாது என்ற கொள்கை உடையவர். அதற்காகக் காலையிலேயே எழுந்து அவசரம் அவசரமாகத் தம் வேலைகளை முடித்துக் கொண்டு விடுவார். வந்தவர்கள் சொல்வதைப் பொறுமையுடன் கேட்டுக் கொள்வார். நியாயமான கோரிக்கைகளைப் பரிசீலிப்பதாகவும் உறுதியளிப்பார். ஆனால் ஒரே விஷயத்துக்காகப் பல தடவைகள் திருப்பி வந்து துளைத்தெடுப்பவர்களைப் பார்க்கும்போது இவருக்குக்கூட அதிசயமாகக் கோபம் வரும். ''நட்ட செடியைச் சும்மா பறித்துப் பறித்துப் பார்க்கிற மாதிரி இருக்கிறது அந்தப் பேச்சு'' என்பார். 'வரு


ராமாராவ் _ சுந்தரவடிவேலு

றவர்களில் முக்கால்வாசிப் பேர்களுக்குச் சுருக்கமாகப் பேசத் தெரியவில்லையே?" என்றும் இவர் அடிக்கடி குறைப்பட்டுக் கொள்வார். ஒருவருக்காகச் செலவழிக்கும் நேரத்தை இருவருக்கு உபயோகப்படுத்தலாமே என்பதால்தான்.

இவர் கல்வி இலாகா டைரக்டராகப் பணியாற்றிய போது, செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள தனியார் பள்ளி நிர்வாகி ஒருவர், 'அட்வான்ஸ் கிராண்டு'க்காக மனுப் போட்டிருந்தார். அந்தப் பள்ளிக்கூடம், தரத்திலும், நிர்வாக ஒழுங்கிலும் சிறந்து விளங்கிய விஷயம் இவருக்குத் தெரியும். ஆகவே, மனு கைக்குக் கிடைத்த தினத்திலேயே இவர் 'சாங்ஷன்' உத்தரவு போட்டு அனுப்பி விட்டார். ஆனால் மனுவை அனுப்பி வைத்து விட்டு அதைத் தொடர்ந்து பின்னாலேயே பட்டணத்துக்கும் வந்த நிர்வாகி, டைரக்டரைச் சந்தித்து, தாம் வந்த விஷயத்தை விவரமாக விளக்க ஆரம்பித்தார். "ஐயா! நேரம் பொன்னானது. இந்த நேரத்தைத் தயவுசெய்து உங்கள் பள்ளிக்காகச் செலவிடுங்கள். உங்கள் மனுவின் பேரில் உத்தரவு போட்டாயிற்று. சென்று வாருங்கள்" என்று கைகூப்பினார். வந்தவருக்குப் பிரமிப்பு நீங்க வெகு நேரமாயிற்று.

1956லே அரியலூர் ரயில் விபத்து நடந்தது நினைவிருக்கிறதா? அந்த விபத்துக்குள்ளான தூத்துக்குடி எக்ஸ்பிரஸில் திருநெல்வேலிக்குப் போக இவர் சீட் ரிசர்வ் செய்திருந்தார். ஆனால் இவருடைய நல்ல காலம் இவரை அந்த ரயிலில் பிரயாணம் செய்ய விடாமல் தடுத்து விட்டது. இவர் புறப்பட வேண்டிய தினத்தில், அப்போது சென்னை மாநில கவர்னராக இருந்த ஸ்ரீ பிரகாசாவுக்கு அவர் வேறு மாநிலம் போவதை ஒட்டி நகர மக்கள் சார்பில் ஒரு பொது வழியனுப்பு உபசாரத்துக்கு ஏற்பாடாகியிருந்தது. இவர் அதில் பங்கு கொள்ள வேண்டியிருந்ததால் ரயில் பிரயாணத்தை ரத்து செய்தார். 'உங்க நல்ல மனசுதான் உங்களைக் காப்பாற்றியது' என்று சொன்னால் அதற்கு ஒரு குறளடியைத்தான் சொல்லுவார். வேறு பதில் சொல்ல மாட்டார்.

நன்றாங்கால் நல்லவாக்
காண்பவர் அன்றாங்கால்
அல்லற் படுவ தெவன்

என்பதுதான் அந்தக் குறள். இவருக்கு மிகவும் பிடித்தவை குறளும் பாரதியார் கவிதைகளும்தான். முன்னது இவருக்கு வழிகாட்டி. பின்னது ஊக்கமூட்டி என்று சொல்லுவார்.

"தருமத்தின் வாழ்வதனைச் சூதுகவ்வும்;
தருமம் மறுபடிவெல்லும்" எனுமியற்கை
மருமத்தை நம்மாலே உலகங்கற்கும்
வழிதேடி விதிஇந்தச் செய்கை
செய்தான்;
கருமத்தை மேன்மேலும் காண்போம்;
இன்று
கட்டுண்டோம், பொறுத்திருப்போம்;
காலம் மாறும்

என்னும் பாஞ்சாலி சபதத்தில் வரும் பாரதியாரின் ஆறுதல் சொற்கள், இவருடைய சோர்வைப் போக்கும் மருந்தாகவும் பல தடவைகள் உதவியிருக்கின்றன.

1962ல் இவர் இங்கிலாந்துக்குப் போயிருந்த சமயம். இந்தியா மீது சீனு ஆக்கிரமிப்பு நடத்திய செய்தி முதன் முதலாக அன்றைய காலைப் பத்திரிகைகளில் தான் வெளியாகியிருந்தது. அன்று முற்பகலில் இவர் ஒரு பெண்கள் பள்ளியைப் பார்க்கப் போயிருந்தார். இவர் இந்தியாவிலிருந்து வந்தவர் என்று அறிமுகம் செய்து வைக்கப்பட்டதும் ஒரு சுட்டிகையான சிறுமி எழுந்திருந்து, "உங்கள் அண்டை நாட்டவருடன் யுத்தத்தில் மாட்டிக்கொண்டு விட்டீர்களே?" என்று பொருள்படும்படி ஆங்கிலத்தில் கேட்டாள். 'மாட்டிக் கொள்வது' என்று பொருள்பட அந்தச் சிறுமி (Involved) என்ற ஆங்கிலப் பதத்தை நாசூக்காக உபயோகித்ததைக் கண்டு ஆச்சரியப்பட்டார். "இதே நேரத்தில் இங்கு எனக்குப் பதிலாக ஒரு சீனர் வந்திருந்தாலும் இப்படித்தான் கேட்டிருப்பாயோ?" என்றார்.

அந்தச் சிறுமி வெடுக்கென்று என்ன பதில் சொன்னாள் தெரியுமா? "உங்களிடம் தான் நான் அப்படிக் கேட்பேன். நாம் ஒரே 'காமன்வெல்த்' குடும்பத்தைச் சேர்ந்தவர்களில்லையா?"


"சிறு குழந்தைகள்கூடத் தங்கள் பொது அறிவை அபிவிருத்தி செய்து கொள்ளப் பெற்றோர்கள் அங்கு உதவுகிறார்கள். அப்படித்தான் நாமும் இங்கு கவனம் செலுத்த வேண்டும்" என்பார்.

வெளியூர் முகாம் போகாமல் ஊரில் இருக்கும் நாட்களில் காரியாலயத்துக்குக் கண்டிப்பாக அரை மணி நேரம் முன்பாகவே போய்ச் சேரும் பழக்கம் இவரிடம் வெகு நாட்களாகவே உண்டு.

இவருடைய பொழுதுபோக்கெல்லாம் எழுதுவது, படிப்பதுதான்! வேறு எதற்கும் இவருக்கு அவகாசம் கிடைப்பதும் இல்லை.

1953ல் கல்வி இலாகாவில் இவர் டெபுடி டைரக்டராகப் பணியாற்றி வந்த வேளையிலே இவருடன் இன்னொரு சக டெபுடி டைரக்டரும் இருந்தார். அவர் ஏற்கனவே ஓய்வு பெற்று இரண்டாண்டு காலத்துக்கு மீண்டும் பதவியில் அமர்த்தப்பட்டவர். அந்த இரண்டாண்டு காலம் முடிந்தவுடன் அவரையே மீண்டும் ஓர் ஆண்டு காலத்துக்கு வைத்துக் கொள்ளலாமாவென்று அன்றைய முதல் அமைச்சரிடம் அணுகினார்கள் கல்வி இலாக்கா அதிகாரிகள். "எதற்கு மீண்டும் மீண்டும் அவரைத் தொந்தரவு செய்கிறீர்கள். சுந்தர வடிவேலு அவர்கள் இரண்டு வேலையையும் சேர்த்து இன்னும் கொஞ்ச நாள் பார்ப்பாரே!" என்று சொல்லி விட்டார் முதலமைச்சர். அப்புறம் சுமார் பதினெட்டு மாதங்கள் கழித்துத் தான் அந்தப் பதவிக்குப் புதிய நபர் நியமிக்கப்பட்டார். சுந்தரவடிவேலுவின் உழைப்பின் மேல் அத்தனை நம்பிக்கை. அன்றைய முதல் மந்திரி வேறு யாருமில்லை! மதிப்புக்குரிய நம் ராஜாஜி அவர்கள்தான்!

பேட்டி: **கோமதி சுவாமிநாதன்**



திசை அறியாத இசை

முன்னாளில் பிரபல கிரிக்கெட் ஆட்டக்காரராக விளங்கி விக்கெட்டைக் காத்த திரு எம். ஓ. ஸ்ரீநிவாஸன், இன்று இளம் சிறார்களிடையே இறையுணர்ச்சியைக் காக்கிறார்.

இறைவனை வழிபடுவதற்கு எத்தனையோ வழிகள். இசைபாடி இறைவனை மகிழ்வித்து அவனது அருளைப் பெறுவது ஒரு மார்க்கம். தியாகையர், கபீர்தாஸ், மீரா, புரந்தரதாசர், ஆண்டாள், அருணகிரிநாதர் போன்ற மகான்கள் கடைப்பிடித்து அருள் பெற்ற வழி, சிறார்களின் உள்ளத்தைப் பண்படுத்தும் சீரிய வழி. ''எந்தத் திசையிலிருந்து வந்த எந்த மொழிப் பாடலாயினும் சரி, அர்த்தத்தைப் புரிந்து கொண்டு பக்தியுடன் பாட வேண்டியது முக்கியம். அதைத்தான் நான் குழந்தைகளுக்கு உணர்த்த முற்படுகிறேன்'' என்றார் எம். ஓ. ஸ்ரீநிவாசன்.

பக்தி உள்ளம் கொண்ட சிறுவர் சிறுமியர்கள் பலரை ஒன்று திரட்டி, அவர்களுக்குத் தமிழ், தெலுங்கு, கன்னடம், ஹிந்தி முதலிய பல்வேறு மொழிகளிலுள்ள பக்திப் பாடல்களைப் பயிலுவித்து, 'பக்தி இசை வட்டம்' **(Devotional Music Circle)** நிறுவி நற்பணியாற்றி வருகிறார் அவர். ஆகஸ்ட் 12-ந் தேதி சென்னை ராஜா அண்ணாமலைபுரத்தில் உள்ள சிருங்கேரி மடத்தில் சிறார்களின் பக்தி இசை சுருதியும் லயமும் பிறழாத பெரு வெள்ளமாகப் பெருகி ஏராளமான மக்களை மகிழ்வித்தது.

'சுக்லாம்பரதர'த்துடன் தொடங்கிய சிறார் இசைக்கு வயலின் வித்துவான் திரு சந்திரசேகரன் பக்கவாத்தியம் வாசித்துப் பெருமையளித்தார். செல்வியர் பிரபா, ஜயந்தி முதலிய சிறுமிகள் புரந்தரதாஸருக்கும் மீராவுக்கும் அவர்களது பாடல்களின் மூலம் அழகாக அஞ்சலி செலுத்தினர். வாத்திய கோஷ்டியுடன் சிறுவர் சிறுமியர் பாடிய 'அருள் புரிவாய் கருணைக் கடலே' என்ற ஹம்ஸத்வனி ராகக் கீர்த்தனை வெகு கச்சிதமாக அமைந்திருந்தது. மூன்றாம் வகுப்பில் படிக்கும் பிரகாஷ், ஏழாம் வகுப்பு மாணவன் பிரசாத் இருவரும் மிருதங்கத்தில் வாசித்த தனி ஆவர்த்தனத்தைச் சபையினர் ரசித்து உற்சாகமூட்டினர். மிருதங்கம் வாசிக்கும் இவ்விரு சிறுவர்களும், பாட்டிலும் நல்ல தேர்ச்சியுள்ளவர்கள். சிறுவன் ரமேஷ் மிருதங்கமும், குமாரி வித்யா குமாரி பிரேமா இருவரும் வீணையும், திரு சந்திரசேகரன் வயலினும் வாசிக்க, பிரகாஷும் பிரசாதும் சிறந்த ரசிகர்கள் எதிரில் அமர்ந்திருப்பது குறித்துச் சிறிதும் பயப்படாமல் அற்புதமாகப் பாடினர். இந்த வாத்திய கோஷ்டிப் பின்னணியுடன் பாடுவதற்கு அவர்கள் நவரச கன்னட ராகத்தைத் தேர்ந்தெடுத்தது நல்ல பொருத்தம்.

இந்த இசைக் குழுவினை நிர்வகித்து இயக்கும் இந்தியக் கிரிக்கெட் கோஷ்டியின் முன்னாள் 'விக்கெட் கீப்பர்' திரு எம். ஓ. ஸ்ரீநிவாஸனிடம் கிரிக்கெட்டைப் பற்றி நான் நினைவூட்டியதும், ''இது சுருதி சுத்தமாயிருக்கிறது — கிரிக்கெட்டை விட!'' என்றார் சிரித்துக் கொண்டே. பிஞ்சு உள்ளங்களில் இசை மூலம் பக்திக்கு விதை ஊன்றி வருகிறார். அது தழைத்து வளரப் பெற்றோரும் மற்றோரும் இயன்ற உதவியைச் செய்ய வேண்டுமென்பதே அவரது அவா. —**'பாணன்'**





மறுபடியும் குறிஞ்சி மலர்

தமிழ் இலக்கியத்தில் நீண்ட காலமாக மலர்ந்து நிரந்தரமாக மணம் பரப்பிக்கொண்டிருக்கும் "குறிஞ்சிப்பூ" 1957—58ம் ஆண்டு மலர்ந்ததை யொட்டி என்னுடைய "குறிஞ்சி மலர்" என்னும் சமூக நாவல் பிறந்தது. தமிழ் வாசகர்களிடையே பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை ஆறாயிரம் அடி உயரத்துக்கு மேற்பட்ட மலைகளில் பூக்கும் இந்த மலரைப் பற்றிப் பிரபலமாக அறிவதற்குத் துணை செய்த நவீன இலக்கியம் மணிவண்ணன் என்னும் புனைபெயரில் நான் படைத்த குறிஞ்சிமலர்தான் என்பதில் எனக்குப் பெருமை உண்டு. இப்போது இந்த மாதம் 11-ந் தேதி அன்று பகல் ஒரு மணிக்கு மேல் இந்த மலர் கொத்துக் கொத்தாகப் பூத்திருக்கும் காட்சியைக் காண்பதற்காகக் கோடைக்கானல் மலைச் சரிவுகளிலும், சிகரங்களிலும் மனம் போன போக்கில் சுற்றினேன். நீண்ட அலைச்சலுக்குப்பின் வெற்றி கிட்டியது.

அதற்கு முதல் நாள் பகல் மதுரைக்குத் தெற்கே ஸ்ரீவில்லிபுத்தூர் என்ற ஊரில் ஒரு லைப்ரரியின் இலக்கிய விழாவில் பேசிவிட்டு மதுரைக்குத் திரும்பிய நான் ரேடியோவின் இரவுச் செய்தி அறிக்கையில் "கோடைக்கானல் மலைச் சரிவுகளில் குறிஞ்சி மலர்ந்து மணம் பரப்பும்" செய்தியைக் கேட்டேன். அப்போதே உடனடியாகக் கோடைக்கானல் சென்று பார்க்க வேண்டும்போல் சபலம் தட்டியது. மறுநாள் காலை விடிந்தால் "இந்து"ப் பத்திரிகையிலும் அதே செய்தி வெளியாகி யிருந்தது. ஆசையை அடக்க முடியாமல் சென்னைக்கு வாங்கியிருந்த ரயில் டிக்கட்டை "கான்ஸல்" செய்துவிட்டுக் காலையிலேயே கோடைக்கானல் புறப்பட்டேன்.

வத்தலக்குண்டு போகிறவரை பஸ்ஸில் என்னோடு கோடைக்கானலுக்குப் பயணம் செய்தவர்களில் யாருமே குறிஞ்சி பூத்திருப்பதைப் பற்றி பரஸ்பரம் வியந்து பேசிக் கொள்ளாமலும், விசாரித்துக் கொள்ளாமலும், ஜனாதிபதி தேர்தலைப் பற்றியே பேசிக் கொண்டு வந்தார்கள். பண்ணைக்காடு என்ற ஊர் வழியே கோடைக்கானல் செல்லும் பஸ் அது. பண்ணைக்காடு ஊரில் இப்போது தண்ணீர்ப் பஞ்சம் போலிருக்கிறது. சாலையில் சாரி சாரியாகப் பெண்கள் குடங்களும் வாளிகளும் சுமந்து எதிர்ப்பட்டார்கள். தேன் பிலிற்றும் தெய்வீகக் குறிஞ்சி பூக்கிற ஊருக்குப் பக்கத்து மலை ஊரில் தண்ணீர்ப் பஞ்சம் என்று நம்பவே முடியாமல் இருந்தது. பண்ணைக்காட்டில் பஸ் பத்து நிமிஷம் நின்று புறப்பட்டபோது எனக்குப் பின் ஸீட்டில் ஒரு நடுத்தர வயது ஸ்லாக் ஷர்ட் ஆசாமியும், ஓர் இளைஞனும் ஏறினார்கள். அவர்கள்தான் நான் சந்தித்தவர்களில் முதன் முதலாகக் குறிஞ்சி பூத்திருப்பதைப் பற்றிப் பேசியவர்கள். முதலில் ஸ்லாக் ஷர்ட்காரர் பேசினார்:

"குறிஞ்சி பூத்திருக்குன்னு நேத்து ராத்திரி ரேடியோவிலே சொன்னாங்க... பத்து வருஷத்துக்கு முந்தி கல்கி பொஸ்தகத்திலே "குறிஞ்சி மலர்"னு ஒருத்தர் தொடர்கதை எழுதினாரு. பிரமாதமா இருந்திச்சு. அதிலேருந்தே அந்தப் பூ பூக்கிறதைப் பார்க்கணும்னு எனக்குக் கொள்ளை ஆசை. இப்ப அதுக்காகத்தான் கோடைக்கானல் போய்க் கொண்டிருக்கிறேன்."

குறிஞ்சி மலர்ந்திருப்பதைப் பற்றியும், என் கதாபாத்திரங்களான அரவிந்தன் பூரணி இருவரும் இப்படிக் குறிஞ்சி பூத்திருந்த காலம் ஒன்றில் குறிஞ்சி ஆண்டவர் கோயிலில் சந்தித்தது பற்றியும் அந்த ஸ்லாக் ஷர்ட்காரர் மூஞ்சிக்கல் (கோடைக்கானல் ஊர் முகப்பு) வருகிறவரை பக்கத்து இளைஞரிடம் பேசிக் கொண்டே வந்தார். இப்படி எதிர்பாராத இடத்தில் தன் பெருமையைப் பேசக் கேட்பதைவிட ஓர் இலக்கியப் படைப்பாளிக்கு மகிழ்ச்சி தரக்கூடிய விஷயம் வேறென்ன இருக்கப் போகிறது?

பஸ் நின்றதும் மூஞ்சிக்கல்லில் அவர்கள் இறங்கி விட்டார்கள். நான் போஸ்டாபீஸ்

இடது பக்கம் :

○ தேன் பிலிற்றும் நெல்லிக் குறிஞ்சி மலர்கள்.





இந்தப் பக்கத்தில் :

○ குறிஞ்சிப் பூக்களுடன் கூடிய கிளையைக் கையில் பிடித்து நிற்கிறார் 'மணிவண்ணன்.'

○ அதலபாதாளச் சரிவில் குறிஞ்சிப்பூ பூத்திருக்குமிடம்.

நா. பார்த்தசாரதி

அருகே ஊருக்குள் போய் இறங்கினேன். பையன்களும், வழிகாட்டிகளும், ஏதேதோ லாட்ஜுகளின் பெயர்களைச் சொல்லிக் கையைப் பிடித்து இழுக்காத குறையாகக் கெஞ்சினார்கள். உடனே அவர்களிடம் ஆர்வத்தோடு, "குறிஞ்சிப் பூ பூத்திருக்குதாமே, எங்கே?" என்று ஒரு கேள்வி கேட்டேன். வழிகாட்டிகளும், பையன்களும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டு விழித்தார்கள். தங்களுக்குப் புரியாத எதையோ நான் கேட்டுவிட்ட பாவனை அவர்கள் முகங்களில் நிலவியது. முந்திய முறை பூத்திருந்த இடங்கள் எனக்கு நன்றாகத் தெரியும். ஆனால் அந்த இடங்கள் எல்லாம் இப்போது உருளைக் கிழங்கு வயல்களாகவும், காய்கறிப் பாத்திகளாகவும் பேரிக்காய்த் தோட்டங்களாகவும் மாறியிருந்தன. எனவே அவர்களைக் கேட்க நேர்ந்தது. அவர்கள் பதில் சொல்வதற்குத் தயங்கிக் கலைந்து போனார்கள். உடனே எதிரே தென்பட்ட ஒரு ஜவுளிக் கடை வாசலில், "இங்கு கலர், பிளாக் அண்ட் ஒயிட் பிலிம்கள் விற்கப்படும்" என்ற விளம்பரம் பார்த்து நுழைந்தேன். அங்கு ஒரு சிந்தி இளைஞர் வரவேற்றார். குறிஞ்சி பூத்திருப்பதைப் பற்றி விசாரித்தேன். சிறிது தயங்கி, என் முகத்தை ஏறிட்டுப் பார்த்துவிட்டு 'யூ மீன் ஸ்டோரோபிலாந்தஸ் குந்தியானஸ்' (Strofilanthus - Kunthianus) என்று குறிஞ்சிப் பூவின் பொடானிகல் பெயரைக் குறிப்பிட்டார்.

நான் "ஆம்" என்று தலையை ஆட்டியதும், "நாட் நௌ. கம் ஆஃப்டர் த்ரீ வீக்ஸ். யூ கேன் ஸீ த ஹோல் மவுண்டன் வித் ஃப்ளவர்ஸ்" என்றார் அவர். ஏமாற்றத்தோடு யாராவது விவரம் தெரிந்தவர்களிடம் கேட்கலாமென்று புறப்பட்டேன். குறிஞ்சி பூக்கும் ஊரிலேயே அதைப் பற்றி சுவாரஸ்யம் இல்லாததை என்னால் பொறுத்துக் கொள்ள முடியாமல் இருந்தது. ஆனால் சலிப்படைந்து விடவில்லை. பெட்டியை ஒரு லாட்ஜில் போட்டு விட்டு, குறிஞ்சிப் பூவும், செடியும் எனக்கே தெரியும் ஆகையால் நானே ஒவ்வோர் இடமாகத் தேடிப் புறப்பட்டேன்.

கொய்யா ஓடை, கோக்கர்ஸ்வாக் சரிவுகள், குறிஞ்சியாண்டவர் கோவில் சுற்றுப்புறம், ஃபேரி ஃபால்ஸ் அருவிப்புறம், பில்லர் ராக்ஸ் போகிற பாதை என்று அலையத் தொடங்கினேன். ஓரளவு வெற்றியும் கிடைத்தது.

முதலில் குறிஞ்சியாண்டவர் கோவிலருகே மலைச் சரிவில் அந்தப் பூக்கள் பூத்திருக்கும் இடத்தைக் காட்டுவதாக ஒரு மாடு மேய்க்கும் பையன் என்னைக் கூட்டிக் கொண்டு போனான். அதலபாதாளச் சரிவில் அவனைத் தொடர்ந்தேன். அவன் மிக வேகமாகத் தாவித் தாவி இறங்கினான். என்னால் அவ்வளவு வேகமாக இறங்க முடியவில்லை. கால்கள் விலாத்தின. நடை தள்ளாடியது. நான் முற்றிலும் சோர்ந்துவிட்ட சமயத்தில் பையன் எனக்கு ஐம்பதடி பள்ளத்தில் நின்று கொண்டு கைதட்டிக் கூப்பிட்டான். அவன் கைதட்டினானோ இல்லையோ வானத்தில் படையெடுத்தாற் போல் பெரிய பெரிய தேனீக்கள் அந்த இடத்துச் செடிகளிலிருந்து மேலெழுந்து பறந்தன. ஈக்கள் கொட்டுமோ என்று பயமாக இருந்தது. நான் பயந்ததற்கு ஏற்றாற்போல் பையனும், "அப்படியே சத்தம் போடாமல் புதரில் கீழே உட்காருங்கள்" என்று இரைந்து சொன்னான். நான் கீழே உட்கார்ந்தபடி,

மௌனமா யிருந்தேன். பத்து நிமிஷம் கழித்துத் தேனீக்கள் அடங்கியதும் இறங்கி அவன் இருந்த இடத்துக்குப் போனேன். அடடா! கண்கொள்ளாக் காட்சி. இரண்டரை அடி முதல் மூன்றரை அடி உயரமுள்ள ஏராளமான குறிஞ்சிச் செடிகள் அடர்த்தியாயிருந்தன. சில செடிகளே வெண் நீல நிறத்திலும், வயலெட் நிறத்திலும் கனகாம்பரம் போன்ற அமைப்புடன் அடுக்கடுக்காகப் பூத்திருந்தன. ''கருங்கோற் குறிஞ்சி'' என்று சங்க இலக்கியத்தில் வரும் வருணனைக்கு ஏற்பப் பூ அடுக்கின் கீழே காம்பு இரண்டு கரிதாயிருப்பதையும் இலை சொர சொரப்பாக இருப்பதையும் ஒப்பு நோக்கிப் பார்த்தேன்.

குறிஞ்சித் திணை என்பது தமிழ் இலக்கிய வழக்குப்படி காதலர்கள் சந்தித்து ஒன்று சேருமிடமாகும். குறிஞ்சி மலர் காதலர் சந்திப்பின் அடையாளமாகக் கருதப்பட்டது. 'குறிஞ்சிப் பண்' என்று ஒரு பழைய ராகமும் உண்டு. இது தமிழிசைப் பிரிவு. பத்துப் பாட்டு என்ற சங்க இலக்கியத்தில் கபிலர் பாடிய குறிஞ்சிப் பாட்டு என்ற 261 வரிப் பாடல் எட்டாவதாக இலங்குகிறது. 'நீலுண் குறிஞ்சி' என்ற அடைமொழியால் இது சங்க நூல்களில் குறிக்கப்படுகிறது. 'நீல நிறத்தைப் பெற்ற குறிஞ்சி' என்று இதன் நிறம் இத் தொடரில் சிறப்பிக்கப்படுகிறது. கருநீல (வயலட்) நிறமும் உண்டு.

''நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று
நீரினும் ஆரள வின்றே சாரல்
கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு
பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே''
(குறுந்தொகை-4)

என்ற குறுந்தொகைப் பாடலில் குறிஞ்சிப்பூ வெகுவாகப் புகழ்ந்துரைக்கப் படுகிறது. குறிஞ்சிப் பூக்கள் நிறையத் தேன் சத்து உள்ளவை என்பதும் இந்தக் குறுந்தொகைப் பாடலிலிருந்து தெரிகிறது. சங்க இலக்கியங்களில் இணையற்ற நயமுள்ள பாடல் இது.

'' ஒலியல்வார் மயிர் உளரினள் கொடிச்சி
பெருவரை மருங்கில் குறிஞ்சி பாட''
(அகநானூறு-102)

என்று குறிஞ்சிப் பண் அகநானூற்றில் கூறப்படுகிறது.

''பெருங்களிற்று ஒருத்தலின் பெயர்குவை
கருங்கோற் குறிஞ்சி நும்உறைவின் ஊர்க்கே''
(அகம்-308)

என்று அகநானூற்றில் ஒரு குறிஞ்சிப்பூப் பூத்த ஊர் பற்றி அகப் பொருள் திணையொடு இணைந்து வருணிக்கப்படுகிறது. ஆய் அண்டிரன் என்ற வள்ளலை ஏணிச் சேரி முடமோசியார் பாடிய பாடலிலும்,

''கருங்கோற் குறிஞ்சி அடுக்கம் பாடப்
புலிப்பல் தாலிப் புன்றலைச் சிறாஅர்''
(புறநானூறு-374)

என்று குறிஞ்சிப் பூவைப் பற்றிக் கூறுகிறது. காதலர்க்கு ஏற்படும் அலர் என்னும் சிறுபழி பற்றிக் கூறுகின்ற குறிஞ்சித் திணைக்குரிய நற்றிணைப் பாடலில்,

''ஏ கல் அடுக்கத்து இருள்முகை இருந்த
குறிஞ்சி நல் ஊர்ப் பெண்டிர்
இன்னும் ஓவார் என்திறத்து அலரே''

என்று கூறப்படுகிறது. (நற்றிணை-116)

''மால் பெயல் தலைஇய மன்நெடுங் குன்றத்து
கருங்கால் குறிஞ்சி மதன்இல் வான்பூ''
(நற்றிணை-268)

என்ற பாடலில் 'மதன் இல் வான்பூ' (மதனில் - வலிமையற்ற) என்று கூறியதன் மூலம் குறிஞ்சிப் பூ மிக மிக மென்மையானது என்பதும் அறிவிக்கப்படுகிறது. உண்மையில் இந்த வர்ணனைக்கேற்பவே குறிஞ்சிப் பூவும் இருக்கிறது என்பதும் கவனிக்கத்தக்கது.

''நீள்மலைக் கலித்த பெருங்கோற் குறிஞ்சி
நாள்மலர் புரையும் மேனி''
(நற்றிணை-301)

என்ற பாட்டில் 'கலித்த' (செழிப்பாக அடர்ந்த) என்று அடைமொழி கூறுவதனால் மலை முழுவதும் அடர்ந்து பூக்கும் இயல்புடையது குறிஞ்சிப் பூ என்பதும் நமக்குத் தெரிகிறது. ஐம்பெருங் காப்பியங்களில் ஒன்றாகிய சிலப்பதிகாரம் — மதுரைக் காண்டம் ஊர் காண் காதையில் குறிஞ்சி மலரைப் பற்றிக் கூறப்படுகிறது.

''சிறுமலைச் சிலம்பின் செங்கூதாளமொடு
நறுமலர்க் குறிஞ்சி நாண்மலர் வேய்ந்து''
(சிலப்-மதுரை-ஊர்காண்-88-89)

இப்பாடலால் குறிஞ்சியின் நறுமணமும் எப்போதும் புதிதாயிருக்கிற நாள்மலர்த் தன்மையும் அறியப்படுகின்றன. இப்போது கோடைக்கானலில் நான் பார்த்த பூக்களுக்குச் சிலப்பதிகாரத்தில் கூறப்பட்டதுபோன்ற அவ்வளவு நறுமணம் இல்லை என்றாலும், கூர்ந்து மோந்து பார்த்ததில் உள்ளடங்கிய ஒருவித மணமும் அந்தப் பூக்களுக்கு இருந்தன. உதகையில் பார்த்த குறிஞ்சிக்கும் இதற்கும் சிறிது வித்தியாசம் இருந்தது. கோடைக்கானலிலேயே சென்ற 1957—58ல் பார்த்த செழிப்பான குறிஞ்சிக் காட்சியை இப்போது பார்க்க இயலவில்லை. எனக்குச் செடிகளைக் காண்பித்த மாட்டுக்காரப் பையனிடம் திரும்பும்போது ஒரு ரூபாய் இனாம் கொடுத்தேன். அவன் வாங்கிக் கொள்ள மறுத்துவிட்டு, ''ஒரு தீப்பெட்டி இருந்தால் கொடுங்க, போதும்'' என்றான். என்னிடம் ஒரு தீப்பெட்டி இல்லாததால் அவன் ஆசையைப் பூர்த்தி செய்ய முடியவில்லை.

''ரூபாயை வாங்கிக்கொள். ஒரு ரூபாய்க்குப் பத்து தீப்பெட்டி வாங்கலாம்'' என்றேன். அவன் சிரித்துக் கொண்டே, ''பணம் வேண்டாங்க'' என்று மறுபடியும் மறுத்து விட்டான். குறிஞ்சி பூக்கிற மலை உச்சியில் பணத்தை மதிக்காத ஒரு சிறுவனைப் பார்த்தது குறிஞ்சி பூத்திருப்பதை விட அதிசயமான காரியமாகத் தோன்றியது எனக்கு. குறிஞ்சி ஆண்டவரையும் தரிசித்துவிட்டுத் திரும்பினேன். குறிஞ்சியைக் ''குறிஞ்சாம்பூ'', ''குறிஞ்சா'' என்றே கோடைக்கானல் மக்கள் கூறுகின்றனர். ''கட்டைக் குறிஞ்சி'' என்றும் ஒருவகை கூறப்படுகிறது.

திரும்பும்போது ஆனந்தகிரியிலுள்ள ஒரு சிநேகிதர், ''கோக்கர்ஸ்வாக் சரிவில் குறிஞ்சியாண்டவர் மலைச் சரிவைக் காட்டிலும் அதிகமாகப் பூத்திருக்கிறது'' என்ற தகவலைத் தெரிவிக்கவே, படம் எடுக்க முடியாதபடி மேகமோ மஞ்சோ மூடுவதற்குள் அங்கு போய் வர முடிவு செய்து விரைந்தேன்.


கோக்கர்ஸ்வாக் சரிவு குறிஞ்சியாண்டவர் கோவில் சரிவை விடப் பயங்கரமானது. உருண்டால் அப்படியே ஆறாயிரம் அடிப் பள்ளத்தில் உருண்டு கொண்டே பெரியகுளம் வரை போய்விடலாம். மத்தியானத்துக்கு மேலே குளிர் வேறு காது வெட வெடக்கிற அளவுக்கு அதிகமாகி விட்டது. நான் ''கோக்கர்ஸ்வாக்'' போய்ச் சேரும்போது மழை வேறு தூறத் தொடங்கியிருந்தது. கீழே பள்ளம் தெரியாதபடி மஞ்சு மூடிக் கொண்டு வந்தது. எனினும் புதராக அடர்ந்திருந்த சரிவில் செடிகளைப் பற்றிக் கொண்டு துணிந்து இறங்கினேன். நூறு அடி கீழே இறங்கியதும் கண்கொள்ளாக் காட்சி மேகங்களிடையே மங்கலாகத் தெரிந்தது. அவ்வளவும் குறிஞ்சிச் செடிகள். வெண்ணீல நிறப் பூக்கள் மேலே மழை பெய்த நீர் முத்துக்களோடு அங்கங்கே நிறையத் தென்பட்டன. நீண்ட நேரம் பார்த்துக் கொண்டே நின்றேன். யாரையாவது கூப்பிட்டு வந்து படம் எடுக்க ஆசையாயிருந்தது. படம் எடுக்க ஏற்பாட்டுடன் வரும்போது இடம் அடையாளம் தெரியாது போய்விடக் கூடாதே என்று எனக்கு ஒரு தயக்கம் ஏற்பட்டது. உடனே ஒரு உயரமான குச்சியை ஒடித்து என் வெள்ளைக் கைக்குட்டையை அதில் கட்டி ஈர மண்ணில் ஊன்றி நட்டேன். அந்தப் பச்சைப் பரப்பில் அந்தக் கைக்குட்டை எங்கிருந்து பார்த்தாலும் தெரிய முடியும் என்று முடிவு செய்து கொண்ட பின் திரும்பினேன்.

கோடைக்கானல் ஊருக்குள் வந்து போட்டோகிராபருக்காக அலைந்தபோது ஜேம்ஸ் என்ற புகைப்படக்காரர் கிடைத்தார். அவர் மறுநாள் காலையில் வெயில் வந்ததும்தான் போக முடியும் என்று கூறினார்.

''உங்களுக்கு அவசரமானால் கிளைகளோடு நிறையப் பூக்களை ஒடித்து வாருங்கள். இங்கேயே ஸ்டுடியோவில் ''லைட்''களைப் போட்டுப் படம் எடுத்துத் தருகிறேன்'' என்று மாற்று யோசனையையும் அவரே கூறினார். ''செண்டிமெண்டல்'' பேர்வழியான எனக்குக் கஷ்டப்பட்டுக் கண்டுபிடித்த பூக்களைச் செடிகளிலிருந்து ஒடிக்க விருப்பமில்லை. அதற்காக இன்னும் ஒரு நாள் தங்க முடிவு செய்தேன். புகைப்படக்காரரிடம் மறுநாள் காலை வருவதாகக் கூறிவிட்டு லாட்ஜுக்குத் திரும்பினேன். கால்களும் தொடைகளும் ரத்தம் கட்டிக் கொண்டு விண் விண்ணென்று வலித்தன. வெந்நீரில் குளித்து விட்டு அயர்ந்து தூங்கிப் போனேன். எழுந்திருக்கும் போது ஒன்பது மணிக்கு மேல் ஆகிவிட்டது. தற்செயலாக லாட்ஜ் பெயரைப் புகைப்படக்காரரிடம் சொல்லியிருந்ததனால் அவரே என்னைத் தேடிக் கொண்டு வந்திருந்தார். வெயிலும் இருந்தது. இருவரும் காப்பி குடித்து விட்டுக் ''கோக்கர்ஸ்வாக்'' சென்றோம். ''வெள்ளைச் சமாதானக் கொடி பறக்கவிட்டு விட்டு வந்த இடம் அந்த மலைநிலப்' பசுமையில் கீழே துல்லியமாகத் தெரிந்தது. என்னுடன் வந்த புகைப்படக்காரர் வயதானவர். ஒரு காலை நன்றாக ஊன்றி நடக்க முடியாது அவருக்கு. எனினும் என் ஆர்வத்தை மதித்து அவர் என்னோடு சிரமப்பட்டுக் கீழே சரிவில் இறங்கி வந்தார். காலையில் பார்த்தபோது முதல் நாளை விட அங்கே அதிகமாகக் குறிஞ்சிச் செடிகள் பூத்திருந்தன. பத்து ஆண்டுகளுக்கு முன்பாகக் கல்கியில் ''குறிஞ்சிமலர்'' என்ற சமூக நாவலை எழுதியபோது அடைந்ததைவிட அதிகமான மகிழ்ச்சியை அன்று காலையில் பன்னிரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு அந்தப் பூக்களின் காட்சியைப் பார்த்த போது நான் அடைந்தேன். காமிராவிலேயுள்ள பிலிம் சுருள்கள் தீரும் மட்டும் படங்களை எடுத்துக் கொண்டு திரும்பினோம். உலகத்தையே வென்றுவிட்ட மகிழ்ச்சி எனக்கு ஏற்பட்டிருந்தது. என் ஒரே வருத்தம் நான் விரும்பியதற்கு மாறாகக் கைகளிலும் சில குறிஞ்சிக் கிளைகளை ஒடித்துக் கொடுத்துப் புகைப்படக்காரர் படமெடுத்ததுதான்.

பல்லாயிரம் காலமாகத் தமிழ் இலக்கியம் போற்றிய ஒரு மலர் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை மலரும் மலர் — என்னுடைய சமூக நாவலால் மீண்டும் கல்கியில் பூத்து லட்சக்கணக்கான வாசகர்களை மகிழ்வித்தது. பஸ்ஸில் நான் சந்தித்த ''ஸ்வாக் ஷர்ட்கார''ரைப் போல் கல்கியில் குறிஞ்சி மலரைப் படித்த வாசகர்கள் பலர் இந்தக் காட்சியைக் காண்பதற்குப் போகலாம். அப்படி விரும்பும் ஒவ்வொருவருக்கும் அந்தப் பாக்கியம் கிட்ட வேண்டும் என்ற மன நிறைவோடுதான் இந்தக் கட்டுரையை இங்கே எழுதுகிறேன். இன்னும் ஆறேழு மாதம் வரை அந்தப் பாக்கியம் நிச்சயம் உண்டு.

அயல் நாடு செல்லும் அ. சீ. ரா.



சிறந்த கவிஞரெனப் பாராட்டப் பெற்று அண்மையில் சாகித்திய அகாதமியின் விருது பெற்ற பேராசிரியர் அ. சீநிவாசராகவன் அவர்கள் மணிலாவில் (பிலிப்பைன்ஸ்) இம்மாதம் 25ந் தேதி முதல் 31ம் தேதிவரை நடைபெற இருக்கும் அனைத்துலக கவிஞர்கள் மகாநாட்டில் கலந்துகொள்ள இருக்கிறார்கள். அவர்கள் பாரதக் கவிஞர் குழுவில் செல்லும் மூவரில் ஒருவர். பேராசிரியர் அ. சீ. ரா. அவர்கள் சென்னையிலிருந்து இம்மாதம் 22ந் தேதி விமானம் மூலம் புறப்படுகிறார். அவர் கவி உலகில் பாரத நாட்டின் புகழை மேலும் ஓங்கச் செய்வார் என்பதில் ஐயம் இல்லை. பேராசிரியரின் பயணம் வெற்றிகரமாக அமையத் தமிழ் கூறும் நல்லுலகம் அவரை வாழ்த்தி வழியனுப்புகிறது.



அரவிந்த் அளிக்கும்
பருத்தித்துணிகளின்
அற்புத உலகம்
INTERPUB-A-4 TAM
Arvind
Arvind Mills Ltd.
LALBHAI GROUP
எமது வேஷ்டிகள் உன்னதமான பருத்
இழைகளில் செய்யப்பட்டன
மென்மையானவை, சீரானவை, நீடித்
உழைப்பவை. ப்ளாட்டினம், ராஜா ஸ்பெஷ
ஆகியவற்றிலிருந்
தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்க
அரவிந்த் மில்ஸ் லி
ரெயில்வே புரா போஸ்
நரோடா ரோடு, அகமதாபாத்





இப்படியும் ஓர் உருவ ஒற்றுமையா என்று அதிசயத் தவர்கள் பலபேர்!

அண்ணா அல்ல, தம்பிகளுள் ஒருவர்!

சென்னை குயப்பேட்டையில் இருக்கும் திரு பழனி, ஞாபகத்திலிருந்தே போட்டோவின் உதவி இல்லாமல் திரு அண்ணாதுரையின் சிலை ஒன்றைச் செய்தார். சந்தேகம் ஏற்படும்போது தம் முகத்தையே ஒரு தடவை கண்ணாடியில் பார்த்துக் கொண்டார்!

சத்யா ஸ்டுடியோவில் 'மோல்ட'ராகப் பணியாற்றிய திரு பழனி, அமைப்பில் அண்ணாவைப் போலவே இருக்கிறார் என்பது அவர் நண்பர்களுக்கு ரொம்ப நாட்களாகத் தெரிந்தது என்றாலும் இந்த ஜனவரி கடைசியிலிருந்துதான் இவருக்குப் பலவித அநுபவங்கள் ஏற்பட ஆரம்பித்தன.

ஜனவரி 28ந் தேதி அன்று அண்ணா உடல் நிலை ரொம்பவும் மோசமான சமயம். திரு பழனி எப்பொழுதும் போல் ஸ்டுடியோ வேலையை முடித்துக் கொண்டு வாசலில் நின்று கொண்டிருந்தார். அவரைத் தாண்டிச் சைக்கிளில் சென்ற ஓர் இளைஞன் கொஞ்ச தூரம் சென்று திரும்பிப் பார்த்தான். சைக்கிளை அப்படியே எறிந்துவிட்டு வந்து இவரைக் கட்டிக் கொண்டு, "அண்ணா, அண்ணா!" என்று அழுது அரற்ற ஆரம்பித்து விட்டான். 'இவர் அண்ணா இல்லை' என்று சொல்லி இளைஞனை அழைத்துப் போன போலீஸ்காரர்களுக்குக்கூட இவரது தோற்றம் ஆச்சரியமளிக்கத்தான் செய்தது.

பிறகு ஒரு நாள் இவர் இ. எஸ். ஐ. ஆஸ்பத்திரிக்குச் சென்ற போது டாக்டர்களையும், நோயாளிகளையும் திடுக்கிட வைத்தார், தமது தோற்றம் காரணமாக.


"இந்த ஆஸ்பத்திரிக்கு எதற்கு முதல்வர் வருகிறார்?" என்று வியந்த நோயாளி ஒருவர் மிக அருகில் வந்து இவரை உற்றுப் பார்த்து விட்டுப் போனார்!

அண்ணாதுரை இறந்த பிறகு ஒரு நாள், எம். பி. திரு ராசாராம், காரிலிருந்தபடியே இவரைக் கூப்பிட்டார். அருகில் சென்று





அசலும் நகலும்!



சென்னை மாநில அட்வகேட் ஜெனரலாக நியமிக்கப்பட்டுப் பதவி ஏற்றுள்ள திரு கோவிந்த சுவாமிநாதன் வழக்கறிஞர் பரம்பரையில் வந்தவர். பாரிஸ்டர் சுவாமிநாதனின் புதல்வர். பிரபல கிரிமினல் வழக்கறிஞர். பப்ளிக் பிராஸிக்யூடராகப் பணியாற்றி ஏற்கெனவே புகழடைந்தவர். அவருடைய சட்ட அறிவு உயர்தரமானது. அவருக்கும் பொருத்தமான பதவி. பதவிக்காலம் சிறக்க வாழ்த்துகிறோம்.

ஜன்னல் வழியே கும்பிட்ட இவரது முகம் அரை இருளில் திரு ராஜாராமை அயரச் செய்து விட்டது. "நீங்கள் அப்படியே அண்ணாவைப் போலவே இருக்கிறீர்களே! அமெரிக்காவில் நான் அவருடன் இருந்த நாட்கள் நினைவுக்கு வருகின்றன" என்றார்.

மறு நாள் வீட்டுக்கு இவரை வரவழைத்த திருமதி சத்தியவாணிமுத்து கொஞ்ச நேரம் பேசிக் கொண்டிருந்துவிட்டு நிற்கச் சொல்லியும் நடக்கச் சொல்லியும் பார்த்தாராம். திரு ஹக்கீம் என்ற நண்பர் ஒருவர் இவரைத் தம் வீட்டுக்கு அழைத்துச் சென்றார். அண்ணா அவர்கள் வீட்டுக்கு வந்திருந்தபோது அவருக்கு ஓவல் கொடுத்தார்களாம். "ஓவல் பிடிக்காது" என்ற போது, "அண்ணாவைப் போலவே இருக்கிறீர்கள். அதனால் நீங்கள் ஓவல்தான் சாப்பிட வேண்டும்" என்று சொன்னார்கள்.

இவருக்கு ஒரு பொதுக் கூட்டத்தில் பேசும்படியாகவும் ஆகிவிட்டது. பேசிப் பழக்கம் கிடையாது. ஆனாலும் தைரியமாக எழுந்து பேச ஆரம்பித்து விட்டார். "நான் உருவில் திரு அண்ணாதுரையைப் போல் இருந்தாலும் வேறு ஒன்றிலும் இல்லை. நான் அண்ணா ஆக முடியாது. அவர் கடல். நான் வெறும் குட்டை; அவர் சிந்தனைச் சிற்பி, நான் சாதாரண சிற்பி." — ஒருவாறு பேசி முடித்து விட்டார்.

பாண்டிச்சேரியைச் சேர்ந்த இவரது தந்தையும் ஒரு சிற்பிதான். இளைஞராக இருந்தபோது சிற்பங்கள் செய்ய பாரிஸுக்குப் போக வாய்ப்புக் கிடைத்தது. ஆனால் இவரது பாட்டி தடுத்து விட்டார். சீரணிப் படைக்கு 'மாடல்'கள் செய்து கொடுத்தார். அவற்றைத் திரு அண்ணாதுரை பார்வையிட்டு மகிழ்ந்தார். ஆனால் இவரை யாரும் அண்ணாவுக்கு அறிமுகப்படுத்தவில்லை. இது இவருக்கு ஒரு பெரிய குறை. அன்று முதல் அண்ணாதுரையின் உருவத்தைப் போல, புகைப் படங்களின் உதவிகூட இன்றி ஒரு சிலை செய்ய ஆரம்பித்தார். அது இப்பொழுது உடைந்து விட்டது!

"அண்ணா காலமானதால் ஏற்பட்ட ஏக்கம் தீராமல் இன்னமும் பலர் சோகத்துடன் இருக்கிறார்கள். நான் இரண்டொருவரை சென்று பார்த்தேன். என் உருவத்தைப் பார்த்துக் கொஞ்சம் ஆறுதல் அடைந்தார்கள்" என்றார்.

அண்ணாதுரையைவிட வயதில் கொஞ்சம் மூத்தவரானாலும் இவர் 'தம்பி'களுள் ஒருவரே. வெற்றிலை காவி படிந்த பற்கள் தெரியச் சிரிக்கும் போது யாரும் கொஞ்சம் அசந்துதான் போவார்கள். மறைந்த முதல்வர் சிரிப்பது போலவே தோன்றுகிறது. ■

இவருக்கு உள்ள மனக் குறைகள்: உடல் நிலை சரியாக இல்லாததால் அண்ணாதுரையின் சவ ஊர்வலத்தில் கலந்து கொள்ள முடியாமல் போனது ஒன்று. திரு அண்ணாதுரையைச் சந்தித்து மாடர்ன் ஆர்ட் எவ்வளவு தூரம் நமது புராதனக் கலையை அமுக்கி விடுகிறது என்பதை அவருக்கு எடுத்துக் கூறி, கலைக்கூடங்களில் புராதனக் கலைக்கு அதிக மதிப்புத் தர ஏற்பாடு செய்ய வேண்டிய அவசியத்தை வலியுறுத்த முடியாமல் போனது இரண்டு.

பொடிப் பழக்கம் இவருக்கும் உண்டு.

பேட்டி: "பாபு"

இரு பழநியின் புகைப்படங்கள்: டி. வி. அனந்தன்

நீர் மூழ்கி ரயில்!



நீர் மூழ்கிக் கப்பலைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறோம்; பார்த்திருக்கிறோம். ஆனால் நீர் மூழ்கி ரயிலைப் பற்றிக் கேள்விப்பட்டதுண்டா? இந்த அதிசய ரயில் பிரிட்டன் — பிரான்ஸ் நாடுகளிடையே கடலுக்கு அடியில் ஓடும் நீர் மூழ்கி ரயிலாக அறிமுகமாக விருக்கிறது.

கடலுக்கு அடியில் பெரிய குழாய்களை வரிசையாக வைத்து, அவற்றுள் ரயில் பாதையை அமைத்து பிரிட்டனையும் பிரான்சையும் ரயில் பாதை மூலம் இணைக்கும் இமாலய முயற்சியில் இரு நாட்டினரும் ஈடுபட்டுள்ளனர். ரயில் போகுமளவுக்குப் பெரிய அளவிலான குழாய்களைக் கடலுக்கு அடியில் இந்த நாட்டிலிருந்து அந்த நாடு வரை அமைக்கிறார்கள். காற்று—நீர் புகாவண்ணம் இவை இணைக்கப்படுகின்றன. இப்படி இணைந்த குழாய்ப் பாதைக்குள் ரயில் தண்டவாளங்களை அமைத்து, அதில் ரயில் வண்டிகளை ஓட்டுவதுதான் திட்டம்.

இரு நாடுகளுக்கும் இடையே இடைவெளி மிகவும் குறைவான பகுதியை இந்தக் குழாய்ப் பாதை போடத் தேர்ந்தெடுத்துள்ளனர். 35 மைல் இடைவெளி உள்ள இந்தப் பாதையில் 20 மைல் நீளத்திற்கான பாதை கடலுக்கு அடியில் அமையும். — பி. ஐ. எஸ்.



பொன்னியின் செல்வன்

அமரர் கல்கி

அத்தியாயம் நாற்பத்தாறு

பொங்கிய உள்ளம்

இளவரசர் யானையின் காதில் மந்திரம் ஓதினார். யானை படுத்தது. இருவரும் அவசரமாக அதன் முதுகிலிருந்து இறங்கினார்கள். கரை தட்டி மணலில் புதைந்திருந்த மரக்கலத்தின் அருகில் சென்று பார்த்தார்கள். அந்தக் கப்பலின் கதி பார்க்கப் பரிதாபமாயிருந்தது. பாய்மரங்கள் தாறுமாறாக உடைந்து கிடந்தன. ஒரு வேளை அந்த உடைந்த கப்பலுக்குள்ளேயோ அல்லது அக்கம்பக்கத்திலோ யாராவது இருக்கக் கூடும் என்று சந்தேகித்தார்கள். இளவரசர் கையைத் தட்டிச் சத்தம் செய்தார். பூங்குழலி வாயைக் குவித்துக் கொண்டு கூவிப் பார்த்தாள். ஒன்றுக்கும் பதில் இல்லை. இருவரும் தண்ணீரில் இறங்கிச் சென்று கப்பலின் விளிம்பைப் பிடித்துக் கொண்டு ஏறினார்கள். கப்பலின் அடிப் பலகைகள் பிளந்து தண்ணீரும் மணலும் ஏராளமாக உள்ளே வந்திருந்தன. ஒரு வேளை அதை நீரிலே தள்ளிவிட்டுக் கடலில் செலுத்தலாமோ என்ற ஆசை நிராசையாயிற்று. அந்தக் கப்பலை அங்கிருந்து தண்ணீரில் நகர்த்துவது இயலாத காரியம். கரையில் இழுத்துப் போடுவதற்கு ஒரு யானை போதாது; பல யானைகளும் பல ஆட்களும் வேண்டும். அதைச் செப்பனிடப் பல மாதங்கள் மரக்கலத்தச்சர்கள் வேலை செய்தாக வேண்டும்.

சிதைந்து கிடந்த பாய் மரங்களிடையே சிக்கியிருந்த புலிக் கொடியை இளவரசர் எடுத்துப் பார்த்தார். அது அவருக்கு மிக்க மனவேதனையை அளித்தது என்று நன்றாய்த் தெரிந்தது.

''பூங்குழலி! நீ பார்த்த கப்பல்களில் ஒன்றுதானா இது?'' என்று கேட்டார்.

'' அப்படித்தான் தோன்றுகிறது. இன்னொரு கப்பல் அடியோடு முழுகித் தொலைந்து போய் விட்டது போலிருக்கிறது!'' என்றாள் பூங்குழலி. அவளுடைய குரலில் குதூகலம் தொனித்தது.





"என்ன இவ்வளவு உற்சாகம்?" என்று இளவரசர் கேட்டார்.

"தங்களைச் சிறைப்படுத்திக் கொண்டு போவதற்கு வந்த கப்பல்கள் மூழ்கித் தொலைந்து போனால் எனக்கு உற்சாக மாக இராதா?" என்றாள் பூங்குழலி.

"நீ உற்சாகப்படுவது தவறு, சமுத்திர குமாரி! ஏதோ விபரீதமாக நடந்து போயிருக்கிறது. புலிக் கொடி தாங்கிய மரக்கலத்துக்கு இந்தக் கதி நேர்ந்தது எனக்கு வேதனை அளிக்கிறது. இது எப்படி நேர்ந்தது என்றும் தெரியவில்லை. இதில் இருந்த வீரர்களும் மாலுமிகளும் என்ன ஆனார்கள்? அதை நினைத்தால் என் மனம் மேலும் குழம்புகிறது. இன்னொரு கப்பல் மூழ்கிப் போய் இருக்க வேண்டும் என்று சொல்லுகிறாய்?"

"மூழ்கிப் போயிருக்கலாம் என்று சொல்லுகிறேன். மூழ்கிப் போயிருந்தால் ரொம்ப நல்லது."

"நல்லது இல்லவேயில்லை. அப்படி ஒரு நாளும் இராது. இந்தக் கப்பலின் கதியைப் பார்த்து விட்டு இன்னொரு கப்பல் அப்பால் நிறையத் தண்ணீர் உள்ள இடத்துக்குப் போயிருக்கலாம். இந்தக் கப்பல் ஏன் இவ்வளவு கரை அருகில் வந்திருக்க வேண்டும் என்றும் தெரியவில்லை. சோழ நாட்டு மாலுமிகள் ஆயிரமாயிரம் ஆண்டுகளாகக் கப்பல் விட்டுப் பழக்கமுள்ள பரம்பரையில் வந்தவர்கள். அவர்கள் இத்தகைய தவறு ஏன் செய்தார்கள்? எப்படியும் இதிலிருந்தவர்கள் தப்பிப் பிழைத்திருக்க வேண்டும். ஒன்று மற்றக் கப்பலில் ஏறிப் போயிருக்க வேண்டும். அல்லது அக்கம் பக்கத்தில் எங்கேயாவது இருக்க வேண்டும்! வா! போய்ப் பார்க்கலாம்!"

"எங்கே போய்ப் பார்ப்பது இளவரசே! சூரியன் அஸ்தமித்து நாலா புறமும் இருள் சூழ்ந்து வருகிறதே!" என்றாள் பூங்குழலி.

"சமுத்திர குமாரி! உன் படகை எங்கே விட்டு வந்தாய்?"

"என் படகு ஏறக்குறைய இந்த ஆற்றின் நடு மத்தியில் அல்லவா இருக்கிறது? யானை மீது வந்தபடியால், அதுவும் நீங்கள் யானையைச் செலுத்திய படியால், இவ்வளவு சீக்கிரம் வந்து விட்டோம். படகில் ஏறியிருந்தால்



நள்ளிரவுக்குத்தான் இங்கு வந்திருப்போம்.''

''சரி! நன்ருக இருட்டுவதற்குள் இந்த நதிக்கரையோரமாகப் போய்ப் பார்க்கலாம் வா! இங்குள்ள மரங்கள் கடல் நன்ருய்த் தெரியாமல் மறைக்கின்றன. ஒரு வேளை இன்னொரு கப்பலைக் கடலில் சற்றுத் தூரத்தில் கொண்டு போய் நிறுத்தி யிருக்கலாம் அல்லவா ?''

யானையை அங்கேயே விட்டு விட்டு இருவரும் நதிக்கரையோரமாகக் கடலை நோக்கிப் போனார்கள். சீக்கிரத்திலேயே கடற்கரை வந்து விட்டது. கடலில் அமைதி குடிகொண்டிருந்தது. அலை என்பதற்கு அறிகுறியும் இல்லை. கண்ணுக்கெட்டிய தூரம் ஒரே பச்சை வர்ணத் தகடாகத் தோன்றியது. கடலின் பச்சை நிறமும் வானத்தின் மங்கிய நீலநிறமும் வெகுதூரத்துக்கு அப்பால் ஒன்ருய்க் கலந்தன.

மரக்கலமோ, படகோ ஒன்றும் தென்பட வில்லை. ஒன்றிரண்டு பறவைகள் கடலிலிருந்து கரையை நோக்கிப் பறந்து வந்தன. அவ்வளவு தான் !

சிறிது நேரம் அங்கே நின்று நாலா புறமும் சுற்றிச் சுற்றிப் பார்த்து விட்டு, ''சரி! புதைந்த மரக்கலத்துக்குப் போகலாம்!'' என்ருர் இளவரசர்.


இருவரும் வந்த வழியே திரும்பி நடக்கத் தொடங்கினர்கள்.

''பூங்குழலி! நீ எனக்குச் செய்த உதவியை என்றும் மறக்க மாட்டேன். ஆனல் இங்கே நாம் பிரிந்துவிட வேண்டியதுதான்'' என்ருர் இளவரசர்.

பூங்குழலி மெளனமா யிருந்தாள்.

'' நான் சொல்கிறது காதில் விழுந்ததா? அந்தப் புதைந்த கப்பலிலேயே நான் காத்திருக்கத் தீர்மானித்துவிட்டேன். சேநாதிபதி முதலியவர்கள் எப்படியும் இந்த இடத்தைத் தேடிக் கொண்டு வந்து சேர்வார்கள். அவர்களுடன் கலந்தாலோசித்து மேலே செய்ய வேண்டியதைப் பற்றி முடிவு செய்வேன். ஆனல் உனக்கு இனி இங்கே வேலை இல்லை. உன் படகைத் தேடிப் பிடித்துப் போய் விடு. என் தந்தையைப் பற்றி நான் கூறியதை நினைவில் வைத்துக் கொள்....''

பூங்குழலி தயங்கி நின்ருள். அங்கிருந்த மரம் ஒன்றின் மீது சாய்ந்



தான். அதன் தாழ்ந்த கிளை ஒன்றை அவள் பிடித்துக் கொண்டாள்.

"என்ன சமுத்திரகுமாரி? என்ன?"

"ஒன்றுமில்லை, இளவரசரே! இங்கேயே தங்களிடம் விடைபெற்றுக் கொள்கிறேன். போய் வாருங்கள்!"

"கோபமா, பூங்குழலி?"

"கோபமா? தங்களிடம் கோபம் கொள்ள இந்தப் பேதைக்கு என்ன அதிகாரம்? அவ்வளவு அகம்பாவம் நான் அடைந்துவிட வில்லை."

"பின்னர், ஏன் திடீரென்று இங்கே நின்று விட்டாய்?"

"கோபம் இல்லை, ஐயா! களைப்புத் தான்! நான் உறங்கி இரண்டு நாள் ஆகிறது. இங்கேயே சற்றுப் படுத்திருந்து விட்டு என் படகைத் தேடிக் கொண்டு போகிறேன்."

அது பௌர்ணமிக்கு மறு நாள். ஆகையால் அச்சமயம் ஈழைக் கடலில் சந்திரன் உதயமாகிக் கொண்டிருந்தது. இரண்டொரு மங்கிய கிரணங்கள் பூங்குழலியின் முகத்திலும் விழுந்தன.

இளவரசர் அந்த முகத்தைப் பார்த்தார். அதில் குடிகொண்டிருந்த சோர்வையும் களைப்பையும் பார்த்தார். கண்கள் பஞ்சடைந்து இமைகள் தாமாக மூடிக் கொள்வதையும் பார்த்தார்.

சந்திரன் உதயமாகும் போது செந்தாமரை குவிதல் இயற்கைதான். ஆனால் பூங்குழலியின் முகத் தாமரை அப்போது குவிந்தது என்று மட்டும் சொல்வதற்கில்லை. அது வாடி வதங்கிச் சோர்ந்து போயிருந்தது.

"பெண்ணே! தூங்கி இரண்டு நாளாயிற்று என்றாயே? சாப்பிட்டு எத்தனை நாள் ஆயிற்று?" என்றார்.

"சாப்பிட்டும் இரண்டு நாளைக்கு மேல் ஆயிற்று. தங்களுடன் இருந்த வரையில் பசியே தெரியவில்லை."

"என் மூடத்தனத்தை என்னவென்று சொல்வது? இன்று பகல் நாங்கள் எல்லாரும் வயிறு புடைக்க விருந்துண்டோம். 'நீ சாப்பிட்டாயா?' என்று கூடக் கேட்கத் தவறி விட்டேன்! வா! பூங்குழலி! என்னுடன் அந்தப் புதைந்த கப்பலுக்கு வா! அதில் தானியங்கள் சிதறிக் கிடந்ததைப் பார்த்த ஞாபகம் இருக்கிறது. அந்தத் தானியங்களைத் திரட்டி இன்று இரவு கூட்டாஞ் சோறு சமைத்து உண்போம். சாப்பிட்ட பிறகு நீ உன் வழியே போகலாம்...."

"ஐயா! சாப்பிட்டால் உடனே அங்கேயே படுத்துத் தூங்கி விடுவேன். இப்போதே கண்ணைச் சுற்றுகிறது."

"அதனால் என்ன? நீ அந்தப் புதைந்த கப்பலில் நிம்மதியாகப் படுத்துத் தூங்கு! நானும் யானையும் கரையிலிருந்து காவல் காக்கிறோம். பொழுது விடிந்ததும் நீ உன் படகைத் தேடிப் போ!"

இவ்விதம் சொல்லி இளவரசர் பூங்குழலியின் கரத்தைப் பற்றி அவளைத் தாங்குவார் போல நடத்தி அழைத்துக் கொண்டு சென்றார். உண்மையிலேயே அவளுடைய கால்கள் தள்ளாடின என்பதைக் கண்டார். அந்தப் பெண்ணின் அன்புக்கு ஈரேழு உலகிலும் இணை ஏது என்று எண்ணிய போது அவருடைய கண்களில் கண்ணீர் துளித்தது.


புதைந்திருந்த கப்பலுக்கு அவர்கள் திரும்பியும் வந்து சேர்ந்த போது அக்கப்பலுக்குப் பின்னால் புகை கிளம்புவதைக் கண்டு திடுக்கிட்டார்கள். ஒரு வேளை அந்தக் கப்பலைச் சேர்ந்தவர்கள் எங்கேயாவது போயிருந்து திரும்பி வந்திருக்கலாம் அல்லவா? திடீரென்று அவர்கள் முன்னால் தோன்றினால் ஏதாவது ஒன்று கிடக்க ஒன்று நேரிடக் கூடும். ஆகையால் மெள்ள மெள்ளச் சத்தமிடாமல் சென்றார்கள். வெகு சமீபத்தில் அவர்கள் போன பிறகும் பேச்சுக் குரல் ஒன்றும் கேட்க வில்லை. மறைவில் இருப்பவர்கள் யார், அவர்கள் எத்தனை பேர் என்றும் தெரியவில்லை. வள்ளிக்கிழங்கு சுடும் மணம் மட்டும் கம்மென்று வந்தது. பூங்குழலியின் நிலையை இப்போது இளவரசர் நன்கு அறிந்திருந்த படியால் அவளுடைய பசியைத் தீர்ப்பது முதல் காரியம் என்று கருதினார். ஆகையால் வந்தது வரட்டும் என்று கப்பலைச் சுற்றிக் கொண்டு அப்பால் சென்று பார்த்தார். அங்கே அடுப்பு மூட்டிச் சமைப்பதற்கு ஏற்பாடுகள்

செய்து கொண்டிருந்தது ஒரு பெண் மணி என்று தெரிந்தது. யார் அந்தப் பெண்மணி என்பதும் அடுத்தகணத்தி லேயே தெரிந்து போயிற்று. அந்த மூதாட்டி இவர்களைக் கண்டு ஆச் சரியப்பட்டதாகத் தெரியவில்லை. இவர் களை எதிர்பார்த்தவளாகவே தோன்றி யது. வாய்ப் பேச்சின் உதவியின்றி இவர்களை அம்மூதாட்டி வரவேற் ருள். சற்று நேரத்துக்கெல்லாம் அமுதும் படைத்தாள். பழையாறை அரண்மனையில் அருந்திய இராஜபோக மான விருந்துகளை யெல்லாம் காட்டி லும் இம்மூதாட்டி அளித்த வரகரிசிச் சோறும் வள்ளிக் கிழங்கும் சுவை மிகுந்ததாக இளவரசருக்குத் தோன்றியது.

சாப்பிட்ட பிறகு மூன்று பேரும் கப்பலின் தளத்துக்குப் போய்ச் சேர்ந் தார்கள். சந்திரன் இப்போது நன்ருக மேலே வந்திருந்தான். கப்பலின் தளத்திலிருந்து பார்த்த போது, கடலும் தொண்டைமானாறும் ஒன்ருகக் கலக்கும் இடமும் அதற்கு அப்பால் பரந்த கடலும் தெரிந்தன. முன் மாலை இருள் வேளையில் பச்சைத் தாமிரத் தகட்டைப் போல் தோன்றிய கடல் இப்போது பொன் வண்ண நிலாவின் கிரணங்களினுல் ஒளி பெற் றுத் தங்கத் தகடாகத் திகழ்ந்தது.

அவர்கள் இரவில் திறந்த வெளியில் சுற்றிலும் நீர் சூழ்ந்த இடத்தில் இருந்த போதிலும் புழுக்கத்தினுல் உடம்பு வியர்த்தது. காற்று என்பது லவலேச மும் இல்லை. இதைப் பற்றி இளவரசர் பூங்குழலியிடம் கூறியதை அந்த மூதாட்டி எப்படியோ தெரிந்து கொண் டாள். வானத்தில் சந்திரனைச் சுற்றி ஒரு சாம்பல் நிற வட்டம் ஏற்பட் டிருப்பதைச் சுட்டிக் காட்டினுள். "சந் திரனைச் சுற்றி வட்டமிட்டிருந்தால் புயலும் மழையும் வரும் என்பதற்கு அடையாளம்" என்று பூங்குழலி விளக் கிக் கூறினுள். "புயல் வருகிற போது வரட்டும்; இப்போது கொஞ்சம் காற்று வந்தால் போதும்!" என்ருர் இளவரசர். பிறகு அந்த மூதாட்டி எப்படி அவ்வளவு சீக்கிரத்தில் அங்கு வந்து சேர்ந்திருக்க முடியும் என்று தமது வியப்பைத் தெரிவித்தார்.

"என் அத்தைக்கு இது ஒரு பெரிய காரியம் அல்ல; இதைவிட அதிசய மான காரியங்களை அவர் செய்திருக் கிருர்!" என்ருள் பூங்குழலி. "மேலும் தங்களிடம் அவருக்கு இருக்கும் அன் புக்கு அளவே கிடையாது. அன்பின் சக்தியினுல் எதைத்தான் சாதிக்க முடி யாது?" என்ருள்.



இந்தப் பேச்சையும் அந்த மூதாட்டி எப்படியோ தெரிந்து கொண்டு பூங் குழலியின் முகத்தைத் திருப்பி ஒரு திக்கைச் சுட்டிக் காட்டினுள். அங்கே அவர்கள் ஏறி வந்த யானை நின்று கொண்டிருந்தது. அதற்குப் பக்கத்தில் கம்பீரமான உயர்ந்த சாதிக் குதிரை ஒன்று நின்றதைக் கண்டு இருவரும் அதிசயித்தார்கள்.

"இந்தக் குதிரையின் மீது ஏறி இவர் வந்தாரா என்ன? இவருக்குக் குதிரை ஏறத் தெரியுமா?" என்று இளவரசர் வியப்புடன் கேட்டார்.

"அத்தைக்குத் தெரியாதது ஒன்றும் இல்லை. குதிரை ஏற்றம், யானை ஏற்றம் எல்லாம் தெரியும். படகு வலிக்கத் தெரியும். சில சமயம் காற்றில் ஏறிப் பிரயாணம் செய்வாரோ என்று நினைக் கத் தோன்றும். அவ்வளவு சீக்கிரம் ஓரிடத்திலிருந்து இன்னொரிடம் வந்து விடுவார். எப்படி வந்திருக்க முடியும் என்று நமக்கு ஆச்சரியமாயிருக்கும்."

இளவரசர் அப்போது வேருெரு ஆச் சரியத்தில் மூழ்கியிருந்தார். கரையில் மேய்ந்து கொண்டிருந்த குதிரையின் கம்பீரத் தோற்றந்தான் அவருக்கு அத்தகைய வியப்பை உண்டாக்கியது.

"அரபு நாட்டில் வளரும் உயர்ந்த சாதிக் குதிரைகளில் மிக உயர்ந்த குதிரையல்லவா இது? எப்படி இங்கே வந்தது? எப்படி இந்த மூதாட்டிக்குக் கிடைத்தது?" என்று தமக்குத் தாமே சொல்லிக் கொண்டார்.

பூங்குழலி சமிக்ஞை பாஷையினுல் இதைப் பற்றி ஊமை ராணியிடம் கேட் டாள். (ஆம்; 'ஊமை ராணி' என்று இனி நாம் அந்த மூதாட்டியை அழைக்க லாம் அல்லவா?) 'யானை இறவு'த் துறைக்குப் பக்கத்தில் இந்தக் குதிரை

கடலிலிருந்து கரையேறியது என்றும், கரை ஏறியதும் தெறி கெட்டுப் பிரமித்து நின்று கொண்டிருந்ததென்றும், ஊமை ராணி அதை அன்புடன் தட்டிக் கொடுத்து வசப்படுத்தி அதன் மேல் ஏறிக் கொண்டு வந்ததாகவும் தெரியப் படுத்தினாள். இதைக் கேட்ட இளவரசனின் வியப்பு மேலும் அதிகமாயிற்று.

பேசிக் கொண்டிருக்கும் போதே பூங்குழலியின் கண்ணிமைகள் மூடிக் கொள்வதை இளவரசர் கவனித்தார். "முன்னமே தூக்கம் வருகிறது என்று சொன்னாய். நீ படுத்துக் கொள்!" என்றார். அப்படிச் சொன்னதுதான் தாமதம்; பூங்குழலி அவ்விடமிருந்து சற்று விலகிச் சென்று படுத்துப் பக்கத்தில் கிடந்த கப்பல் பாய் ஒன்றை எடுத்துப் போர்த்திக் கொண்டாள். படுத்த சிறிது நேரத்துக்கெல்லாம் தூங்கிப் போனாள். அவள் மூச்சு விட்ட தோரணையிலிருந்து அவள் தூங்கி விட்டாள் என்று தெரிந்தது.



ஆனால் தூக்கத்திலேயே அவளுடைய வாய் மெல்லிய குரலில் பாட்டு ஒன்றை முணுமுணுத்தது.

"அலை கடலும் ஓய்ந்திருக்க
அகக் கடல்தான் பொங்குவதேன்?"

ஆகா! இதே பாட்டை வந்தியத்தேவன் நேற்று அடிக்கடி முணுக் கொண்டிருந்தான்! இவளிடந்தான் கற்றுக் கொண்டான் போலும். மற்றொரு சமயம் சமுத்திர குமாரி விழித்துக் கொண்டிருக்கும் போது பாட்டு முழுவதையும் பாடச் சொல்லிக் கேட்க வேண்டும் என்று இளவரசர் எண்ணினார். உடனே ஊமை ராணியிடம் அவர் கவனம் சென்றது. ஆகா! எல்லாருக்குந்தான் சில சமயம் அகக் கடல் பொங்குகிறது; நெஞ்சகம் விம்முகிறது! ஆனாலும் வாய் திறந்து தன் உணர்ச்சிகளை என்றும் வெளியிட முடியாத இந்த மூதாட்டியின் உள்ளக் கொந்தளிப்புக்கு உவமானம் ஏது? எத்தனை ஆசாபாசங்கள், எத்தனை மகிழ்ச்சிகள், எத்தனை துயரங்கள், எவ்வளவு கோபதாப ஆத்திரங்கள் எல்லாவற்றையும் இவள் தன் உள்ளத்திலேயே எத்தனை காலமாக அடக்கி வைத்திருக்கிறாள்?

ஊமை ராணி இடம் பெயர்ந்து இளவரசரின் அருகில் வந்து அமர்ந்தாள். அவருடைய தலை மயிரை அன்புடன் கோதி விட்டாள். அவருடைய இரண்டு கன்னங்களையும் பூவைத் தொடுவதைப் போல் தன் வலிய வைரமேறிய கரங்களினால் மிருதுவாகத் தொட்டுப் பார்த்தாள். இளவரசருக்குச் சற்று நேரம் என்ன செய்வது என்றே தெரியவில்லை. பிறகு அந்த மூதாட்டியின் பாதங்களைத் தொட்டுத் தம் கண்ணில் ஒற்றிக் கொண்டார். அவள் அந்தக் கரங்களைப் பிடித்துத் தன் முகத்தில் வைத்துக் கொண்டாள். இளவரசருடைய கரங்கள் விரைவில் அந்தப் பெண்ணரசியின் கண்ணீரால் நனைந்தன.

ஊமை ராணி சமிக்ஞையினால் இளவரசரையும் படுத்து உறங்கச் சொன்னாள். தான் காவல் இருப்பதாகவும் கவலையின்றித் தூங்கும்படியும் சொன்னாள். இளவரசருக்குத் தூக்கம் வரும் என்று தோன்றவில்லை. ஆயினும் அவளைத் திருப்தி செய்வதற்காகப் படுத்தார். படுத்து வெகு நேரம் வரையில் அவர் உள்ளக் கடல் கொந்தளித்துக் கொண்டிருந்தது. பிறகு குளிர்ந்த காற்று வந்தது. உடல் குளிரவே உள்ளம் குளிர்ந்தது; உறக்கமும் வந்தது.

ஆனால் உறக்கத்திலும் இளவரசரின் மனம் அமைதியுறவில்லை. பற்பல விசித்திரமான கனவுகள் கண்டார். அரபு நாட்டுச் சிறந்த குதிரை ஒன்றின் மீது ஏறி வானவெளியில் பிரயாணம் செய்தார். மேக மண்டலங்களைக் கடந்து வானுலகில் புகுந்தார். அங்கே தேவேந்திரன் அவரை ஐராவதத்தில் ஏற்றி அழைத்துச் சென்றான். தன்னுடைய இரத்தினச் சிங்காதனத்தில் அவரை உட்காரச் சொன்னான். "ஓ! இது எனக்கு வேண்டாம். இந்தச் சிங்காதனத்தில் என் பெரிய தாயார் ஊமை ராணியை ஏற்றி வைக்க விரும்பு

கிறேன்'' என்று இளவரசர் சொன்னார். தேவேந்திரன் சிரித்து, ''அவள் இங்கே வரட்டும். பிறகு பார்க்கலாம்'' என்றான். தேவேந்திரன் இளவரசருக்குத் தேவாமிர்தத்தைக் கொடுத்துப் பருகச் சொன்னான். இளவரசர் அருந்திப் பார்த்து விட்டு, ''ஓ! இது காவேரித் தண்ணீர் அவ்வளவு நன்றாயில்லையே?'' என்றார். தேவேந்திரன் இளவரசரை அந்தப்புரத்துக்கு அழைத்துப் போனான். அங்கே தேவ மகளிர் பலர் இருந்தார்கள். இந்திராணி இளவரசரைப் பார்த்து, ''இந்தப் பெண்களுக்குள்ளே அழகில் சிறந்தவள் யாரோ அவளை நீர் மணந்து கொள்ளலாம்'' என்றாள். இளவரசர் பார்த்து விட்டு, ''இவர்களில் யாரும் பூங்குழலியின் அழகுக்கு அருகிலும் வரமாட்டார்கள்'' என்றார். திடீரென்று இந்திராணி இளைய பிராட்டியாக மாறினாள். ''அருள்மொழி! என் வானதியை மறந்து விட்டாயா?'' என்று கேட்டாள். இளவரசர், ''அக்கா! அக்கா! எத்தனை நாளைக்கு என்னை நீ அடிமையாக வைத்திருக்கப் போகிறாய்? உன்னுடைய அன்பின் சிறையைக் காட்டிலும் பழுவேட்டரையரின் பாதாளச் சிறை மேல்! என்னை விடுதலை செய்! இல்லாவிட்டால் விராட ராஜனுடைய புதல்வன் உத்தர குமாரனைப் போல் என்னை அரண்மனையிலேயே இருக்கச் செய்து விடு. ஆடல் பாடல்களில் காலங் கழித்துக் கொண்டிருக்கிறேன்'' என்றார். இளையபிராட்டி குந்தவை தன் பவழச் செவ்விதழ்களில் காந்தள் மலரை யொத்த விரலை வைத்து அவரை வியப்புடன் நோக்கினாள். ''அருள்மொழி! நீ ஏன் இப்படி மாறிப் போய் விட்டாய்? யார் உன் மனத்தைக் கெடுத்தார்கள்? ஆம், தம்பி! அன்பு என்பது ஓர் அடிமைத்தனம்தான். அதற்கு நீ கட்டுப்பட்டுத்தான் ஆக வேண்டும்'' என்றாள். ''இல்லை, அக்கா! இல்லை! நீ சொல்வது தவறு. அடிமைத்தனம் இல்லாத அன்பு உண்டு. உனக்கு அதைக் காட்டட்டுமா? இதோ கூப்பிடுகிறேன், பார்!...பூங்குழலி! பூங்குழலி! இங்கே வா!'' என்று கூவினார்.

பலபல வென்று பொழுது விடியும் சமயத்தில் பூங்குழலி குதிரையின் காலடிச் சத்தம் கேட்டு விழித்துக் கொண்டாள். ஊமை ராணி குதிரை மேல் ஏறிப் புறப்படுவதைப் பார்த்தாள். அவளைத் தடுப்பதற்காக எழுந்து ஓடினாள். அவள் கப்பலிலிருந்து இறங்கிக் கரைக்குச் செல்வதற்கு முன்னால் குதிரை பறந்து சென்று விட்டது.

உதய நேரம் மிக்க மனோகரமாயிருந்தது. பூங்குழலியின் உள்ளத்தில் என்றுமில்லாத உற்சாகம் ததும்பியது. அங்கிருந்தபடியே கப்பலின் மேல் தளத்தைப் பார்த்தாள். இளவரசர் தூங்கிக் கொண்டிருந்தார். பூங்குழலி நதிக்கரையோரமாகப் பறவைகளின் இனிய கானத்தைக் கேட்டுக் கொண்டு நடந்தாள். ஒரு மரத்தின் வளைந்த கிளையில் ஒரு ராட்சதக் கிளி உட்கார்ந்திருந்தது. பூங்குழலியைக் கண்டு அது அஞ்சவில்லை. ''எங்கே வந்தாய்?'' என்று கேட்பது போல் உற்றுப் பார்த்தது.

''கிளித் தோழி! இன்னும் சற்று நேரத்துக்கெல்லாம் இளவரசர் இங்கிருந்து போய் விடுவார். பிறகு எனக்கு நீதான் துணை. என்னோடு பேசுவாய் அல்லவா?'' என்றாள் பூங்குழலி.

அச்சமயம் ''பூங்குழலி! பூங்குழலி!'' என்ற குரல் கேட்டது. முதலில் கிளி தான் பேசுகிறது என்று நினைத்தாள்.



இல்லை; குரல் கப்பலிலிருந்து வருகிறது என்று உணர்ந்தாள். இளவரசர் அழைக்கிறார் என்று அறிந்து குதித்தோடினாள். ஆனால் கப்பல் மேல் ஏறிப் பார்த்த போது இளவரசர் இன்னமும் தூங்கிக் கொண்டிருந்தார். பூங்குழலி அவர் அருகில் சென்ற போது அவருடைய வாய் மீண்டும், ''பூங்குழலி! பூங்குழலி!'' என்று முணுமுணுத்தது. உடல் புளகாங்கிதம் கொண்ட அந்தப் பெண் இளவரசரின் அருகில் சென்று அவருடைய நெற்றியைத் தொட்டு எழுப்பினாள்.

இளவரசர் உறக்கமும் கனவும் கலைந்து எழுந்தார். கீழ்த் திசையில் சூரியன் உதயமாகிக் கொண்டிருந்தான். பூங்குழலியின் முகம் மலர்ந்த செந்தாமரையைப் போல் பிரகாசித்தது. ''என்னை அழைத்தீர்களே, எதற்கு?'' என்று கேட்டாள். ''உன் பெயரைச் சொல்லி அழைத்தேனா, என்ன? தூக்கத்தில் ஏதோ பேசியிருப்பேன். நீ நேற்றிரவு தூங்கிக் கொண்டே

பாடினாயே! நான் தூக்கத்தில் பேசக் கூடாதா?" என்றார்.

இளவரசர் குதித்து எழுந்தார். "ஓகோ! இத்தனை நேரமா தூங்கி விட்டேன்! பெரியம்மா எங்கே?" என்று கேட்டுச் சுற்றுமுற்றும் பார்த்தார். அந்த மூதாட்டி அதிகாலையில் குதிரை ஏறிப் போய் விட்டதைக் கூறினாள்.

"நல்ல காரியம் செய்தாள்! சமுத்திர குமாரி! உன் களைப்புத் தீர்ந்து விட்டதாகக் காண்கிறது. நீயும் இனி விடை பெற்றுக் கொள்ளலாம். என் நண்பர்கள் வரும் வரையில் நான் இங்கேயே இருக்க வேண்டும். அதுவரை இந்தக் கப்பலைச் சோதித்துப் பார்க்கப் போகிறேன்!" என்றார்.

பூங்குழலி, "அதோ! அதோ!" என்று சுட்டிக் காட்டினாள். அவள் காட்டிய திசையை இளவரசர் நோக்கினார். கடலில் வெகு தூரத்தில் ஒரு பெரிய மரக்கலம் தெரிந்தது. கடற்கரையோரமாக ஒரு சிறிய படகு வருவதும் தெரிந்தது. படகிலே ஐந்தாறு பேர் இருந்தார்கள்.

"ஆகா! இப்போது எல்லா விவரங்களும் தெரிந்து போய் விடும்!" என்றார் இளவரசர்.

தாம் அங்கிருப்பது தெரியாமல் ஒரு வேளை படகு கடற்கரையோடு போய் விடலாம் என்று இளவரசர் அஞ்சினார். ஆகையால் உடனே புதைந்த கப்பலிலிருந்து கீழிறங்கி நதிக்கரையோரமாகக் கடற்கரையை நோக்கிச் சென்றார். பூங்குழலி அவரைத் தொடர்ந்து சென்றாள். யானையும் பின்தொடர்ந்தது.

கடற்கரையிலே போய் நின்றார்கள். மரக்கலம் அவர்களை விட்டுத் தூரத் தூரப் போய்க் கொண்டிருந்தது. படகு அவர்களை நெருங்கி நெருங்கி வந்து கொண்டிருந்தது.

முதலில் பின்னால் ஒதுங்கி நின்ற பூங்குழலி ஆர்வம் காரணமாகச் சிறிது நேரத்துக்குள் முன்னால் வந்துவிட்டாள்.

இளவரசருடைய மனக் கவலைகளுக்கிடையே பூங்குழலியின் ஆர்வம் அவருக்குக் களிப்பை ஊட்டியது. அவர் முகத்தில் குறுநகை ததும்பியது.

அவர் மனக் கவலை கொள்ளக் காரணங்களும் நிறைய இருந்தன. தூரத்திலே போய்க் கொண்டிருந்த கப்பலில் தாமும் போயிருக்க வேண்டும் என்றும் அது தம்மை விட்டுத் தூரத் தூரப் போய்க் கொண்டிருப்பதாகவும் அவருக்குத் தோன்றியது. அது மட்டும் அன்று. கிட்ட நெருங்கி வந்து கொண்டிருந்த படகிலே ஓர் ஆள் குறைவாக இருந்ததாகக் காணப்பட்டது. இருக்க வேண்டிய ஒருவர் அதில் இல்லை. ஆம்; அதோ சேநாதிபதி இருக்கிறார்; திருமலையப்பர் இருக்கிறார்; உடன் வந்த வீரர்கள் இருக்கிறார்கள்; படகோட்டிகள் இருக்கிறார்கள். ஆனால் அந்த வாணர் குலத்து வாலிபனை மட்டும் காணோம். வல்லத்தரையன் எங்கே? அந்த உற்சாக புருஷன், அஸகாய சூரன், அஞ்சாநெஞ்சம் படைத்த தீரன், இளைய பிராட்டி அனுப்பி வைத்த அந்தரங்கத் தூதன் எங்கே? இரண்டு நாட்கள்தான் பழகியிருந்த போதிலும் இளவரசருக்கு நெடுநாள் பழக்கப்பட்ட நண்பன்போல் அவன் ஆகியிருந்தான். அவனுடைய குணாதிசயங்கள் அவ்வளவாக இளவரசருடைய மனத்தைக் கவர்ந்திருந்தன. அவனைப் படகில் காணாததும் அரிதில் கிடைத்த பாக்கியத்தை இழந்ததுபோல் இளவரசருக்கு வேதனை உண்டாயிற்று.

படகு இன்னும் நெருங்கிக் கரையோரம் வந்ததும் சேநாதிபதி முதலியவர்கள் தாவிக் கரையில் குதித்தார்கள். பூதிவிக்கிரமகேசரி ஓடி வந்து இளவரசரைக் கட்டிக் கொண்டார்.

"ஐயா! நல்ல காரியம் செய்தீர்கள்! எங்களை இப்படிக் கதிகலங்க அடிக்கலாமா?.... யானையின் மதம் எப்படி அடங்கிற்று? இந்தப் பொல்லாத யானை இப்போது எவ்வளவு சாதுவாக நின்று கொண்டிருக்கிறது!... இளவரசே! எப்போது இங்கே வந்து சேர்ந்தீர்கள்? பழுவேட்டரையர்களின் கப்பல்களைப் பார்த்தீர்களா? அவை எங்கே?" என்று சேநாதிபதி கேள்வி மாரி பொழிந்தார்.

"சேநாதிபதி! எங்கள் கதையைப் பின்னால் சொல்கிறேன். வந்தியத்தேவர் எங்கே? சொல்லுங்கள்!"

"அந்தத் துடுக்குக்காரப் பிள்ளை அதோ போகிற கப்பலில் போகிறான்!" என்று சேநாதிபதி தூரத்தில் போய்க் கொண்டிருந்த கப்பலைக் காட்டினார்.

"ஏன்? ஏன்? அது யாருடைய கப்பல்? அதில் ஏன் வந்தியத்தேவர் போகிறார்?" என்று இளவரசர் கேட்டார்.

"ஐயா! எனக்குப் புத்தி ஒரே கலக்கமாயிருக்கிறது. இந்த வைஷ்ணவனைக் கேளுங்கள்! இவனுக்கு உங்கள் சமாசாரமும் அந்த வாலிபன் சுபாவமும் தெரிந்திருக்கிறது!" என்றார்.

இளவரசர் ஆழ்வார்க்கடியானைப் பார்த்து, "திருமலை! வந்தியத்தேவர் ஏன் அக்கப்பலில் போகிறார்? சீக்கிரம் சொல்லுங்கள்!" என்றார். **(தொடரும்)**

பூங்குழலி காட்டுக் கிளியுடன் உரையாடும் அழகிய காட்சி ஓவியர் மணியத்தின் கைத்திறனால் அட்டைப்படமாகப் பொலிகிறது.

நாடக விமர்சனம்

இதய மலர்



'ஆள் பாதி; ஆடை பாதி' என்பது போல் ஒரு நாடகத்தில் கதை பாதி; வசனம் பாதி.

தமிழ் நாடக மேடைக்கு 'இதய மலர்' ஒரு நல்ல கதையைக் கொடுத்திருக்கிறது. ஆனால் அதற்கு இணையான வசனம் அமையாததால் மலரில் அழகிருந்தும் மணம் இல்லை. கண்டிப்பாக நீக்கப்பட வேண்டிய வசனம்: ''பெண்கள் இருவர் சேர்ந்து ஆராய ஆரம்பித்தால் அந்த ராமச்சந்திரமூர்த்தி கூடச் சந்தேகத்துக்கு ஆளாகி விடுவாரே!'' கதாபாத்திரங்கள் அடிக்கடி குழப்பம் என்ற வார்த்தையைப் பயன்படுத்திக் குழப்பிக்கொள்வது தவிர்க்கப்பட வேண்டும் என்பதில் ரசிகர்களுக்குக் குழப்பமே இல்லை. கதாநாயகி வனஜா பாரதப் பண்பாட்டைக் காப்பதாகப் பறைசாற்றாமல் இருந்திருந்தால் நாடகப் பண்பு காக்கப்பட்டிருக்கும்.

கல்யாணம் பண்ணியும் பிரம்மச்சாரி என்பார்கள். இந்தக் கதையில் கல்யாணமாகியும் கன்னியாக இருக்கிறாள் வனஜா. சிறு வயதில் வனஜாவுக்குப் 'பொம்மைக் கல்யாணம்' நடத்தது பிடிக்காமல் அவள் அண்ணன் அவனை அமெரிக்காவுக்கு அனுப்பிப் போய் விடுகிறான். இருபது ஆண்டுகளுக்குப் பிறகு வனஜாவின் இதயம் திருமணத்தை நாடும் சமயம் தனக்கு ஏற்கனவே கல்யாணமாகி விட்ட விவரம் அவளுக்குத் தெரிய வருகிறது. தன் கணவன் வேறு ஒருத்தியை மணந்து கொண்டிருப்பதை அறிகிறாள். அவர்கள் வாழ்க்கையில் குறுக்கிட விரும்பாமல் தானும் மறுமணம் புரிந்து கொள்ள நினைக்காமல் கடமையில் கண்ணாக இருந்து காலத்தை ஓட்ட முற்படுகிறாள்.

உணர்ச்சிகரமான கட்டங்களுக்கு நிறைய இடம் அளிக்கும் நல்லதொரு கதை. வனஜாவாக நடிக்கும் சோபாவுக்கு உணர்ச்சி மாறுதல்களை அனாயாசமாக முக பாவத்தில் காட்டும் திறமை இருக்கிறது. அவள் அண்ணனாகத் தோன்றும் பூர்ணம் விசுவநாதனின் நடிப்பு பூரணமடைந்திருக்கிறது.

ஜெமினி மகாலிங்கம் சரீரத்தால் துடிப்பைக் காட்டாமல் நடிப்பில் மட்டும் துடிப்பாக இருந்தால் நலம் பயக்கும்.

மணக்கால் மணிக்கு அதிக வேலை இல்லை. நகைச்சுவைக்கு அவரை இன்னும் சற்று அதிகமாகவே பயன்படுத்திக் கொண்டிருக்கலாம். நகைச்சுவைக்குப் பிரதான்யம் இல்லாமல் நாடகம் போட முன்வந்ததைப் பாராட்டலாம் என்றாலும் ஒரு சிறு கதையை இரண்டரை மணி நேர நாடகமாக நீட்டத் தீர்மானித்த பிறகு இடையிடையே 'ரிலீஃப்' தேவைதான். அரங்க நிர்மாணம் அசாத்தியம். ஆனால் காலண்டரில் தேதி கிழிக்க மறக்கலாமோ?

அண்ணி ராஜம் செல் காய்களைப் பொறுக்கி டப்பாவில் போட்டு டப்பென்று மூடிப் பட்டென்று எழுந்து போகுமிடத்தில் டைரக்‌ஷன் சிறப்பு பளிச்சிடுகிறது.

திருவல்லிக்கேணி ஃபைன் ஆர்ட்ஸ், மயிலாப்பூர் ஃபைன் ஆர்ட்ஸ் அரங்கில் நடத்திய இந்நாடகம் பற்றி ''உண்மை பேச வேண்டும்'' என்றார் நாடகாசிரியர் மணியன். பேசி(எழுதி) விட்டோம்: மணமில்லையானாலும் 'இதய மலர்' காகிதப்பூ அல்ல. இதழ் விரித்துச் சிரிக்கும் வண்ண மலரே.



அவர் வாதம்!

இங்கிலாந்தின் புகழ்பெற்ற வக்கீல் ஜேம்ஸ் பைக் என்பவர் திடீரென்று தம் வக்கீல் தொழிலை விட்டு விட்டுப் பாதிரியாகி விட்டார். ''வக்கீல் வேலையை ஏன் விட்டு விட்டீர்கள்?'' என்று நண்பர்கள் கேட்டதற்கு, ''வக்கீல் வேலையை நான் விடவில்லையே. முன்பு மனிதர்களுக்காக மனிதர்களிடமே வாதாடினேன்; இப்போது மனிதர்களுக்காகக் கடவுளிடம் வாதாடுகிறேன்'' என்றார்.

ஆதாரம்: 'தி கண்ட்ரிமேன்'

தகவல்: 'என்பூ'



25. மரவுரி தரித்தார்கள்

ராமனுடன் சீதையும் வனம் போவதென்று நிச்சயமாகி விட்டது. ஏழை அந்தணர்களை அழைத்துச் சகல பொருள்களையும் தானம் கொடுத்து விட்டு வனவாசத்துக்குச் சீதை ஆயத்தமாகிவிட்டாள்.

லக்ஷ்மணனும் அண்ணனுக்குச் சகாயமாக வனம் போகத் தீர்மானித்து ராமனுடைய சம்மதமும் பெற்றான். மூவரும் தந்தை தசரதனிடம் விடை பெற்றுக் கொள்வதற்காகச் சென்றனர்.

தெருக்களிலும் ராஜ வீதியின் இரு பக்கத்திலுமுள்ள மாளிகைகளில் உப்பரிகைகளிலும் சாளரங்களின் பின்னும் ஜனங்கள் கூட்டம் கூட்டமாக நின்று ராமனும், சீதையும், லக்ஷ்மணனும் நடந்து போவதைக் கண்டார்கள்.

அடங்காத துக்கமும் வியப்பும் கோபமும் அடைந்து, "இப்படியும் ஓர் அரசன்| உண்டா? இத்தகைய ராஜ குமாரனை எவனாவது வனத்துக்கு அனுப்பி விடுவானா? ஐயோ, பாவம்! காலால் தெருவில் நடந்து போகிறாளே சீதை! வனத்தில் வெய்யிலும் மழையும் இவள் தாங்குவாளா? இது என்ன விபரீதம்! சரி, இந்த நகரத்தை விட்டு நாம் அனைவரும் ராஜ குமாரர்கள் செல்லும் வனத்துக்குப் போக வேண்டியதுதான். வீட்டில் உள்ள பொருள்களையெல்லாம் எடுத்துக் கொண்டு, நாமும் வனம் செல்வோம். ராமன் இருக்கும் வனமே நமக்கு அயோத்தியை. இந்த நகரம் பாம்புகள் புகும் புற்றும், எலிகள் தோண்டிய வளைகளுமாக, வீடுகள் எல்லாம் பாழாகப் போக வேண்டியதுதான். கைகேயி இங்கே அரசு புரியட்டும். நாம் போகும் வனத்திலிருக்கும் காட்டு மிருகங்களும் பிணம் தின்னும் பறவைகளும் அந்த இடத்தை விட்டு விட்டு அயோத்திக்கு வந்து விடும்; இதுவே காடாகும். அது நகரமாகும்."

இவ்வாறெல்லாம் மக்கள் பேசிய பேச்சு ராமன் காதில் விழுந்தாலும் அதை அவன் கவனிக்காமல் சென்றான்.

அரசனுடைய மாளிகையின் வாயிலருகே துக்கம் நிறைந்த முகத்தோடு மூலையில் உட்கார்ந்திருந்த சுமந்திரனைப் பார்த்து ராமன், இனிய குரலில், "மூவரும் அரசனைக் காண வந்திருக்கிறோம். தெரியப்படுத்தி உள்ளே வருவதற்கு அனுமதி கேட்டு வர வேண்

டும்'' என்று சொன்னான். சுமந்திரனும் அவ்வாறே சொல்வதற்குச் சென்றான்.

ராகுவால் பிடிக்கப்பட்ட சூரியனைப் போல், சாம்பல் நிறைந்த அடுப்புப் போல், நீர் வற்றிய தடாகத்தைப் போல் காட்சி தந்தான் சக்கரவர்த்தி.

சுமந்திரன் கைகூப்பி, துக்கத்தால் பேச்சுத் தடுமாறிச் சொன்னான்:

''அந்தப்புர வாயிலில் ராஜகுமாரன் நிற்கிறான். பிராமணர்களுக்குத் தன் பொருள்களைக் கொடுத்து விட்டு — மங்களம் ஆகுக — எல்லாரிடத்திலும் சொல்லி விடை பெற்றுக் கொண்டு தண்டகாரண்யம் போவதற்கு முன் தங்களைக் காண விரும்புகிறான்'' என்றான். மன்னன் அழைத்து வரச் சொன்னான்.

ராமன் வந்து கொஞ்சம் எட்டி நின்று அஞ்சலி செய்தான். ராமனைக் கண்டதும் படுத்திருந்த அரசன் குதித்தெழுந்து மகனைக் கட்டி அணைத்துக் கொள்ளச் சென்றான். கைகளை விரித்துக் கொண்டு தாவிப் போனவன் ராமனை அடைவதற்கு முன்னே, மூர்ச்சையடைந்து தரையில்விழுந்தான்.

ராமனும் லக்ஷ்மணனும் கீழே விழுந்த மன்னனைத் தூக்கிப் படுக்கையில் உட்கார வைத்துத் தடவிக் கொடுத்தார்கள். பிறகு ராமன், ''பெருமானே! விடைபெற்றுக் கொண்டு போக வந்திருக்கிறோம். என்னுடன் லக்ஷ்மணனும் வைதேஹியும் வனத்துக்கு வருகிறார்கள். எவ்வளவு சொல்லியும் கேட்காமல் அவர்கள் என்னுடன் வர வேண்டும் என்று தீர்மானித்திருக்கிறார்கள். எங்களுக்கு அனுமதி கொடுத்து ஆசீர்வதித்து அனுப்புவீராக'' என்றான்.

அப்போது தசரதன் ''கைகேயிக்கு நான் கொடுத்த வரத்தால் நான் கட்டுப்பட்டேன். நீ கட்டுப்படவில்லை. நீ என்னை மதிக்காமல் உன் பலத்தால் அயோத்தியைப் பற்றிக்கொண்டு அரசனாக இருக்கலாமே!'' என்றான்.

முன்னால் மனத்தில் மட்டும் இருந்த கருத்தை இப்போது அரசன் வியக்தமாகச் சொன்னான்.

''தாங்கள் இன்னும் ஆயிரம் வருடங்கள் ஆண்டு வர வேண்டிய இந்த ராஜ்யத்துக்கு நான் ஆசைப்படவில்லை; நான் பதினான்கு வருடம் ஆரண்ய வாசம் செய்து விட்டுத் திரும்பி வந்து உம்முடைய பாதங்களைத் தொட்டு வணங்குவேன்'' என்றான் சக்கரவர்த்தித் திருமகன். அரசனுடைய ஆசை இல்லை என்று தீர்ந்தது.

''குலத்தின் புகழைப் பெருக்குவாய் மகனே! போய்த் திரும்பி வா. மங்களமாகுக. பயம் என்பது உன் வழியைவிட்டு விலகி நிற்கக் கடவது. தருமத்தினின்று பிறழாத உத்தமனே! திட சங்கற்பம் கொண்ட வீரனே! யாரும் உன் எண்ணத்தை மாற்ற முடியாது. ஆனால் இன்றே போக வேண்டாம். ஒரு ராத்திரி இருந்து விட்டுப் போகலாம். உன்னை நான் மனதாரப் பார்த்துத் திருப்தி அடைய விரும்புகிறேன். நாளை விடிந்ததும் நீ போகலாம் ராமா! நான் கைகேயியால் வஞ்சிக்கப் பட்டேன். அவளுக்கு நான் தந்த வரத்தால் கட்டுப்பட்டு இந்தப் பாப காரியத்தைச் செய்ய வேண்டிய தாயிற்று. அவள் என்னை மோசம் செய்துவிட்டாள். சாம்பல் பூத்து மூடிய நெருப்பைப் போல் மறைந்திருந்த அவளுடைய எண்ணத்தை நான் அறியாமல் ஏமாந்து போனேன். அவள் வலையில் சிக்கி விட்டேன். நீயோ தந்தையின் சொல்லைச் சத்தியமாக்கியே தீருவேன், தந்தையைப் பொய்யனாக்கி விடமாட்டேன் என்று ராஜ்ய பாரத்தையும் நாட்டையும் விட்டு வனம் போகத் தீர்மானித்து விட்டாய். உலகத்தில் உன்னைப் போல் சிரேஷ்ட குமாரன் வேறு யார் இருக்கிறான்? இந்த அனர்த்தம் என் சம்மதம் பெற்றதல்ல என்று சத்தியமாகச் சொல்லுகிறேன்'' என்று பரிதாபமாக அரசன் கூறினான்.

அந்திம காலத்தில் ராமனுடைய அன்பை இழக்காமல் உயிர் நீக்க வேண்டும் என்பது தசரதனுடைய ஆசை.

''தந்தையே! பரதனுக்குச் சொல்லியனுப்பி நீர் என் தாய்க்குத் தந்த வரத்தைப் பூர்த்தி செய்யவும். ராஜ்யத்தை நான் மனத்தால் துறந்தாகி விட்டது. என் உள்ளம் இப்போது வனத்தைப் பற்றி நிற்கிறது. உம்முடைய மனத்தில் ஒரு குறையும் வருத்தமும் இல்லாமல் நீர் பரதனுக்குப் பட்டாபிஷேகம் செய்து ஆசீர்வதித்து முடிக்க வேண்டும். நான் இப்போது இந்த ராஜ்யத்திலாவது வேறு சம்பத்திலாவது ஒரு சிறிதும் மனத்தை வைக்கவில்லை. தந்தையே, துக்கத்தை முற்றிலும் அகற்றிக்கொள்வீராக; கண்ணீர் விடாதீர். சமுத்திரம் உலர்ந்து போகுமா? அதைப் போன்ற நிராகுல நீர் நிலையை இழக்காதீர். உம்மைச் சத்தியவாதியாக்குவதே என் ஆசை. உம்மைப் பொய்யனாக்கி விட்டு நான் மற்றப் பொருள்களை வைத்துக் கொண்டு என்ன சுகம் சம்பாதிப்பேன்? நீர் மனத்தை முற்றிலும் சாந்தப் படுத்திக் கொண்டு துக்கத்தை விலக்கி விடவேண்டும். நான் வனத்தில் ஆனந்தமாகக் காலம் கழிப்பேன். வனத்தில் உள்ள, அழகும் சுகமும் வேறு எங்கே

கிடைக்கும்? தகப்பனாராகிய நீரே எனக்குத் தெய்வம். ஆனபடியால், நான் வனம் போவது தெய்வ வாக்கின் படியாகும். பதினான்கு வருடங்கள் தீர்ந்த பின், என்னை மறுபடியும் பார்ப்பீர். விசனப்படாதீர். இந்த ராத்திரி இருந்து நாளை போகச் சொல்கிறீர். அதில் என்ன பயன்? இன்று போலவே மறு நாளும். ஆனபடியால் இன்றே போக அனுமதி தருவீராக'' என்றான்.

அதன் பிறகு தசரதன் சுமந்திரனுக்குச் சொன்னான்: ''சரி, அப்படியானால் நம்முடைய சேனைத் தலைவர்களுக்குச் சொல்லி நல்ல சதுரங்க சேனை ஒன்றைத் தயார் செய்து ராமனுடன் வனம் போக உடனே உத்தரவிடுவாய். ராமன் காட்டில் சுகமாக ரிஷிகளுடன் காலம் கழிப்பதற்கு வேண்டிய சகல பொருள்களும் திரட்டி அமைத்துச் சேனையுடன் அனுப்பிவிட வேண்டியது. தனம், தானியம் ஆட்கள் எல்லாம் ஒரு குறைவுமின்றித் திரட்டி அனுப்ப வேண்டியது.''

பாவம், வனவாசம் என்றால் அரசர்கள் செய்யும் சுற்றுப் பிரயாணம் போல் செய்துவிடலாம் என்று பார்த்தான் தசரதன்.

கைகேயி பக்கத்திலிருந்தவள் சிரித்தாள். ''அப்படியா? வரத்தை மிக அழகாகப் பூர்த்தி செய்கிறீர்கள்! 'பரதனுக்கு ராஜ்யம் கொடுத்தேன்' என்று சொல்லி ராஜ்யத்தில் உள்ள செல்வத்தை யெல்லாம் வாரி எடுத்து ராமனுக்குக் கொடுத்து விட்டு ராஜ்யத்தைப் பாழ் செய்து அதைப் பரதனுக்குத் தருகிறீரா?'' என்றாள் கைகேயி.

தசரதன் கோபாவேசமாகப் பேசலானான். ராமன் அமாத்தியர்களைப் பார்த்துச் சொன்னான்:

''வணக்கத்துடன் நான் கேட்டுக் கொள்கிறேன். நான் வனம் போக நிச்சயித்தது இந்த வகையில் அல்ல. ராஜ்ய போகங்கள் அனைத்தையும் விட்டுவிட்டுத் தவசிகளின் தவ வாழ்க்கை வாழ நான் வனம் செல்லுகிறேன். பரிவாரமும் பொருள்களும் எனக்கு எவ்விதத்தில் உதவும்? யானையைத் தானம் செய்த பின் யானையைக் கட்டும் கயிற்றில் ஆசை வைப்பதா? தயவு செய்து மரவுரியைக் கொண்டு வரச் சொல்லுக! மண் வெட்டியும் கூடையும் கொண்டு வரச் சொல்லுக. அவை போதும்'' என்றான்.

கைகேயி ஓடிப் போய்த் தயாராக வைத்திருந்த மரவுரியைக் கொண்டு வந்து ராமனுக்குத் தானே வெட்கமில்லாமல் கொடுத்தாள். உடனே அவ்விடத்திலேயே ராமன் மரவுரியை உடுத்திக் கொண்டான். ரிஷியைப் போல் பொலிவடைந்தான். லக்ஷ்மணனும் தன் ஆடையைக் களைந்து மரவுரியைத் தரித்தான். தசரதன் இதையெல்லாம் செய்கையற்றுப் பார்த்துக் கொண்டேயிருந்தான்.

பிறகு, சீதைக்காகவும் மரவுரி கொண்டு வந்தாள் கைகேயி. அதை வாங்கிச் சீதை இன்னது செய்வது என்று தெரியாமல் ஒரு கணம் திகைத்து நின்றாள். அவள் அதற்கு முன் இத்தகைய ஆடையை உடுத்தினதில்லை யல்லவா?

பக்கத்தில் கந்தர்வ ராஜனைப் போல் அழகு வீசிக் கொண்டிருந்த ராமனைப் பார்த்துக் கொஞ்சம் கூச்சத்துடன், ''இதை எப்படிக் கட்டிக் கொள்வது? சொல்லுவீர்'' என்றாள்.

ராமன் அதை எடுத்துச் சீதை உடுத்தியிருந்த பட்டின் மேல் மரவுரியையும் உடுத்தித் தானே முடி போட்டான். அச்சமயம் பார்த்துக் கொண்டிருந்த அந்தப்புர ஸ்திரீகள் அனைவரும் 'கோ' என்று அழுதார்கள். . தசரதன் நினைவு இழந்து விழுந்து விட்டான்.

மூர்ச்சை தெளிந்த பிறகு கைகேயியை அனைவருக்கும் எதிரில் தசரதன் மிகக் கடுமையாகத் திட்டினான். ஆனால் அவள் அதைப் பொருட்படுத்தவில்லை. தவிர இப்போது யார் என்ன செய்ய முடியும்? சீதை வனம் போவது கைகேயிக்காக அல்ல. ராமனுடன் வனம் போவதிலேயே அவள் சுகம் கண்டாள். யார் சொல்லியும் அவள் நிற்க மாட்டாள். போகும்போது தரையைப் பார்த்த வண்ணம் அரசனை வணங்கி ராமன் சொன்னான்:

''தந்தையே! தாய் கௌசல்யா தேவியை இவ்விடம் விட்டு விட்டுப் போகிறேன். ஒப்பற்றவள். யார் பேரிலும் அவளுக்குக் கோபம் இல்லை. மகராஜனே! அவளைச் சரியாகப் பார்த்துக் கொள்ளவும். என்னை விட்டுப் பிரிந்து இதற்கு முன் அவள் கண்டிராத துக்கத்தில் — பெருந் துயரக் கடலில் — அவள் மூழ்கினாளாயினும் உமக்காக உயிரை வைத்துக் கொண்டிருக்கிறாள். நான் வனத்திலிருந்து திரும்பி வரும்போது அவளை நான் இங்கேயே காண வேண்டும். யமாலயத்தில் தேடும்படி நேராமல் பார்த்துக் கொள்ளுங்கள்'' என்று துக்கம் தாங்காமல் சொன்னான்.

ராமன் இப்படிச் சொல்லி விட்டு வெளியே செல்லும் காட்சியைப் பார்க்கக் கிழ அரசனால் சகிக்க முடியவில்லை. கண்களைக் கையால் மூடிக் கொண்டான். **(தொடரும்)**

விசேஷ அளிப்பு!

ஸ்டாக் உள்ளவரை





ஒவ்வொரு டின்னிலும் உள்ள போர்ன்விடாவின் அளவு
எப்போதும் போல் தான் (450 கிராம் நெட்)

சக்திக்கும் வலிமைக்கும்–மற்றும் தீஞ்சுவைக்கும்

காட்பரிஸ் போர்ன்விடா!

Bensons-2536. Tm


அம்புலிக்கு அப்பால்....
21
ஆனால் என்ன?


ஏன் செவ்வாய் கிரகத்தை உங்களுக்குப் பிடிக்கவில்லையா? அல்லது என்னை விட்டுப் பிரிய அவசரமா?
இரண்டுமில்லை என் லட்சியத்தை அடையத் துடிப்பு.
உங்கள் லட்சியமும் பச்சைக் கிரகமும் எங்கும் ஓடிப் போய்விடாது. நீங்கள் இந்தச் செவ்வாய்க் கிரகத்தைச் சுற்றிப் பார்க்க வேண்டாமா? நாளைக் காலை வருகிறேன், உங்களை அழைத்துப் போக.
சோனியா பிரியா விடை பெற்றுச் செல்வதைப் பார்த்தபடியே நின்றான் பிரயாகர்.
ஜோசப்பும் பிரயாகரும் மறுநாள் பூமியில் இல்லாத பல விசித்திரங்களைச் செவ்வாய் கிரகத்தில் பார்த்தார்கள்.
தொடரும்...

அரசும் அற்பமே!

ரா. கணபதி



"சிவாஜி சிவபதம் அடைந்து விட்டார்" என்ற செய்தி சத்தாராவில் பரவி மக்களை எல்லாம் உலுக்கி விட்டது.

ஆசைகளை அறவே களைந்து விட்ட ஸமர்த்த ராமதாஸ் ஸ்வாமிகளின் கண்களும் ஒரு கணம் கசிந்தன.

"அப்பனே, மாருதி! ஐயனே ராமசந்திரா!" என்று அரற்றிவிட்டுத் தியானத்தில் ஆழ்ந்தார்.

நிஷ்டை கலைந்து எழுந்த பின் அவரிடம் அசாதாரணமான ஒரு தெளிவு காணப்பட்டது.

நாட்டின் நிலை குறித்து அடியார்கள் கலவரத்துடன் பேசிக் கொண்டிருக்கையில் ஸமர்த்தர் மட்டும் உலகில் சேராத விநோதப் புன்னகையுடன் அமர்ந்திருந்தார்.

ராமதாஸி ஒருவர்—ஸமர்த்த ராமதாஸரின் அடியார்களுக்கு 'ராமதாஸி' என்று பெயர்—அவரிடம் ஸ்வாதீனமாகக் கேட்டார்: "ஸ்வாமி! தங்களால் எப்படிக் கவலையற்றிருக்க முடிகிறது? எங்களை விட அதிகப் பொறுப்புப் பெற்றவர் தாங்கள் அல்லவா? இந்த மகாராஷ்டிர மகாசாம்ராஜ்யமே தங்களுடையது அல்லவா? பவானி மாதாவின் செல்லப் பிள்ளை சிவாஜியால் வளமும் பலமும் பெற்ற இந்த நாடு வெளிப் பகைவர்களாலும் உட்பகைவர்களாலும் சிதிலமாகிற நிலை ஏற்பட்டுவிட்ட இந்த நிலையில் தாங்கள் எப்படிக் கலங்காமல் இருக்கிறீர்கள்?"

ராமதாஸ் பகபகவென்று சிரித்தார். "அட பைத்தியமே! மகாராஷ்டிர சாம்ராஜ்யம் என்னுடையது என்கிறாயே? இந்தப் பரந்த உலகில் எவனுக்குமே ஒரு பிடி மண்—ஏன், ஒரு பொடி மண்கூட—சொந்தம் இல்லை! அனைத்தும் ராமச்சந்திரப் பிரபுவின் உடைமையல்லவா? அதைப் பற்றிக் கவலைப்பட நமக்கேது உரிமை? நாட்டு நலனுக்காக நம் கடமையை ஆற்றுவதற்கே நாம் உரிமை பெற்றிருக்கிறோம். கவலைப்பட நமக்கு உரிமை இல்லை. எது எது, எப்படி எப்படி நடக்க வேண்டும் என்பதை ஐயன் அறிவான்! அவன் சங்கற்பப்படியே நடக்கும். அற்பர்களான நாம் கவலைப்படுவதாவது!" என்றார்.

அவர் அப்படிப் பேசியது அடியார்களுக்கு வியப்பாக இருந்தது.

சாமானிய சந்நியாசி ஒருவர் அரசியல் விவகாரங்களிலிருந்து விலகி யிருந்தால் அது நியாயம். ஆனால் ஸமர்த்த ராமதாஸ் ஸ்வாமிகள் சாமானிய சந்நியாசி அல்ல. அவர் ஒரு பெரும் நாட்டை ஆண்ட அதிசய ஆண்டி. ஆம், சிவாஜி மகாராஷ்டிரத்துக்குப் பெயரளவிலேயே தன்னை மன்னனாகக் கருதினான். அதன் உண்மையான மன்னனாக ஸமர்த்தரையே கொண்டிருந்தான் அவன். முகலாய ஆதிக்கத்தை எதிர்க்கும் வீர உணர்வை மராட்டியருக்கு ஊட்டியதற்கு முதற் காரணம் ராமதாஸரே என்பதை அவன் அறிவான். அவர் மக்களிடையே ஒருகாலும் போர்ப் பிரசாரம் செய்யவில்லை. அவர் செய்த பிரசாரம் எல்லாம் ராமபக்தி தான். 'ஸ்ரீராம ஜயராம ஜய ஜயராம' என்ற திரயோதசாக்ஷரி மந்திரத்தையே அவர் சென்ற இடமெல்லாம் பரப்பினார். அவர் பாதம் பதித்த இடங்களில் எல்லாம் மாருதிக்குத் தான் ஆலயம் எடுத்தாரேயன்றி ராணுவப் பாசறை ஏதும் அமைக்கவில்லை. ஆயினும் தர்ம மூர்த்தமாக, கர்மயோகியாக ஆதர்ச மானுட வாழ்வு வாழ்ந்த ராகவனின் நாமத்தையும், சரித்திரத்தையும் பரப்பியதன் மூலமே அவர் மக்களை விழிப்புறச் செய்து, தர்மத்தில் ஆக்க சக்தியுடன் ஈடுபடச் செய்தார். மகா வீரனை ஆஞ்சநேயனின் பெருமையைப் பரப்பியதன் மூலமே மக்களிடம் அடக்கம் நிறைந்த வீர எழுச்சியை உண்டாக்கி விட்டார். 'தாஸ போத'த்தில் அவர் விவரித்த அரசியல் முறையைத் தான் சிவாஜி தன் ஆட்சிக்கு வழிகாட்டியாகக் கொண்டான். எனவேதான் ஔரங்கசீப்பை எதிர்த்து ஹிந்து சாம்ராஜ்யம் எழுப்பிய சிவாஜி, அந்த சாம்ராஜ்யத்தின் உண்மைச் சிற்பி ராமதாஸரே எனக் கருதினான்.

"இந்த ராஜ்யத்தைத் தங்களுக்கே அர்ப்பணம் செய்தேன்" என்று அவருக்கு நாட்டைத் தத்தம் செய்தான் சக்தியும் பக்தியும் ஒருங்கே கூடிய சிவாஜி.

"ஆண்டவன் ஒருவனே எந்நாட்டையும் ஆண்டு அருள் புரிபவன். ஆண்டி அல்ல. ஸ்ரீ ராமனின் பிரதிநிதியாக நாட்டை ஆட்சி புரிந்து வா" என்றார் ஸமர்த்தர்.

"எனக்குத் தாங்கள்தான் ஸ்ரீ ராமன்" என்று விடாப்பிடியாகக் கூறினான் சிவாஜி.

"அப்படியானால் என்னிடம் மாட்டிக் கொண்டாய். உன்னை மடக்குகிறேன், பார்! ஸ்ரீ ராமனுக்கு ஆட்சி செலுத்தவே பிடிக்காது தெரியுமா? அயோத்தி ராஜ்யத்தைத் தம்பி பரதனுக்குத் தந்தார். வாலியை வென்று பெற்ற கிஷ்கிந்தா ராஜ்யத்தை அப்படியே தூக்கி சுக்ரீவனிடம் கொடுத்தார். பெரும் பிரயத்தனம் செய்து ராவணனை வென்ற பின், லங்காபுரியை அலாக்காக எடுத்து விபீஷணனுக்கு அளித்தவர் அவர்."

ஸமர்த்தரை இடைமறித்தான் சிவாஜி. "குறுக்கிட்டுப் பேசுவதற்கு க்ஷமிக்க வேண்டும். ஸ்ரீராமன் ஆதர்ச உலக வாழ்வை வாழ்ந்து காட்டியவர். அப்படிப்பட்டவர் தியாகத்தின் பெருமையை உணர்த்துவதற்காக ராஜ்யங்களைத் துறந்தார். தாங்களோ துறவி. உலகில் எப்படி வாழ்வது என்பதற்கு ஸ்ரீராமன் உதாரண புருஷன் எனில், உலகை விட்டு எப்படி வாழ்வது என்பதற்குத் தாங்கள் உதாரண புருஷராக விளங்குகிறீர்கள். ஆதர்ச மனிதனான ஸ்ரீ ராமனின் தியாகம் நாட்டை விடுவதில் சுடர் விட்டது. ஆதர்சத் துறவியான தங்களுடைய தியாகம் நாட்டை எடுத்துக் கொண்டு ஆள்வதிலேயே சுடர்

விட வேணும் என்பது அடியேனுடைய பிரார்த்தனை.''

ஸமர்த்தர் வாய் விட்டுச் சிரித்தார். அந்தச் சிரிப்பே ஒப்புதல் தந்துவிட்டது.

''சிவா! என்னை எல்லோரும் ஸமர்த்தர் என்கிறார்கள். இந்தச் சமர்த்தை நீ அசடாக்கிவிட்டாய். உன்னை நான் மடக்கினதாகச் சொன்னேன்; என்னையே நீ மடக்கிவிட்டாய்!'' என்றார்.

''ஒரு நாளும் இல்லை. தாங்கள் என்றுமே ஸமர்த்தர்தான். ஸமர்த்தர் என்றால் என்ன? 'அர்த்தத்துடன் கூடியவர்', 'பொருள் பொதிந்தவர்' என்று பொருள். 'அர்த்தம்' என்றும் 'பொருள்' என்றும் உலகினர் பௌதிகச் செல்வத்தைக் குறிப்பிடுகின்றனர். ஆனால் பௌதிகமான பொருளுக்குப் பொருளே இல்லை — அர்த்தம் என்பது அனர்த்தமே — என்று ஆதி சங்கரர் ஓதியதை வலியுறுத்தி வருபவர் தாங்கள். மெய்ப் பொருளான ராமனைக் கண்டு அதிலேயே பதிந்தவர், பொதிந்தவர் தாங்கள். ராஜ்ய மாகிற பெரிய செல்வத்தையும் தாங்கள் செல்வமாகக் கருத மாட்டீர்கள் என்பதாலேயே தங்களிடம் ஒப்படைக்கிறேன்'' என்று பணிவுடன் கூறினான் சிவாஜி.

ஸமர்த்த ராமதாஸ் சிம்மாதனத்தில் ஏறி அமரவில்லை. எனினும் அவரையே தன் இதய சிம்மாதனத்தில் அமர்த்திக் கொண்டு அவரது பிரதிநிதியாக ஆண்டான் சிவாஜி.

உண்மை மன்னர் அவரே என்று பாருக்கு அறிவிக்கு முகமாகக் காஷாயக் கொடியைத் தேசியத் துவஜமாகக் கொண்டான். போரின் தேவி கொற்றவை என்பதோடு, பிரத்தியட்சமாகவே தனக்குத் தேவி பவானி அநுக்கிர



கம் செய்திருந்த போதிலும், ராமதாஸ ஆட்சியைப் பிரகடனம் செய்வதற்காக 'ஜய் பவானி' என்ற பிரமாண வாசகத்தை மாற்றி 'ராம் ராம்' என்று கூறி வணக்கம் தெரிவிக்கும் முறையை ஏற்படுத்தினான்.

முற்றிலும் ராமதாஸரின் ஆலோசனைப் படியே நாட்டை ஆட்சி புரிந்தான். அவனது புகழ் பெற்ற 'அஷ்டப் பிரதானி' அமைச்சரவையாட்சி ஸமர்த்தர் அமைத்துத் தந்ததே.

சிவாஜியின் தியாகத்தைத் தேசம் போற்றியது. ஆயின், அதனினும் பெரும் தியாகம் ஆட்சிப் பொறுப்பேற்ற ராமதாஸருடையதே எனக் கருதினான் சிவாஜி.

'பரமேசுவரன், தேவி பவானி, ஆதி குரு தாதாஜி கொண்டதேவ், அருமை அன்னை ஜீஜா அனைவரும் ஒருருக் கொண்டு ராமதாஸராக வந்து எனக்காக ஆட்சி செலுத்துகின்றனர். என்னைப் போல் பாக்கியசாலி எவருண்டு?' என்று பெருமிதம் உற்றான்.

விரைவிலேயே தனது மாபெரும் துர்ப்பாக்கியத்தை உணர்ந்தான் சிவாஜி. தனது மூத்த மகன் சாம்பாஜியாக அந்தத் துர்ப்பாக்கியம் உருவெடுத்திருப்பதைக் கண்டு மனம் நொந்தான். ஒழுக்கமற்ற, இரக்கமற்ற, மனித மிருகமாகச் சாம்பாஜி வளருவதைக் கண்டு ராமதாஸரிடம் முறையிட்டுக் குறை தீர்க்கக் கதறினான்.

''வெயில் இருந்தால் நிழலும் இருக்கத் தான் செய்யும். வாழ்வாங்கு வாழ்ந்தாய் அல்லவா? அதற்கு மாற்றும் வேண்டியது தான்'' என்றார் ஸமர்த்தர்.

''அது சரி ஸ்வாமி! ஆனால் எனக்குப் பின் சாம்பாஜியின் ஆட்சியில் நாடே பாழாகி விடுமே! அரும் பாடு பட்டு நிறுவிய அரசு இவ்வளவு எளிதில் அழிய விடலாமா?''

''தனி மனிதனுக்கு இன்பத்தைப் போல் துன்பமும் தேவை எனில், தேசத்துக்கும் அது தேவைதான். ராகவனின் லீலையில் நாம் தலையிடக் கூடாது. கடமைகளை எந்நாளும் தளராது செய்வோம். ஆனால் கவலைப்பட நமக்கு உரிமை இல்லை'' என்று விட்டுக் கொடுக்காமல் கூறி விட்டார் ராமதாஸர். அவரையே அதிசயத்துடன் உற்று நோக்கினான் சிவாஜி.

அடர்ந்த தாடியும் தளர்ந்த தேகமும் மறைந்து பாலனாக நின்றார் ராமதாசர்.

அந்தப் பாலன் ஜம்புக்கிராம் ஆலயத்தில் மாருதியின் முன் கண்மூடி நின்றான்.

அவனது தந்தை சூர்யாஜிபந்தும் அன்னை ராணு பாயும் ஆலயத்திலிருந்து கிளம்பும் போதும் அவனது தியானம் முடியவில்லை.

அவனைத் தட்டி எழுப்பி, ''நாராயணா, வீட்டுக்குப் போவோம் வா'' என்றனர் பெற்றோர். (அவனது இயற் பெயர் நாராயணன் என்பது).

''வீடா, இதுதான் வீடு'' என்றது அஞ்சு வயசுப் பிஞ்சு.

''என்னடா கண்ணே, இப்படிச் சொல்கிறாய்! உன் அன்பான அப்பா அம்மாவாகிய எங்களிடம் இப்படிப் பேசலாமா?''

''அம்மாவாவது, அப்பாவாவது! அதோ அவன்தான் அம்மா — அப்பா'' என்று ஆஞ்சநேய ஸ்வாமியை அன்பு தெறிக்கும் கண்களுடன் பார்த்தான் பாலன்.

அவனை மறுபடியும் வீட்டுக்குக் கொண்டு வருவது பெரும் பாடாயிற்று.

பாலன் நாராயணன் யுவனானான்.

இனி போல் ஒரு பெண்ணைக் கலியாணம் செய்து வைத்தால் நாராயணனை இவ்வுலகத்துக்குத் திருப்பி விடலாம் என்று எண்ணித் திருமணத்துக்கு ஏற்பாடு செய்தனர் பெற்றோர்.

தன்னை மறந்த நிலையில் அவனும் எப்படியோ உடன்பட்டு விட்டான்.

மணமேடையில் மராட்டிய வழக்கப்படி 'சாவதான்' ஓதினர் மறையாளர். 'சாவதான்' என்றால் 'ஜாக்கிரதை' என்றுஅர்த்தம்.

அவ்வளவுதான்! நாராயணன் ஓர் ஆவேசம் பெற்றான். மணமேடையை விட்டு வெறியாக ஓடினான். ஸ்ரீ ராமனின் சாந்நித்தியம் நித்தியமும் பொலிகின்ற நாசிக்—பஞ்சவடியை அடைந்த பின்தான் ஓட்டத்தை நிறுத்தினான். அங்கு இராமத்தியானம் என்கிற பேதம் அறியாமல் இராமத்தியானத்தில் பன்னிரு ஆண்டுகள் மூழ்கினான்; ராமதாஸர் ஆனான்.

''நல்ல யௌவனத்தில் ரதி போன்ற மணப் பெண் பக்கலில் நிற்கும்போது கலியாண மேடையை விட்டு ஓடி வந்த விராகி தாங்கள். தங்களால் அரசையும் நொடிப் பொழுதில் நீத்துவிட முடியும். என்னால் முடியவில்லை. பார்த்துப் பார்த்துப் பயிராக்கிய விருட்சத்தில் புல்லுருவி பாய்கிறது'' என்று விம்மினான் சிவாஜி.

''மனத்தை மரத்துப் போகுமாறு செய்து கொள். அந்த மன மரத்தில் புல்லுருவி பாயாமல் காத்துக் கொள். ராஜ்யம் வெளி விஷயம். அதை முற்றிலும் உன்னால் சரி செய்ய முடியாது. மனமோ உன் சொந்த விஷயம், அதை முற்றிலும் கட்டி ஆளுவது உன்னால் முடிகிற காரியம். ராகவனிடம் சரண் புகுந்து உன் ஆன்மாவைக் காத்துக் கொள். போ'' என்று கூறிவிட்டார் துறவி.

அன்று ஸ்ரீ ராமதாஸ மடத்தை விட்டுச் சென்ற சிவாஜி இன்று உலகை விட்டே சென்றுவிட்டான்.


சிவாஜியின் மறைவுக்குப் பின் மகாராஷ்டிரம் க்ஷீணதசை அடைந்தது.

முரடன் சாம்பாஜிக்கு மந்திரிகளின் ஆதரவு இல்லை. இளையவன் ராஜாராமை அரசனாக்கினர். அவனுடன் பயங்கரமான போரிட்டு அரசைக் கைப்பற்றினான் சாம்பாஜி.

இச்சமயத்தில் அவனது துன்மந்திரி கலுஷாஷ் / ஒரு தந்திர உபாயம் சொல்லிக் கொடுத்தான். ''மக்களின் ஆதரவும், மந்திரிகளின் ஆதரவும் இன்றி அதிக காலம் அதிகாரம் வகிக்க முடியாது. எனவே இப்போது ஒரு சாமர்த்தியம் செய்ய வேண்டும். பெயரளவுக்கு ராமதாஸரிடம் இந்த ராஜ்யத்தை அர்ப்பணம் செய்துவிடு. அப்போது தந்தை சென்ற வழியில் நீயும் சென்றதாக ஒரு நல்ல பெயர் ஏற்பட்டு விடும். பிறகு இஷ்டப்படி நடக்கலாம்'' என்றான்.

ராமதாஸரை வந்தடைந்தான் சாம்பாஜி.

''ராஜ்யம் தங்களுடையது. தங்களது அநுக்கிரகத்துடனும், ஆலோசனையுடனும்



உங்கள் வதனம் மலரிதழ் மென்மையும் இளமையின் பொலிவும் பெற பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீம்



உங்கள் சருமத்தில் இயற்கையாக இருக்கிறது ஈரத்தன்மை. அதைப் பாதுகாக்கிறது பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீமிலுள்ள விசேஷ 'ஹியுமெக்டன்ட்'. பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீம் மென்மையும், மிருதுத்தன்மையும் இளமையும் அளிக்கின்றது. தூசு, சீதோஷ்ண மாறுதல் ஆகியவற்றில் இருந்து உங்கள் சருமத்தை பாதுகாக்கின்றது. வெண்பனி போன்ற லேசான பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீமை தனியாகவும் உபயோகிக்கலாம்; முகப்பவுடருக்கும் படிமானமாகவும் உபயோகிக்கலாம். அப்போது ஒப்பனையும் மணிக்கணக்கில் கலையாமல் கவர்ச்சியாக விளங்கும்.

சீஸ்ப்ரோ பாண்ட்ஸ் இன்கார்போரேடெட்
(வரையறுக்கப்பட்ட பொறுப்புடன்
யு.எஸ். ஏவில் இணைக்கப்பெற்றது)

பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீம்-
பவுடர் பூச்சிற்குத் தலைசிறந்த ஓர் படிமானம்

P-4932A Rea

நான் ஆட்சி புரிய அனுமதிக்க வேணும்'' என்று வேண்டினான் நாடகப் பணிவுடன்.

ஆனால் கவி குலாஷின் சாமர்த்தியம் சமர்த்தரிடம் பலிக்குமா?

''சாம்பா! தன்னைத் தானே ஆண்டு கொள்ளத் தெரியாதவர்களிடம் தேசம் அகப்பட்டுக் கொண்ட போது, அதில் ஒரு துறவி குறுக்கிடுவது விபரீதத்திலேயே முடியும். போய் வா!'' என்று நிர்த்தாட்சண்யமாகக் கூறிவிட்டார் ராமதாஸர்.

அந்தச் சமயத்தில் அவனுக்கு ''எதிர் சாமர்த்தியம்'' செய்திருக்கலாம் அவர். ராஜகுரு என்ற விருதை அநாயாசமாகப் பெற்று, தன் அதிகாரத்தை வலுப்படுத்திக் கொண்டிருக்கலாம். ஆனால் பிரபுவின் அடிமைக்கு — ராம தாசருக்கு — அதிகாரத்தினால் ஆவதென்ன?

ஓர் இக்கட்டில் மாபெரும் ராஜ்யாதிகாரத்தை ஏற்ற அத்துறவி இப்போது அதனைப் புல்லினும் புல்லியதாகக் கருதி ஒதுக்கி விட்டார்.

'துறவி ஏன் அரசியலில் ஈடுபடுகிறார்?' என்று அன்று அவரிடம் குறைப்பட்டுக் கொண்டவர்கள் உண்டு. 'சரியான தருணத்தில் அரசாட்சியில் தம்மை வலுப்படுத்திக் கொண்டு சாம்பாஜியை அடக்காமல் ஒதுங்குகிறீரே' என்று இன்று அவரிடம் குறைப்பட்டுக் கொண்டவர்களும் உண்டு.

ஆனால் குறைப்பட்டுக் கொண்டவர்கள் குறுகிய பார்வையாளர். அவரோ ஸ்ரீராம லீலையைக் கண்ட நிறைந்த பார்வையாளர்.

மழை பொழிய வேண்டிய சமயத்தில் கருமுகிலானார்; வெயில் அடிக்க வேண்டிய சமயத்தில் வெயிலானார். சாமானிய மக்கள் மழைகாலத்தில் 'மழை ஓயாமல் பெய்கிறதே' என்றும், வெயிற் காலத்தில் 'கனலாகக் கொளுத்துகிறதே' என்றும் குறைப்பட்டுக் கொண்டுதான் இருப்பார்கள்!

அந்நிய ஆதிக்கத்தில் ஆஸ்திகம் இழந்திருந்த மகாராஷ்டிரத்தில் மீண்டும் ஆன்மிகம் ஊற்றெடுத்தது. அரசியல் எக்கேடு கெட்டாலும் இந்த ஆன்மிகம் அதை நிச்சயம் காப்பாற்றும் என்று கண்டார் ராமதாஸர்.

''ஆஹா! நீர் நிறைய ஓடுகிறது; நீராடலாம், நீர்க்கடன் தரலாம்'', என்று நிம்மதியுடன் பாடிக் கொண்டு, உடலை உகுத்தார் — சிவாஜி மறைந்த ஓராண்டுக்குள்ளேயே!

ஒரு சாம்ராஜ்யத்தையே துச்சமாகக் கருதி ஒதுக்கிய சமர்த்த ராமதாஸரை, பிறர் பொருளைக் கையாளும் தீண்டாத வைஷ்ணவனுக்கு உதாரணமாகக் காட்டியுள்ளார் சைத்திரிகர் கனு தேசாய்.



கண்டுகொள்க

ஸூப்பர் ஸர்ஃப் மூலம் செய்த ஒரே ஒரு சலவை, வேறெந்த சலவைப் பவுடரினாலும் செய்த 2 சலவைகளை விட அதிக வெண்மை அளிக்கிறது





விரிவான ஆராய்ச்சிக்கூட சோதனைகள் இதனைப் பன்முறை நிரூபித்துள்ளன. அமோகமான சலவைத் திறன், கண்மறைவான அழுக்குகளையும் விரட்டிவிடும். காண்போர் பொறாமைப்படும் கற்பனைகடந்த வெண்மை. இந்தியாவின் தலைசிறந்த ரகம்: ஸூப்பர் ஸர்ஃப் (ஸூப்பர் ஸர்ஃப் என்ற பெயர்தரித்த பெட்டிகளிலும் பேக்கிங்குகளிலும் விற்கப்படுகிறது).

ஒப்பற்ற வெள்ளைவெளேர் சலவைக்கே ஸூப்பர் ஸர்ஃப்!

(வெண்மையூட்டும் சாதனம் எதுவும் சேர்க்கத் தேவையில்லை).

லின்டாஸ்-SU. 72-140 TH

இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு

அத்தியாயம் 5

ரமணி வீட்டு விவகாரங்களில் தலையிடுவதில்லை என்ற தீர்மானத்துக்கு வந்த சங்கரன், அடுத்த நாளிலிருந்து வெகு சீக்கிரம் ஆபீஸ் சென்று விடுவான். இரவு 'மெஸ்ஸில்' சாப்பாட்டை முடித்துக் கொண்ட பிறகு அறைக்குத் திரும்புவான்.

ஒரு நாள் சங்கரன் ஆபீஸ் போவதற்கு முன்னால் ரமணி போய்விட்டான். சங்கரன் அறைக் கதவைப் பூட்டிக் கொண்டு கிளம்பும் போது, ரமணியின் மனைவி வெளியே வந்தாள்.

''ஏன் எங்களைக் கண்டா பயமா இருக்கா?'' என்று கேட்டாள்.

''யாரை?'' சங்கரனுக்கு ஒன்றும் புரியவில்லை.

''என்னையும், கோபுவையும் கண்டா....''

''இல்லையே.... ஆபீஸிலே ஒரே வேலை....''

''ஆபீஸிலே ஒரே வேலைதான், மூந்தா நாள் ஏழாம் பிளாக்குங்கிட்டே யாரோடேயோ ரொம்ப நேரம் பேசிண்டிருந்தேளோ, சாயந்திரம் ?''

சங்கரன் புன்னகை செய்தான். ''எல்லாரும் என்னை வேவு பார்த்திண்டிருக்கான்னு எனக்குத் தெரியாது...''

''சொல்லுங்கோ இப்போ, ஏன் பயப்படறேள் ?''

''நான் ரொம்ப 'சென்ஸிடிவ்'. அன்னிக்கு மிஸ்டர் ரமணி, கோபுவை நான் வெளியே அழைச்சிண்டு போகக் கூடாதுன்னு சொன்னப்புறம்....''

''கோபு விஷயத்திலே அவருக்கு மட்டும் உரிமை இல்லே.... எனக்கும் இருக்கு.... நான் சொல்றேன்....''

சங்கரன் அவளை இடைமறித்தான். ''நீங்களே முதல் நாள் என்னைப் பார்த்தபோது சொன்னேள், கோபு விஷயத்திலே நான் அநுதாபம் காட்ட வேண்டாம்னு.... !''

''அப்போ சொல்லியிருக்கலாம், இப்போ சொல்லலே...''

''ஏன்....?''

''ஏனோ... நீங்க பழையபடி இருக்கலாம்.....''

''மிஸ்டர் ரமணி கோவிச்கண்டார்னு...?''

''மிஸ்டர் ரமணி, மிஸ்டர் ரமணி! ஏன் உங்களுக்கு அவரைக் கண்டால் அவ்வளவு பயம்?''



''அவர்....'' என்று சொல்ல வந்தான் சங்கரன், நிறுத்தி விட்டான்.

''சொல்லுங்கோ....''

''அவரைக் கண்டு நான் பயப்படலே.... அவரோட உரிமைகளை மதிக்கிறேன்...''

''அவருக்கு என்ன உரிமைகள் இருக்கு?''

''அவர் உங்களுடைய கணவர், கோபுவின் அப்பா. இதைத் தவிர வேறு என்ன உரிமைகள் வேணும்?''

''உங்களுக்கு அப்பா இருக்காரா?'' என்று கேட்டாள் ரமணியின் மனைவி.

''இருந்தார். ஆனால் எனக்கு நினைவு தெரிவதற்கு முன்னாலேயே போய் விட்டார்...''

''அம்மா?''

''அம்மா இப்போதான் போனாள். மூணு வருஷமாகிறது.'' அவள் சிறிது நேரம் மௌனமாக இருந்தாள். சங்கரனுக்கு அவள் ஏதோ யோசிக்கிறாள் என்று பட்டது.



கைக் கடிகாரத்தைப் பார்த்தான். மணி எட்டே முக்கால்.

''சரி, வரட்டுமா?''

''நீங்க என்ன நினைக்கறேள், மிஸ்டர் ரமணியைப் பத்தி?''

எட்டே முக்கால் மணிக்கு, ஆபீஸ் போகும் நேரத்தில் ஒரு மனைவி தன் கணவனைப் பற்றி 'என்ன நினைக்கிறீர்கள் அவரைப் பற்றி?' என்று கேட்டால் அதற்கு என்ன பதில் சொல்ல முடியும்?

''அவர் கோபுவிடம் நடந்து கொள்ளுவது எனக்குப் பிடிக்கவில்லை...'' என்றான் சங்கரன்.

''அவ்வளவுதானா?''

''அப்படின்னா?''

''நீங்க நல்லவரா யிருக்கலாம், ஆனால் வேஷம் போடறேள்...'' என்று கூறிவிட்டு உள்ளே போய் விட்டாள் ரமணியின் மனைவி.

சங்கரனுக்குத் தூக்கி வாரிப் போட்டது. எதற்காக இப்படிச் சொல்லி விட்டுப் போகிறாள்?... நாம் என்ன வேஷம் போடுகிறோம்? அவளுக்கு யார் மீது கோபம்? என்ன கோபம்?...

அன்று சாயந்திரம் அவன் ஆபீஸிலிருந்து வீடு திரும்பும்போது நல்ல தலைவலி. உடம்பெல்லாம் வலித்தது. இரண்டு தலைவலி மாத்திரைகளைச் சாப்பிட்டுவிட்டுப் படுத்தான்.

இரவு திடீரென்று கண் விழிப்பு ஏற்பட்டது. உடம்பெல்லாம் அனலாய்ச் சுட்டது. நல்ல தாகம் வேறு. குடிப்பதற்கு வெந்நீர் இருந்தால் தேவலை என்று தோன்றிற்று.

விளக்கைப் போட்டான். 'ஹீட்டரி'ல் வெந்நீருக்காகப் பாத்திரத்தை வைத்தான். அவனால் நிற்கவும் முடியவில்லை, உட்காரவும் முடியவில்லை.

கட்டிலில் படுத்தான். அசதியில் மறுபடியும் உறங்கி விட்டான்.

யாரோ எழுப்புவது போலிருந்தது. அவன் எழுந்தான். கோபுவின் அம்மா நின்று கொண்டிருந்தாள்.

''உடம்பு சரியில்லையா?''

''ஆமாம்...''

''ஹீட்டரைப் போட்டுட்டுப் படுத்துண்டுட்டேளே .... நான் விளக்கு எரியறதேன்னு எதேச்சையாப் பார்த்தேன். என்னைக் கேட்கக் கூடாதா?''

அவன் உள்ளே பார்த்தான். ''ரமணி இல்லையோ?...''

இந்திரா பார்த்தசாரதி

''அவர் இல்லே........ ஆக்ராவுக்குப் போயிருக்கிறார்...''

''உங்களுக்குத் தொந்தரவு?''

''தண்ணிச் சூட்டைக் காட்டிலும் உங்க உடம்புச் சூடுதான் அதிகமா இருக்கு...''

அவள் வெந்நீரை ஆற்றி அவன் கையில் கொடுத்தாள்.

''தாங்க்ஸ்...''

''மருந்து ஏதாவது சாப்பிட்டேளா?''

''சாப்பிட்டேன்... இரண்டு தலே வலி மாத்திரை.''

''காலம்பற டாக்டர் கிட்டே போங்கோ...''

அவன் வெந்நீரைக் குடித்தான். ''நீங்க போய்ப் படுத்துக்கோங்கோ'' என்றான் அவன்.

''ஏதாவது வேணும்னு என்னே எழுப்புங்கோ...''

அவன் தலேயசைத்தான். அன்றிரவு அதற்குப் பிறகு அவனால் தூங்க முடிய வில்லே. தெளிந்தும், தெளியாத பல எண்ணங்கள்... திடீரென்று சந்தோஷமாக இருக்கும், உடனே இருள் கவ்விறைற் போல வேதனே சூழும். நெஞ்சு வலித் தது. 'ஹார்ட் அட்டாக்கோ?' — அப்படியானால் தனக்கு இதுதான் கடைசி இரவு.... தனக்காக வருத்தப்படப் போகிறவர்கள் யார் இருக்கிறார்கள்?.. சுந்தரம், கோபு, அவனுடைய அம்மா.. ரமணி என்ன சொல்லுவான்? ''இந்த தொண்டிப் பய கடைசியிலே என் வீட்டுக்கு வந்தா மண்டையைப் போடணும்... சே, என்ன கஷ்டம்!...''

அவன் எழுந்து உட்கார்ந்தான். பின் மண்டை பிளந்து விடும் போலிருந்தது. 'மெனன்ஜிடீஸ்' என்று சொல்வார்களே அதுதானே இது?... இந்த வியாதி வந்தால் பிழைப்பது என்பது துர்லபம். பிழைத்துத்தான் என்ன செய்யப் போகிறோம்? யாருக்காக, யாருக்காக?...

அவன் மூன்று தலேயணைகளேச் சேர்த்தாற்போல் போட்டுக் கொண்டு கண்களே மூடிக் கொண்டான். கீழே விழுந்து கொண்டிருப்பது போல் உணர்ச்சி...கீழே, கீழே இன்னும் கீழே. அவன் விழுவதை யாராலும் தடுக்க முடியவில்லே... எங்கே போகிறோம்?... எங்கே வந்தோம்?... மேல் எது, கீழ் எது?......

எப்பொழுது தூக்கம் வந்தது என்று அவனுக்குத் தெரியாது. அவன் கண் விழித்தபோது நன்ருகப் புலர்ந்து விட்டது. கழுத்தருகே கையை வைத்துப் பார்த்தான். நன்ருகச் சுட்டது.

கட்டிலே விட்டு இறங்கினன்... கண்கள் இரவு சரியாகத் தூங்காத காரணத்தினல் கனத்திருந்தன.

''ஹல்லோ... குட்மார்னிங்...''

ரமணி வந்து விட்டான் போலிருக்கிறது. விடியற்காலேயில் வந்திருக்க வேண்டும். அவன் வந்ததே தெரியாது. அவன் நேரம் கழித்து வந்தாலும், கதவைத் தட்டும்போது, அது உடைந்து போகும் படியாகத்தான் தட்டுவான்.

ரமணி வாயில் பற்பசையுடன் குளியலறையை நோக்கிச் சென்ருன்.

சமையலறையிலிருந்து வந்த அவன் மனேவி சங்கரனின் அறையருகே ஒரு கணம் நின்ருள். ஏதோ கேட்க நினைத்தாள். கேட்க வில்லே. உள்ளே போய் விட்டாள்.

சங்கரனல் நிற்க முடியவில்லே. கட்டிலில் உட்கார்ந்தான்.

ரமணி டவலினல் முகத்தைத் துடைத்துக் கொண்டே வந்தான்.

''மிஸ்டர் ரமணி...'' என்று கூப்பிட்டான் சங்கரன்.

ரமணி அவனே மிகுந்த ஆச்சரியத்துடன் நோக்கினன். சங்கரன் இதுவரையில் அவனேக் கூப்பிட்டுப் பேசியதே கிடையாது.

''எஸ்?....''

''எனக்கு உடம்பு சரியில்லே...'' இதற்கு மேல் என்ன சொல்வதென்று அவனுக்குத் தெரியவில்லே.

''ஐ ஸீ...''

சங்கரனுக்குக் காப்பி சாப்பிட்டால் தேவலே போலிருந்தது. ஆனல் ஒருவித உணர்ச்சியு மில்லாமல் ரமணி 'ஐஸீ' என்னும்போது தன் விருப்பத்தை அவனிடம் எப்படிச் சொல்வது?

''ஒரே தலேவலி...'' என்ருன் சங்கரன் தொடர்ந்து.

''சி. எச். எஸ். ஆஸ்பத்திரிக்குப் போகப் போறீங்களா? இல்லாட்டா, பிரைவேட் டாக்டரா?... நான் சி.எச். எஸ். ஆஸ்பத்திரியை நம்பறதில்லே...''

சங்கரன் பேசாமலிருந்தான்.

''சாதாரண ஜுரமா இருந்தால் சி. எச். எஸ்.லே போகலாம். வெறும் ஜலதோஷம், தலே வலிக்கு இந்த டாக்டர்களே நம்பலாம்'' என்று சொல்லி விட்டுச் சிரித்தான் ரமணி.

சங்கரன் கண்களே மூடிக் கொண்டான். ''நான் ஒரு முட்டாள். சுந்தரம் பேச்சைக் கேட்காமல் இந்த வீட்டுக்கு வந்தோமே!... நான் ஒரு முட்டாள், நான் ஒரு முட்டாள்'' என்று மனத்துக்குள் சொல்லிக் கொண்டான் சங்கரன்.

ரமணி உள்ளே போய் விட்டான் என்று அறிந்த பிறகு சங்கரன் மிகவும்

ரெமப்பட்டு, குளியலறைக்குச் சென்று பல் தேய்த்து விட்டு வந்தான். சட்டையை அணிந்து கொண்டு அறையை விட்டு வெளியே வந்தான்.

''சி. எச். எஸ்.ஸா!'' என்று கேட்டான் ரமணி தன் அறையிலிருந்தவாறு.

''ஆமாம்...''

''குட்...''

மெஸ்ஸை அடைந்து ஒரு கப் காப்பி சூடாகச் சாப்பிட்டான். கொஞ்சம் இதமாக இருந்தது.

சுந்தரத்தைப் பார்க்கலாமா என்று அவனுக்குத் தோன்றியது. அவனுடைய அதிர்ஷ்டம் சுந்தரம் அப்பொழுது எதிரே வந்தான்.

''என்னடா இது!... உடம்பு சரியில்லையா?'' என்று கேட்டான் சுந்தரம்.

சங்கரன் தலையை அசைத்தான். அவன் உடம்பைத் தொட்டுப் பார்த்த சுந்தரம், ''அட, கடவுளே! 103, 104 இருக்கும்போலிருக்கேடா...! எங்கே போயிட்டு வறே?...'' என்றான்.

''காப்பி சாப்பிட்டுட்டு வர்றேன்... டாக்டர்கிட்டே போகணும்..''

''போடா ஃபூல்! என்னோட வா...''

டாக்டர் அவனைப் பரிசோதனை செய்து விட்டு, 'ஆன்டி—பையாடிக்ஸ்' மாத்திரைகள் எழுதிக் கொடுத்தார். ''பூரண ஓய்வு தேவை...'' என்றார் அவர்.

''என் அறைக்கு வாயேண்டா...'' என்றான் சுந்தரம்.


''இல்லே! என் அறைக்கே போறேன்.''

சுந்தரம் வற்புறுத்தவில்லை. அவன் இருக்கும் அறைக்குப் போக வேண்டுமென்றால் அறுபத்தி நான்கு படிகள் கடந்து செல்ல வேண்டும்.

சங்கரன் தன் அறைக்குச் சென்று படுத்தான். முதல் நாள் இரவு சரியாகத் தூங்கவில்லை. தூக்கத்துக்கும் மருந்து கொடுத்திருந்தார் டாக்டர். கண்ணைச் சுழட்டிக் கொண்டு வந்தது.

கண்களை விழித்தும் விழிக்காமலிருப்பதுபோன்ற ஒரு நிலை. உருவங்கள் நிழலாடுவது போல் ஒரு மயக்கம்.... கோபு ... அவனுடைய அம்மா ... அவர்கள் என்ன செய்கிறார்கள்? தலையில் யாரோ ஒத்தடம் கொடுப்பது போல் ஒருணர்வு... யாராக இருக்க முடியும்?... ஒன்றும் புரியவில்லை. அவன் நினைவிழந்தான்.

மீண்டும் அவனுக்கு நினைவு வந்த போது, தான் புதியதொரு சூழ்நிலையில் இருப்பது அவனுக்குத் தெரிந்தது. பக்கத்தில் வரிசையாகக் கட்டில்கள்... வெள்ளை உடை உடுத்த நர்ஸ்கள்...



''தனிக் குடித்தனத்துக்கு இடம் கிடைக்கலே ஸார்! தாங்கள்தான் கொஞ்சம் பெரிய மனசு பண்ணணும். என் மனைவிக்கும் இங்கே டைப்பிஸ்ட் வேலை தரணும். ப்ளீஸ்!''

அட, கடவுளே!... இது ஆஸ்பத்திரி அல்லவா?...இங்கு எப்படி வந்தோம்?...

''இப்போ எப்படி இருக்கு?'' குரலைக் கேட்டதும் அவன் திரும்பிப் பார்த்தான். சுந்தரம்!

அவனால் பதில் சொல்ல முடியவில்லை. அவ்வளவு பலஹீனமாக இருந்தது. ஆனால் கண்கள் மட்டும் பேசின. தான் ஆஸ்பத்திரியில் இருப்பதற்குக் காரணம் என்ன?

சுந்தரம் சொன்னதைக் கேட்டதும் அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது. ஒரு வாரமாகவா ஆஸ்பத்திரியில் இருக்கிறோம்!... நல்ல ஜுரமாக இருந்த போது அலட்டிக் கொண்ட காரணத்தினால் 'டெலீரியம்' மாதிரி வந்துவிட்டது. ரமணியின் மனைவி அன்று சாயந்தரம் சுந்தரம் அவனைப் பார்க்கச் சென்றபோது சொன்னாள். ரமணி தன் வீட்டுக்கு யார் யாரையோ அன்றிரவு அழைத்துக் கொண்டு வந்திருந்தான். ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போகும்படி ரமணி அவளிடம் சொன்னான். அதற்குப் பிறகு ரமணி சுந்தரத்தை விசாரிக்கவும் வரவில்லை. ஆஸ்பத்திரிக்கு வந்து பார்க்கவுமில்லை. கோபுதான் தினமும் சுந்தரத்தின் அறைக்கு வந்து 'எப்படி இருக்கிறது?' என்று கேட்டு விட்டுப் போவான். நேற்று முதல் நாள் கோபுவும், அவன் அம்மாவும் ஆஸ்பத்திரிக்கு வந்திருந்தார்கள். கோபு அழுதுவிட்டான். அவன் அம்மாவால் ஆஸ்பத்திரியில் அழ முடியவில்லை.

இதைச் சுந்தரம் சொன்னபோது சங்கரன் அவனை அர்த்தத்துடன்

பார்த்தான். "இதற்கு என்ன அர்த்தம்?"

சுந்தரம் அவன் பார்வையைப் புரிந்து கொண்டான். பதில் சொல்லவில்லை. வேறு பக்கம் திரும்பிக் கொண்டான்.

சங்கரனின் கண்கள் பனித்தன. "வாழ்க்கையில் நான் இன்னும் யார் யாருக்குக் கடமைப்படப் போகிறேன்?"

இரண்டு மூன்று நாட்களுக்குப் பிறகு அவனை ஆஸ்பத்திரியி லிருந்து 'டிஸ்சார்ஜ்' செய்து விட்டார்கள். சுந்தரம் அவனை வீட்டில் கொண்டு விட்டுப் போனான். போகும்போது சொன்னான்: "நான் 'புரோக்கர்' குப்தாவிடம் சொல்லி யிருக்கேன்... வேறே ரூம் கிடைக்கும்."

ரமணியின் மனைவி அவன் போன பிறகு, அறைக்குள் வந்தாள். சங்கரன் எழுந்திருக்க முயன்றான்.

"நோ...ப்ளீஸ்..." அவள் அவனருகில் வந்து நின்றாள். அவள் முகத்தில் புன்னகை நிழலாடியது.

"நீங்க ஆஸ்பத்திரிக்கு வந்தேள்னு சுந்தரம் சொன்னான்... தாங்க்ஸ்..."

அவள் பதில் கூறவில்லை. அவனையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

"கோபு எங்கே?"

"பள்ளிக்கூடம் போயிருக்கான்..... நீங்க வரப்போறது அவனுக்குத் தெரியாது...."

"மிஸ்டர் ரமணி ஆபீஸ் போய் விட்டாரா?" — ஏதோ அர்த்தமில்லாமல் கேட்டுக் கொண்டிருக்கிறோமென்று அவன் உணர்ந்தான். மௌனத்தைக் காட்டிலும் இது தேவலை யென்று அவனுக்குப் பட்டது.

"வேறே 'ரூம்' பார்த்துண்டு போகப் போறேளா?" அவள் தலையைச் சற்றுச் சாய்த்து நிதானமாகக் கேட்டாள்.

"யாரு சொன்னா?"

"உங்க நண்பர் இப்போ சொல்லிட்டுப் போனாரே..."

சங்கரனுக்கு என்ன பதில் சொல்வதென்று தெரியவில்லை. 'ஆமாம்' என்று சொல்லத் தான் தயங்குவதற்குக் காரணம்? — வெறும் தாட்சண்யம் மட்டும் தானா?... கோபுவுக்கும் தனக்குமுள்ள பிணைப்பா?... அல்லது...அல்லது...சே, அன்று அவள் — ரமணியின் மனைவி— சொன்னது போல் 'நல்லவனாக' இருந்து வேஷம் போடுகிறோமா?.... 'ஆமாம்' என்று சொன்னால்தான் என்ன வந்து விட்டது?... தனக்கும் இவர்களுக்கும் என்ன சம்பந்தம்?

"ஆமாம்..."

அவள் சிறிது நேரம் சும்மா இருந்தாள். வெளியே பார்த்துக் கொண்டிருந்தாள்.

"நான் அப்படிப் போறதுதான் உங்களுக்கும் நல்லதென்று நினைக்கிறேன்."

"'உங்களுக்கு'ன்னா?...."

"கோபுவுக்கும் உங்களுக்கும்..."

"ஓ.... எங்களைப் பற்றிய அக்கறையா?..."

"நான் முதல் நாள் உங்களைப் பார்த்தபோது, நான் கோபுகிட்டே அநுதாபம் காட்டக் கூடாதுன்னு சொன்னேன்... ஆனா, அதைக் காட்டிலும் மோசம், நீங்க என் பேரிலே அநுதாபம் காட்டும்படியா ஆயிடுத்து.... மிஸ்டர் ரமணிக்கு இது பிடிக்குமா?"

"இங்கே யிருந்து தப்பிச்சுண்டு போகணும்னு உங்க எண்ணம்...அதைச் சொல்லாமெ ஏன் சுத்தி வளைக்கிறேள்?"

"எதுக்காகத் தப்பிச்சுண்டு போகணும்? இது என்ன ஜெயிலா?"

"இதைக் கேட்கிறபோதே உங்களுக்குப் பதிலும் தெரியும்... ஆனா ஒண்ணு. கோபுவுக்கு நீங்க இங்கே வந்தப்புறம் வாழ்க்கையிலே ஒரு பிடிப்பு ஏற்பட்டது... நீங்க இப்போ போறேன்னா.."

சங்கரன் எழுந்து உட்கார்ந்தான்.

"கோபு எப்படிப் படிக்கிறான்...?"

"அவன் மாசப் பரீட்சையிலே வாங்கி யிருக்கிற மார்க்கைப் பார்த்து, வாத்தியார் ஆச்சரியப்பட்டுப் போனாராம்....ஆல்ரைட்... நான் சுயநலக்காரியா இருக்கக் கூடாது இல்லையா?... உங்களுக்குச் சௌகரியம் இல்லேன்னா, நீங்க இங்கே இருங்கோன்னு எப்படி வற்புறுத்த முடியும்?"

"நான் சௌகரியக் குறைவுன்னு சொல்லவே இல்லே..." என்றான் சங்கரன்.

"பின்னே ஏன் போகணும்?"

பின் எதற்காகப் போக வேண்டும்? ரமணி தன்னை ஆஸ்பத்திரியில் வந்து பார்க்கவில்லை யென்றா?... அல்லது அல்லது... ரமணியின் மனைவி தன்னை ஆஸ்பத்திரியில் வந்து பார்த்தாள் என்பதற்காகவா?.... அப்படியென்றால், எதைக் கண்டு பயம்? யாரைக் கண்டு பயம்?... தன்னைக் கண்டா?...சுந்தரம் சொன்னான் என்பதற்காகவா?...

"எனக்கு ஒண்ணுமே புரியலே..." என்றான் சங்கரன்.

அவள் சிரித்தாள். "நான் சிரிச்சு ரொம்ப நாளாகிறது."

"நான் இங்கே இருக்கிறதனாலே நீங்க சிரிக்கிறேன்னா, அதுக்காகவாவது நான் இங்கே இருக்கணும்..."

"நீங்க இருக்கிறது மட்டும் போதாது. இந்த மாதிரி ஏதாவது சொல்லணும். அப்பத்தான் எனக்குச் சிரிப்பு வரும்."

"எந்த மாதிரி...?"

"ஒண்ணும் புரியாம இருக்கேளே. அந்தமாதிரி."

சங்கரன் அவளைக் கூர்ந்து நோக்கினான். அவள் என்ன சொல்லுகிறாள்?........ இப்பொழுது அவனுக்கு உண்மையாகவே ஒன்றும் புரியவில்லை.

ரமணியின் மனைவி அவன் மேஜையின் மீது வைத்திருந்த புஸ்தகங்களை எடுத்துப் பார்க்கத் தொடங்கினாள். சுந்தரத்திடமிருந்து அவன் வாங்கிக் கொண்டு வந்த எலியா காஸான் எழுதிய 'தி அரேஞ்மெண்ட்'டைப் புரட்டினாள்.

"புதுசா இது?"

"ஆமாம்...." அவள் அந்தப் புஸ்தகத்தைப் படிக்கக் கேட்டுவிடக் கூடாது.

"எனக்குப் புரியுமா இது?"

"அந்தப் புஸ்தகம் வேண்டாம்...ஒரு மாதிரியான புஸ்தகம்..."

"எந்தமாதிரி?" இதைச் சொல்லிவிட்டு அவள் புன்னகை செய்தாள்.

"எதுக்குச் சிரிக்கிறீங்க?"

"சித்தே முன்னாலே நீங்க கேட்ட கேள்வி இல்லே இது?"

"எது?"

"'எந்த மாதிரி?'...எல்லாமே ஒரே கேள்வி, ஒரே பதிலோன்னு தோணறது.. கேட்கிறவாளும் பதில் சொல்றவாளும் சந்தர்ப்பத்துக்கு ஏற்ற மாதிரி மாத்திண்டே வரலாம்..."

சங்கரன் சொன்னான்: "உங்கப்பா பேராசிரியர்னு சொன்னேளே... இப்போ தான் புரியறது... அவர் உங்களைப் பத்தி நிச்சயமா பெருமைப்படலாம்."

அவள் முகம் திடீரென்று மாறியது. சிரிப்பு மறைந்தது. ஏதோ ஒரு நினைவு அவளைத் திடீரென்று தாக்கியிருக்க வேண்டுமென்று சங்கரனுக்குப் பட்டது. அப்பாவைப் பற்றிய நினைவா? அல்லது ஓர் அயலானிடம் இப்படிச் சிரித்துப் பேசிக் கொண்டிருக்கிறோமே என்ற குற்ற உணர்வா?...

"உங்களுக்கு ஏதாவது வேணுமா?" என்று கேட்டாள் அவள்.

"வேண்டாம்... நீங்க..." அவன் ஏதோ சொல்ல நினைத்தான். சொல்லவில்லை.

"ஆஸ்பத்திரிக்கு வந்ததற்கு நன்றி" என்று முடித்தாள் அவள்.

சங்கரன் சிரித்தான். "நீங்க பெரிய 'மைண்ட்-ரீடர்'னு நினைக்கிறேன்."

"அப்படியானா நீங்க ரொம்ப ஜாக்கிரதையாப் பேசணும்" என்றாள் ரமணியின் மனைவி. (தொடரும்)

மான்


மயிலை

மின்னல் போலத் துள்ளுது
மேகம் போல ஓடுது
பெண்கள் போலப் பார்க்குது
பேதை போல மருளுது

காலி ருக்கு குச்சிபோல்
கழுத்தி ருக்கு பட்டுபோல்
மேனி ருக்கும் புள்ளியோ
மினுமி னுக்கும் வெள்ளியாம்

வேடர் வந்தால் ஓடிடும்
விலங்கைக் கண்டால் ஓடிடும்
தேடும் புல்லைக் காட்டினால்
திரும்பி வந்து சாப்பிடும்

அழகு வாழும் கண்களை
அன்பு வாழும் கண்களைப்
பழகிக் கண்டார் யாவரும்
பரிவு கொள்வார் மானிடம்



பாதுகாப்பிற்கு
ஒரு பூட்டு உள்ள
தெனில் அது
நவ-தால் ஒன்றே
ஒன்றுதான் !



நவ-தால்

நம்பிக்கையானது. அதனால் தான் பாங்குகளும் தொழிற்சாலைகளும், கிடங்குகளும் நவ-தால் பூட்டையே உபயோகிக்கின்றனர். அதிநுட்பமான தயாரிப்பு! ஒவ்வொரு பூட்டுக்கும் மாறுபட்ட இணைப்புமுறையில் வெட்டப்பட்ட சாவிகள். உடைத்து திறக்க இயலாதபடி அதிக பாதுகாப்பு அளிப்பதற்கேற்ற முறையில் செய்யப்பட்டது நவ-தால். பித்தளை, எஃகினாலான இரட்டைக்கூடு அதை மிகமிக உறுதியாக்குகிறது. தயாரிப்பவர்கள் : கோத்ரெஜ்-பாதுகாப்பு உபகரணங்களைத் தயாரிப்பதில் 70 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவமுடையவர்கள்.

3 சைஸ்கள் :
50 mm (6 லீவர்கள்)
67 mm (7 லீவர்கள்)
85 mm (8 லீவர்கள்)

Godrej கோத்ரெஜ் எப்போதும் நங்கூரம் மார்க் பூட்டுகளையே கேட்டு வாங்குங்கள்


7. தமிழ்த் தாத்தாவும் காந்தித் தாத்தாவும்



1937 மார்ச் மாதம் சென்னையில் ஹிந்திப் பிரசார சபையில் பாரதிய சாகித்ய பரிஷத்தின் இரண்டாவது மகாநாடு நடைபெற்றது. இதன் தலைவர் காந்தியடிகள். வரவேற்புக் குழுத் தலைவர் தமிழ்த் தாத்தா டாக்டர் உ. வே. சாமிநாதய்யர். இவ்விருவரும் ஒரே மேடையில் தோன்றியது அப்போதுதான். மகாநாடு கூடுவதற்குமுன் சாமிநாதய்யர் காந்திஜியைப் பார்க்கச் சென்றார். ராஜாஜி இவரை அறிமுகப்படுத்தினார்.

''நமஸ்காரம் உட்காருங்க ஐயா!'' என்று காந்திஜி தமிழ்த் தாத்தாவை வரவேற்றார். மேலும் சம்பாஷிக்கையில் காந்திஜி கொச்சைத் தமிழில் பேசினாலும் தமிழ்த் தாத்தாவுக்கு உள்ளம் குளிர்ந்து விட்டது.

மகாநாட்டுப் பந்தலுக்கு இருவரும் சேர்ந்தே வந்தார்கள். அய்யர் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தி முடிந்ததும் காந்திஜி பேசினார். ''சாமிநாதய்யரைப் பார்க்கும் போதும் அவருடைய பேச்சைக் கேட்கும் போதும் அவர் காலடியின் கீழ் இருந்து தமிழ் படிக்க வேண்டும் என்கிற ஆசை உண்டாகிறது'' என்று குறிப்பிட்டார்.



8. காந்திஜியும் டி. எஸ். எஸ். ராஜனும்



லண்டனில் உள்ள இந்திய மாணவர்களை ஒன்றுகூட்ட ஒரு விருந்துக்கு ஏற்பாடு செய்தார் வ. வே. சு. அய்யர். இதற்குத் தலைமை வகிக்கக் காந்திஜியைக் கேட்டுக் கொண்டார்.

''ஹோட்டலில் பணம் கொடுத்து விருந்து வைக்கக் கூடாது; இந்திய உணவைத் தயாரிக்க வேண்டும்; இதற்குச் சம்மதமானால் நான் வருகிறேன்'' என்றார் காந்திஜி. அய்யரும் இதற்குச் சம்மதித்தார்.

அன்றைய தினம் ஒரு மணிக்கே சமையல் வேலை ஆரம்பமாகி விட்டது. டி. எஸ். எஸ். ராஜன் உட்பட ஆறு பேர் இதில் ஈடுபட்டனர். வேலை தொடங்கிய அரை மணி நேரத்துக்கெல்லாம் ஒரு 'நோஞ்சான்' ஆசாமி இவர்களுடன் வேலை செய்ய வந்தார். வேலையில் இவர் காட்டிய ஊக்கமும் ஆர்வமும் மற்றவர்களில் ஒருவருக்குக்கூட இல்லை. மற்றவர்கள் அந்த நோஞ்சான் ஆளிடமிருந்து நன்றாக வேலை வாங்கினார்கள்.

மாலை சுமார் ஆறு மணியிருக்கும். அய்யர் சமையலறைக்கு வந்தார். 'எல்லாம் முடிந்துவிட்டதா?' என்று கேட்டுக் கொண்டே வந்தவர், ''இவரை யார் வேலை செய்யச் சொன்னது? இவர்தான் இன்றையக் கூட்டத்துக்குத் தலைமை வகிக்கப் போகும் மிஸ்டர் காந்தி. நீங்கள் இவரை நடத்தும் முறை மிக அழகாக இருக்கிறது'' என்று கோபித்துக் கொண்டார்.

அந்த ஆறு பேர்களும் காந்திஜியிடம் மன்னிப்புக் கேட்டனர். அவர் குலுங்க நகைத்து, ''நான் யாரை எதற்காக மன்னிப்பது? இதில் முதல் குற்றவாளி நான்தான். இந்த ஊரில் இம்மாதிரி விருந்து நடத்துவது எவ்வளவு கடினம் என்று எனக்குத் தெரியும். நான் அல்லவா உங்களிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும்'' என்று சொன்னார்.

தமிழ் நாட்டில் 1934ல் காந்திஜியின் ஹரிஜன யாத்திரையை நடத்தி வைத்தவர் ராஜன். காந்திஜி அவரைச் சந்தித்த போது ''லண்டனில் நீங்கள் என்னிடம் வேலை வாங்கியதை நான் இன்னும் மறக்கவில்லை'' என்று சிரித்துக் கொண்டே கூறினார்.

— ரஜன்



திங்கட்கிழமையன்று காலை பஸ்ஸில் ரங்கராஜனும் நடராஜ முதலியாரும் சாத்தூருக்குப் புறப்பட்டுப் போய், பத்திரங்களில் கையெழுத்திட்டு ரிஜிஸ்தர் வேலை முடியும் வரையில் அவன் உள்ளத்தில் குடிகொண்டிருந்தது விஜயாவின் நினைவு ஒன்றுதான். 'அவளிடத்தில்தான் அம்மாவுக்கு எவ்வளவு அன்பு! அவளை வீட்டுக்குள் வராதே' என்று சொல்லி விடுவதா என்று கேட்ட மாத்திரத்தில் அவள் என்ன பாடுபட்டு விட்டாள்!' என்றும் அடிக்கடி சொல்லிக் கொண்டான். சொத்துக்களின் விற்பனையைப் பற்றியும், அப்பா வாங்கி வைத்துக் கொண்ட ஆயிரக்கணக்கான ரொக்கப் பணத்தைப் பற்றியும் அன்று முழுதும் அவன் யோசிக்கவே இல்லை. அவனைப் பொறுத்த வரையிலும் எல்லாமே சடங்குகள் மாதிரி நடந்து முடிந்தன.

மாலை பஸ்ஸில் மதுரைக்குத் திரும்ப வேண்டும்.

அருணாசல முதலியார் அவனை மட்டும், "நீ இரு. நாளைக்குப் போகலாம். நானும் வர்றேன். இன்னிக்கு அப்பா போகட்டும்" என்று சொல்லிச் சாத்தூரிலேயே நிறுத்தி விட்டார். அவருடைய கட்டாயத்துக்கு அவன் பணியும்படி நேர்ந்தது.

நடராஜ முதலியார் மதுரைக்குப் புறப்பட்டுப் போனார்.

அவர் போன பிறகு, இரவில் சாப்பிடும் வரையிலும் ரங்கராஜன் தங்கத்தோடு உட்கார்ந்து பேசுவதற்குப் பல தடவைகளிலும் முயற்சி செய்தான். அவளோ அவன் எதிரில் வருவதையே தவிர்த்துக் கொண்டிருந்தாள். அவன் வலியப் போய்ப் பேசினாலும், ஒரு வார்த்தை இரண்டு வார்த்தைகளில்



தீராத விளையாட்டு

கு. அழகிரிசாமி

பதில் சொல்லி விட்டு அவள் ஓடி ஒளிந்து கொண்டாள். இதை ஓர் அதிசயம் போல், இரவில் சாப்பிடும் போதும் அவன் சித்தப்பாவிடமும் சித்தியிடமும் சொன்னான்; சொல்லி விட்டுச் சிரித்தான். அப்போது தங்கமும் எதிரே இருந்தாள். யாருமே அவனோடு சேர்ந்து சிரிக்கவில்லை; எதுவும் பேசவுமில்லை.

சாப்பிட்டு முடிந்ததும், ரங்கராஜனை அழைத்துக் கொண்டு போய் ஓர் அறையில் உட்கார வைத்தார் அருணாசல முதலியார்.

''தங்கம் இப்படிப் பேசாமடந்தை ஆயிட்டாளே, சித்தப்பா! என்ன அதிசயம்? என் மேலே அவளுக்கு என்னமோ, கோபம்....'' என்று அங்கே போய் உட்கார்ந்ததுமே ரங்கராஜன் ஆரம்பித்தான்.

அருணாசல முதலியார் ஆத்திரத்தை அடக்கிக் கொண்டு பேசுகிற ஒரு தொனியில், ''அவளுக்கு மட்டுமா உன் மேலே கோபம்? எனக்கும் கோபம்தான். உன் சித்திக்கும் கோபம்தான். ஏன், உங்க அப்பா அம்மாவுக்குமே கோபம்தான்!'' என்றார்.

''ஏன் சித்தப்பா?'' என்று ரங்கராஜன் மிகவும் பயந்து போய்க் கேட்டான்.

''கோபம் வராமல் சந்தோஷமா வரும்—நீ செய்யற காரியத்துக்கு?''

''நான் என்ன செஞ்சிட்டேன், சித்தப்பா?''

''இன்னும் என்ன செய்யணும்? உன் நடத்தை உனக்கே நல்லா இருக்கா?.... ஹூம்! இதெல்லாம் தலைவிதியப்பா!.... எனக்கும் இத்தனை வயசாச்சு, இது வரையிலும் ஒரு கீழ் ஜாதிக்காரன் வீட்டிலே கை நனைச்சு அறிய மாட்டேன். உன்னாலே, அந்தக் கீழ் ஜாதிக்காரன் மகள்கிட்டே பலகாரத்தை வாங்கிச் சாப்பிட்டேனே! இந்த வெட்கக்கேட்டை நான் எங்கே போய்ச் சொல்ல? அக்கம் பக்கத்திலே தெரிஞ்சா என் முகத்திலே காறித் துப்புவானே, காறி!''

''சித்தப்பா! நீங்க என்ன சொல்றீங்க? என்ன நடந்தது? விவரமாச் சொல்லுங்க....'' என்று அவன் படபடத்தான்.

''என்னத்தைச் சொல்லறது? சும்மா இரு.''

''நான் சும்மா இருக்க மாட்டேன். நீங்க விஷயத்தைச் சொல்லியாகணும்.''

''ராஜா! நீ மெட்ராஸுக்குப் போயிருந்தப்போ நடந்த வெட்கக் கேட்டைச் சொல்றேன். நான் மதுரைக்கு வந்திருந்தேன். உங்க வீட்டிலே அந்தப் பெண்ணு—பொண்ணு—பொண்ணு அது? — பலகாரத்தைக் கொண்டு வந்து வச்சாள். உங்கப்பாவும் நானும் தலையிலே அடிச்சிக்கிட்டு அதைத் தின்னு தொலைச்சோம்...''

''எந்தப் பெண்ணு?''





அசைந்தாலே
வேகம் துள்ள, அலுப்பில்லா
உற்சாகம் கொள்ள...
சளைக்காத சக்திபெற...சாதனை புரிய...சலிப்பூட்டும் இன்றைய வாழ்வையும் இன்பமாக்க... வீறுகொண்டு எழுவீர்! உள்ளமுந்திக் கிடக்கும் உங்கள் தெம்பை விடுவித்தால்...அதுவே வெற்றி! இதோ, அதற்கென்றே பிறந்துவரும் அமிர்த யோக வாய்ப்பு: அஸ்ட்ரா என்ற ஒரு பாலமுத பானம். இந்தியாவில் உணவியல் ஆராய்ச்சியிலே முன்னிற்கும் ஒரு நிலையத்தின் சிபாரிசு பெற்ற 4 டானிக் சத்துக்கள் இணைந்த ஒரு சக்திக்களஞ்சியம்! காலைதோறும் நாவாரப் பருகுவீர் அஸ்ட்ரா. ஊக்கத்தின் உதயகீதம், நாள் முழுதும் சுறுசுறுப்பின் லயம்!
உள்ளூறங்கும் தெம்பை
உயிர்த்தெழுப்புவது
அஸ்ட்ரா
astra
HEALTH DRINK FOR VITALITY
தமிழ்நாடு, கேரள மாநிலங்களிலும், ஆந்திர, மைசூர் மாநிலங்களிலே
தேர்ந்தெடுத்த சில நகரங்களிலும் கிடைக்கிறது

''அவதான். ராமலிங்கம் பிள்ளைக்குப் ' பொறந்திருக்கே, எல்லைப்பிடாரி மாதிரி நிமுந்தது நிமுந்தவாக்கிலே.''

''விஜயாவையா சொல்றீங்க, சித்தப்பா ?'' என்று நெஞ்சின் ஆழத்திலிருந்து குரலை வரவழைத்துக்கொண்டு கேட்டான்.

''அந்தக் கழுதையைத்தான் சொல்றேன். கழுதையிலும் கழுதை இரு ஜாதிக் கழுதை !''

இந்த வார்த்தைகளைக் கேட்டதும் ரங்கராஜனுக்குக் கண்கள் ரத்தமாகச் சிவந்து விட்டன. உதடுகள் துடித்தன; உடம்பெல்லாம் நடுங்கியது. இரண்டு கண்களையும் இறுக மூடினான். காதுகளையும் பொத்தினான். உடனே நாற்காலியை விட்டு எழுந்துவிட்டான். அருணாசல முதலியார் அவன் கையைப் பிடித்து இழுத்து, ''அட! ரொம்பவில்லே சங்கடப்படறே? அவள் என்ன அத்தை மகளா? மாமன் மகளா? சும்மா உட்கார் !'' என்று ஏகத்தாளமாக, ஆனால் கோபக் குரலில் சொன்னார்.

''சித்தப்பா! அவளைப் பத்தி இப்படிப் பேசுறதுக்குப் பதிலா, என்னைக் கொலை பண்ணிப்பிடுங்க. அவள் யார், அவளோட தகப்பன் எப்பேர்ப்பட்டவன் என்கிறதெல்லாம் தெரிஞ்சிருந்தா, இப்படிப் பேசியிருக்க மாட்டீங்க....''

''அவளோடே அப்பன் எப்பேர்ப்பட்டவன் என்கிறது, அவன் பிள்ளைகளை வளர்த்திருக்கிற அழகிலேயே தெரியுதே ! மகன் வாடா வழிப் பயலாத் தலையெடுத்துப் பரதேசம் போயிட்டான். ஒரே மகன் !....மகள் என்னடான்னா அகப்பட்டவன் கையிலே தாலியைத் தூக்கிக் குடுத்துக் 'கட்டுடா கழுத்திலே' என்கிறாள்......!''

ரங்கராஜனுடைய வேதனை மிகுந்து கடுங் கோபமாக முதிர்ந்தது; பெருங் கூப்பாடு போட்டு விட்டான்: ''சித்தப்பா ! போதும் ! இனிமேலே நீங்க என்கிட்டே இதைப் பத்திப் பேசவே வேண்டாம்.... நாளை விடிஞ்சதும், நான் ஓடிப் போயிடுறேன். அதுவரையிலும் நீங்க என்னைத் திரும்பியே பார்க்காதீங்க.''

இந்தக் கூச்சலைக் கேட்டு அருணாசல முதலியாரின் மனைவி கோமதியம்மாள் அதுவரையிலும் மறைவில் நின்று கேட்டுக் கொண்டிருந்தவள் — ஓடி வந்தாள்.

''நீங்க என்ன, புள்ளைகிட்ட இப்படியா பேசுறது? மகனுக்குப் புத்திமதி சொல்ற லக்ஷணமா இது? சும்மா இருங்க....'' என்று சொல்லி விட்டு ரங்கராஜனின் அருகில் வந்து ஆதரவாக நின்று கொண்டு அவனுடைய தலை முடியையும் கோதினாள் கோமதியம்மாள்.

அருணாசல முதலியார் மனைவியை ஏறிட்டுப் பார்த்து, ''ஏய் ! வேறே எப்படிப் புத்திமதி சொல்றது? நான் எதையும் ஒடைச்சுத்தான் பேசுவேன். நாளைக்கு ஒரு லாப நஷ்டமுன்னா எனக்கும் அவமானமில்லையா? இவன் யாரு? நான் யாரு?'' என்றார்.

''நீங்க சும்மா இருங்கன்னு சொல்றேனே !''

''நல்லா இருக்கு. நான் வாயை மூடிக்கிட்டு இருக்கிறதுக்குத்தான், இவனோட அப்பா என்கிட்டே அந்த அழுகை அழுதாரா? அவ, சுந்தரி, திருச்சிராப்பள்ளியிலிருந்து நாலு நாளைக்கு ஒரு கடிதாசி எழுதிக்கிட்டிருக்கிறாள், 'சித்தப்பா, இதை எப்படியும் தடுத்துப்பிடணும். நாங்க உங்களைத்தான் நம்பியிருக்கிறோம்'னு.''

ரங்கராஜன் அவரை விழித்துப் பார்த்தான்.

அவர் சொன்னார் : ''இவனோட அப்பா இவனை நேரே பார்த்துக் கண்டிக்க மாட்டார். அம்மாவோ இவனை ஒரு சொல்லுச் சொன்னாப் பொறுக்க மாட்டா. அழுறாளாம். எல்லாருமாச் சேர்ந்து இவனை அவமானப்பட விட்டுப்புடறதுன்னே முடிவு பண்ணிப்புட்டீங்களா? தெரியாமல்தான் கேட்கிறேன்?''

ரங்கராஜன் கூர்ந்து பார்த்துக் கொண்டு, ''என்ன அவமானம் வந்துடும், சித்தப்பா? நானும் தெரியாமல்தான் கேட்கிறேன்'' என்றான்.

கோமதியம்மாள் அவன் கையைப் பிடித்து இழுத்து, ''ராஜா! நீ வா! உங்க சித்தப்பா பேச்சைக் கணக்கிலே சேர்க்காதே ! எப்பவுமே அவருக்கு எரிஞ்ச சொல்தான் வாயிலே வரும். நீ வந்து பேசாமல் கட்டிலிலே போய்ப் படு'' என்றாள்.

அருணாசல முதலியார் இருவரையும் மேலும் கீழும் பார்த்தார். அவர்களுக்குக் கேட்கும்படியாக ஒரு பெருமூச்சும் விட்டார். அவருடைய கண்கள் சிவந்து மீசையும் துடித்தது.

''கோமதி! இவன் என் பிள்ளை, கோமதி ! இவன் கெட்டழிஞ்சு போய் விடக் கூடாதேன்னுதான் இந்தப் பாடு படுறேன், கோமதி'' என்று நடுங்கும் குரலில் சொல்லிக் கொண்டே அழுதார்.

''சும்மா இருங்கோ, இப்போ ஒண்ணும் நடந்துடலே'' என்று சொல்லிக் கொண்டே கோமதியம்மாள் அவனைக் கட்டிலுக்கு அழைத்துக் கொண்டு போய் விட்டாள். அவனைப் படுக்கச் சொல்லிக் கட்டிலுக்கு அருகிலேயே

லே உட்கார்ந்து கொண்டு, அவனுக்கு ஆறுதல் சொல்லும் முறையில் பேசத் தொடங்கினாள். சிறிது நேரம் கழித்துத் தங்கத்தை அழைத்துப் பாலை எடுத்துக் கொண்டு வரச் சொன்னாள். பாலைக் குடிக்கும்படி அவனிடம் கொடுத்து, கட்டாயப்படுத்தியே குடிக்க வைத்தாள். அதன்பின் அருணாசல முதலியார் பேசிய விஷயத்தையும், பேசவிருந்த விஷயத்தையும் தன்னுடைய நயமான பாஷையில் அவனுக்கு அவள் எடுத்துச் சொல்லத் தொடங்கி விட்டாள். அவள் பேசத் தொடங்கிய ஐந்தாவது நிமிஷத்திலேயே சித்தப்பாவின் கட்சியைத்தான் அவளும் நிலைநாட்டுவதற்கு முயல்கிறாள் என்பதை ரங்கராஜன் தெரிந்து கொண்டு விட்டான். ஆனால் அவளோடு பேசத் தனக்கு விருப்பமில்லை என்பதைச் சொல்ல அவனுக்கு வாய் வரவில்லை. அவ்வளவு இதமாகவும், அன்பு பாராட்டியும் மனப்பூர்வமாக அவனுடைய நலனைக் கருதியும் பேசுபவளை எழுந்து போகச் சொல்வது எப்படி ?

ரங்கராஜன் — விஜயா தொடர்பை அவள் உள்பட யாருமே விரும்பவில்லை என்பதும் அப்போது வெளிப்பட்டது. அவனுடைய தந்தை அதை நினைத்து அழுவதாகவும், சுந்தரியின் கதையும் அதுதான் என்றும் கோமதியம்மாள் சொன்னாள். ஜானகியம்மாளின் அந்தரங்க நிலை என்ன? அதை அறிவதில் தான் அவன் மிகுந்த அக்கறை காட்டினான். கோமதியம்மாளும் அதைச் சொன்னாள்.

ஜானகியம்மாள் மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் தத்தளிப்பதாகவும் அவளுடைய நிலை இருதலைக் கொள்ளி எறும்பின் நிலையைப் போல் இருப்பதாகவும் அவள் தெரிவித்தாள்: ''அக்காளை நினைச்சால்தான் பாவமா இருக்கு! ராஜா, அவ ஒண்ணும் சொல்ல முடியாமல் விழிக்கிறாள். அவளுக்கு நீ உசிரு. உன்னைக் கண்டிக்கவே வாய் வராது. அந்தப் பொண்ணுகிட்டவும் பிரியமா இருக்கிறாள். ஏன், எனக்குக்கூட அவள்கிட்ட பிரியம்தான். நம்ம இனம் வகையா இருந்தால், அவளைவிட ஒரு நல்ல பொண்ணு அகப்பட முடியாது. படிச்சிருக்கிறாள்; நல்ல குணம். அப்பாவும் நிறையச் செய்வார்தான். என்ன பண்ணறது? குலம் கோத்திரம் சரியில்லையே.....!''

''அம்மா முடிவா என்ன சொல்றாளாம், சித்தி ?''

''அவள் என்ன சொல்வாள், ராஜா? 'என்கிட்டே எதையும் கேட்காதீங்க, எதையும் சொல்லாதீங்க'ன்னு சொல்றாளாம்! உன்னைப் பார்ப்பாளா? உங்க அப்பாவைப் பார்ப்பாளா ? யார் வேணும்? யார் வேண்டாம் ? பாவம்! கிடந்து ரொம்பக் கஷ்டப்படறான்னு உங்க அப்பாவே காரதாக எழுதிட்டார். அக்கா அழறாளாம். ராஜா, உன்னாலே இத்தனை கஷ்டம் வரலாமா? உங்கம்மா உன் கட்சியிலே நிற்கிறான்னே வைச்சுப் பேசுவோம். அப்போ உங்க அப்பாவும் அம்மாவும் விரோதிகளாயிட்டாங்கன்னு தானே அர்த்தம்? பெத்தவங்களை இப்படி வெட்டிப் பிரிக்கிறது நல்ல காரியமா? யாருக்குமே பிடிக்காத காரியத்தை நீ ஏன் செய்யணும்? சித்தி இப்படிச் சொல்றேனேன்னு கோபிச்சுக்காதே, ராஜா. எத்தனை நாள் நானும் தங்கமும் உட்கார்ந்து அழுதிருப்போம் தெரியுமா?.... போகட்டும். சீக்கிரமா ஒரு நல்ல இடத்திலே பெண்ணைப் பார்த்து உனக்குக் கட்டி வைச்சிடணும்னு உங்க சித்தப்பா மும்முரமா இருக்கிறார்.... அவருக்கு உன் கவலை தான் கவலை... எப்பப் பாரு உன் பேச்சுத்தான். இதையெல்லாம் யோசிச்சுப் பார்த்து எல்லாருக்கும் நல்ல பேர் சம்பாதிச்சுக் குடு ராஜா....''

கோமதியம்மாள் பேசி முடிக்கும் போது பதினொரு மணி அடித்து விட்டது. அப்புறம்தான் அவனைத் தூங்கச் சொல்லிவிட்டு அவள் எழுந்து உள்ளே சென்றாள்.

ஆனால் அவனுக்குத் தூக்கம் வரவில்லை. நள்ளிரவுக்குப் பிறகும் சிந்தனையிலேயே மூழ்கிப் புரண்டு புரண்டு படுத்துக் கொண்டிருந்தான்.

எல்லாவற்றையும் ஆற அமர யோசித்து, ஒரு தெளிவு ஏற்பட்ட பிறகுதான் மதுரைக்குத் திரும்ப வேண்டும் என்று இரவு முடிவு செய்திருந்த அவனுக்கு விடிந்ததும் சன்னாசிப் புதூருக்குப் போய்ச் சில நாட்கள் இருந்து விட்டு வரலாம் என்ற யோசனை உதித்தது. நிம்மதியாக இருந்து யோசிக்க அதுதான் நல்ல இடம் என்று தோன்றவே, சித்தப்பாவிடமும் சித்தியிடமும் போய், தன் விருப்பத்தைத் தெரிவித்தான்.

''கொஞ்சம் நிம்மதியா இருந்துட்டு இங்கே வர்றேன். ஒரு வாரம் பத்து நாளிலே வந்துடுவேன். உங்க பேச்சை மீற எனக்கு மனசில்லே. அதே சமயத்திலே திடீர்னு பழைய மனசை மாத்திக்கிடவும் முடியல்லே. அங்கே போனால், மனசை மெல்ல மெல்ல மாத்தலாம்னு

பார்க்கிறேன்'' என்று சொல்லித் தாங்க முடியாத துயரத்துடன் கண்ணீரும் சிந்தினான்.

உடனே கோமதியம்மாள், ''ராஜா ஊருக்குப் போயிட்டே வரட்டும். அவனைக் கொஞ்சம் விட்டுப் பிடிங்கோ'' என்று சொல்லவே அருணாசல முதலியாரும் இசைந்தார். அவரே அவனைச் சன்னாசிப் புதூருக்கு அழைத்துக் கொண்டு போய், முன்பு அவரும் அவனும் போய்த் தங்கியிருந்த உறவுக்கார முதலியாரின் வீட்டிலேயே இப்போதும் அவனை ஏதோ சாக்குப் போக்குச் சொல்லித் தங்க வைத்தார்.

அருணாசல முதலியார் மத்தியானமே சாத்தூருக்குத் திரும்பி விட்டார். ரங்கராஜனிடம் தனியாக விடை பெற்றுக் கொள்ளும் போது, ''ராஜா! போயிட்டு வர்றேன். சீக்கிரம் சாத்தூருக்கு வந்துடு. நான் சொன்னதையெல்லாம் யோசனை பண்ணிப் பாரு. 'என் பிள்ளை நான் கீச்சின கோட்டைத் தாண்டுவானா'ன்னு உங்க அப்பாகிட்டே நான் நெஞ்சிலே அடிச்சுச் சொல்லணும். நான் கொஞ்சம் ஆத்திரத்திலே உன் கிட்டே நேத்து ராத்திரி படபடன்னு பேசிட்டேன். உங்க சித்தப்பனுக்குத் தெரிஞ்சது அவ்வளவுதான். நான் உன்னைப் போல் படிச்சவனா என்ன? பட்டிக்காட்டுக்காரன்! முரட்டுப் பேச்சுதான் வரும்! நீ ஒண்ணையும் மனசிலே வச்சிக்காதே!'' என்று காரியமாகவும் வேடிக்கையாகவும், அன்பாகவும், நடிப்பாகவும் பேசிவிட்டு அவர் போனார்.

அத்தியாயம் 27

சன்னாசிப்புதூர் கோவிலில் சிவகாசி விஜயா டாக்கீஸ் போஸ்டர்கள் வழக்கம் போல் காட்சியளித்தன. போன முறை வந்திருந்த போது பார்த்த அந்தப் பழைய சுவரொட்டியுமே அங்கு இருந்தது. விஜயாவை அந்தக் கிராமத்துக்கு அழைத்து வர வேண்டும் என்று விநோதமாக முன்பு ஆசை தோன்றியதையும், இப்பொழுது அவளை வேறு எங்கே அழைத்துச் சென்றாலும் இந்தக் கிராமத்துக்கு மட்டும் அழைத்து வர முடியாதபடி நிலைமை மாறி விட்டதையும் பார்த்துப் பார்த்துப் பெருமூச்செறிந்தான். 'அவளே இப்படிக் கிராமத்தில் வந்து இத்தனை நாட்கள் தங்குவாளா என்பது சந்தேகம். எளிய வாழ்க்கையை அவளாக விரும்பி ஏற்றுக் கொள்வாளே ஒழிய, இன்னொருவர் சுமத்தி அதை ஏற்றுக் கொள்ளக்கூடியவளாக அவள் இல்லை. நவநாகரிகம், உல்லாசம், நகரப்பாங்கில் பொழுதைக் கழித்து விளையாடும் ஆசை — இத்தனையும் உள்ளவள். திருப்பரங்குன்றத்துக்கு அன்று அவள் தன்னை ஒப்பனை செய்து கொண்டு வந்ததும், அவள் காரோட்டியதும், படம் பிடித்ததும்....அந்த நாகரிக வனிதையை இப்படி நாட்டுப்புறத்தில் வந்து இரண்டு நாட்கள் தங்கச் சொல்வதுகூடப் பாவம்!.....'

ரங்கராஜனுக்கு அந்த ஊரில் அவனுக்குத் 'துணையாக இருப்பவன் அவனுடைய குடும்பத்தின் பழைய வேலைக்காரன் மாடசாமி ஒருவன்தான். காலையிலும் மாலையிலும் தவறாமல் மாடசாமி அவனை வந்து பார்ப்பான். பேசிக் கொண்டிருக்கும் நேரமெல்லாம், நிலங்களை விற்றதற்காக வருந்துவதும், ஜானகியம்மாளின் அருமை பெருமைகளைக் கதை கதையாகச் சொல்வதுமாக இருப்பான்.

ஒரு நாள் அவன் பூர்வீக வீட்டைப் பார்க்கச் சென்றான். அங்கே ஒரு பகுதி காலியாக இருந்தது. அங்கே குடியிருந்த கிராம சேவகி பக்கத்துக் கிராமம் ஒன்றுக்கு ஒரு தனி வீட்டில் குடியிருக்கப் போய் விட்டாள் என்றும் தெரிந்தது. 'இந்த வீட்டில் நிம்மதியாக வாழலாம். அம்மாவும் அப்பாவும்கூட இங்கே வந்து விடலாம். ஆனால், அதற்கு வழியில்லாமல் என்னைப் படிக்க வைத்து விட்டார்கள். நான் மதுரையிலிருந்து வக்கீல் வேலை பார்த்துச் சம்பாதிக்காமல் இங்கே வந்துவிட்டால், கிராமத்து ஜனங்களே என்னை மதிக்க மாட்டார்கள் என்று சித்தப்பா முன்பொரு சமயம் சொன்னார். விஜயாவும் இங்கே வசிக்க வர மாட்டாள். வந்தாலும் அவள் சந்தோஷத்தை வாழ்நாள் முழுதுமே கெடுத்த பாவம் என்னைச் சேரும்....'

ரங்கராஜனுக்கு நிர்மலாவையும் போய்ப் பார்க்க வேண்டும் என்று ஆசை. மாடசாமியிடம் அதைச் சொல்லவே முதலில் தயங்கினான். கணவனையே தற்கொலை பண்ணிக் கொள்ள வைத்த அந்த நடத்தை கெட்டவளைப் போய்ப் பார்க்க மாடசாமி சம்மதிப்பானா?

சன்னாசிப் புதூருக்கு ரங்கராஜன் வந்து சேர்ந்த மூன்றாவது நாளில் அவனுக்கு ஒரு மணியார்டர் வந்தது. ஐந்து ரூபாய். திண்டுக்கல்லிலிருந்து



"விரல் வலி; கை வலி!"
"ஆபீசில் டைப் அடிக்க வேண்டிய வேலை அதிகமோ?"
"ஊஹூம்! எத்தனை தடவை போட்டாலும் கொண்டை சரியாகவே அமையவில்லை."

பாலு அனுப்பியிருந்தான். அது மதுரைக்கும், அப்புறம் சாத்தூருக்கும் வந்து இங்கு வந்து சேர்ந்தது. அது விஜயாவின் தபால் அல்ல என்பதால் அருணசல முதலியார் கிராமத்துக்கு அனுப்பி விட்டார். மாதம் ஐந்து ரூபாயாக அனுப்பிக் கடனைக் கழித்து விடுவதாக மணியார்டர் பாரத்தின் கீழ்ப் பகுதியில் பாலு எழுதியிருந்தான். இதைப் பார்த்த ரங்கராஜனுக்குக் கண் கலங்கியது. மணியார்டரை வாங்கிக் கொள்ளாமல், அதைத் திருப்பி அனுப்பி விடும்படி சொல்லி விட்டான்.

மறு நாளே மற்றொரு கடிதம் வந்தது. அதுவும் மணியார்டரைப் போலவே ஒவ்வொரு ஊருக்கும் போய்விட்டு வந்தது. சென்னையிலிருந்து ராஜகோபாலன் எழுதியிருந்தான். ரங்கராஜன் மதுரைக்குத் திரும்பியபின் ஒரு கடிதம்கூட எழுதவில்லையே, மறந்து விட்டாயா என்பதையெல்லாம் கேட்டு எழுதியிருந்த ராஜகோபாலன், வக்கீல் தொழிலைத் தொடங்கியாகி விட்டதா, எந்தப் பெரிய வக்கீலிடம் ஜூனியராக இருக்கிறான் என்பதையும் விசாரித்திருந்தான். கடிதத்தின் கடைசிப் பகுதியில், அமெரிக்காவுக்கு ரசாயனத் துறை ஆராய்ச்சிக்காகச் சென்ற ஒருவனைப் பற்றியும், — சென்னைக் கடற்கரையில் ரங்கராஜனிடம் தான் சொன்ன அந்த லட்சியவாதியைப் பற்றி — சில வரிகள் எழுதியிருந்தான். அவன் ரசாயன ஆராய்ச்சியில் கண்ட சில அபூர்வ முடிவுகள் அவனுக்கு வாழ்க்கையில் மிகப் பெரிய ஏற்றத்தைத் தேடிக் கொடுத்துவிட்டன என்றும், அமெரிக்காவிலேயே பெரிய சம்பளத்தில் அவன் பல்கலைக் கழகப் பேராசிரியனாகி விட்டான் என்றும், அவனைப் போலவே ஆராய்ச்சித் துறையில் ஈடுபட்டிருந்த ஓர் அமெரிக்கப் பெண்மணியை அங்கேயே அவன் கல்யாணம் செய்து கொண்டான் என்றும், அந்தத் தம்பதிகள் இப்போது சென்னைக்கு விடுமுறையில் வந்திருக்கிறார்கள் என்றும் ராஜகோபாலன் எழுதியிருந்தான்.

ரங்கராஜன் அன்றே மாடசாமியைத் தபாலாபீசுக்கு அனுப்பிக் கார்டு, கவர் முதலியன வாங்கி வரச் செய்தான். ராஜகோபாலனுக்குப் பதில் எழுதினான். அமெரிக்காவுக்குப் போய் வந்துள்ள அவனுடைய வரலாற்றைக் கேட்கத் தனக்குப் பொறாமையாக இருக்கிறதென்றும் எழுதினான். அவன் எழுத நினைந்து, எழுதாமல் விட்ட வரிகள் இவை:

"பொறாமைப்பட்டு என்ன பயன்? என்னைச் செல்லப் பிள்ளையாகப் பேழைக்குள் வைத்துப் பூட்டி வளர்த்து, எனக்குப் பொன் விலங்கும் போட்டு விட்டார்கள். என்னால் முன்னும் போக முடியவில்லை; பின்னும் போக முடியவில்லை. என்னை ஒரு நிமிஷம் பிரிந்திருக்கக்கூட முடியாத என் தந்தையும், என் மேல் உயிரையே வைத்திருக்கும் என் சித்தப்பா குடும்பமும் தங்கள் அன்பினாலேயே என்னை உதவாக்கரை ஆக்கி விட்டார்கள்; எதிர்காலத்திலும் ஏதேனும் நல்லதைச் செய்து நானும் ஒரு மனிதனாக வாழ விடாமல் செய்யத் திட்டம் போட்டு, தங்கள் இஷ்டம் போல் என் வாழ்க்கையை உருவாக்குகிறார்கள்.... விஜயா... அவளும்தான்...."

அன்றைய தினமே அவன் விஜயாவுக்கும் ஒரு கடிதம் எழுதினான். எல்லா விஷயத்தையும் அவளுக்கு எழுதி அவளைத் துன்பத்தில் ஆழ்த்த விரும்பாமல் சுருக்கமாக ஒரு சில வரிகளிலேயே கடிதத்தை முடித்து விட்டான்.

எழுதத் தொடங்கும்போதே அவனுக்குக் கண்ணீர் வந்தது. தனக்கு நேர்ந்துள்ள தடங்கல்களைக் கண்டு ஆத்திரமும் வந்தது. அதே சமயத்தில் அவளிடத்தில் என்றுமில்லாத அளவுக்குக் காதலும் மரியாதையுமே உண்





பாலூஸேரி பெனிபிட் சிட் பண்டு

பிரைவேட் லிமிடெட்

(ஸ்தாபிதம்: 1947)

"விஷ்ணு விகார்" 17-A, ஃபினாங்க் ரோடு
ஷண்முகானந்தா ஹாலுக்கு அருகில்
சயான் (கிழக்கு) பம்பாய்-22 D. D.

டெலிபோன்: 471455 - தபால்பெட்டி: 6759 - தந்தி: GROWRICH

செப்டம்பர் 1969க்குரிய கீழ்க்கண்ட புதிய குரூப்புகள் ஆரம்பிக்கப்படுகின்றன

ஏலம் கேட்ட பிறகு டிவிடெண்டு அடையும் வசதியுள்ள கீழ்க்கண்ட குரூப்புகள்

குறுகிய காலம்: 25 மாதங்கள்			நீண்ட காலம்: 40 மாதங்கள்		
சேருவதற்கு கடைசி தேதி: 13-9-1969			சேருவதற்கு கடைசி தேதி: 27-9-1969		
முதல் ஏலத் தேதி: 14-9-1969			முதல் ஏலத் தேதி: 28-9-1969		
வகுப்பு	மாதச் சந்தா	சீட்டுத் தொகை	வகுப்பு	மாதச் சந்தா	சீட்டுத் தொகை
	ரூ.	ரூ.		ரூ.	ரூ.
A	200/-	5,000/-	E	500/-	20,000/-
B	100/-	2,500/-			
C	50/-	1,250/-	F	250/-	10,000/-
F	25/-	625/-			
G	20/-	500/-	G	125/-	5,000/-

நீண்ட காலம்: 50 மாதங்கள் — ஏலம் எடுக்காத சீட்டுதாரர்களுக்கு மட்டும் டிவிடெண்டு உண்டு.

சேருவதற்கு கடைசி தேதி: 20-9-1969 - முதல் ஏலத் தேதி: 21-9-1969

வகுப்பு	தவணை	சீட்டுத் தொகை
	ரூ.	ரூ.
LTA	100/-	5,000/-
LTB	50/-	2,500/-
LTD	20/-	1,000/-

வேலை நேரம்: காலை 8 மணி முதல் 10-30 மணி வரை
மாலை 4 மணி முதல் 7-30 மணி வரை

வார விடுமுறை: திங்கட்கிழமை

தலைமை அலுவலகம் & பதிவு செய்யப்பட்ட அலுவலகம்:
"பாலூஸேரி பில்டிங்ஸ்"
3, சிங்கராச்சாரி தெரு, திருவல்லிக்கேணி, தபால் பெட்டி 414, சென்னை-5
கிளைகள்: பெங்களூர் - கல்கத்தா - புது டில்லி

தெளிவான விலாசதாரர்களுக்கு விதிகள் அடங்கிய புத்தகம் இலவசமாக அனுப்பப்படும்

சீட்டுகள் ஒதுக்குதல் கம்பெனியின் உரிமையைப் பொறுத்தது

எங்கள் சேவை உங்களுக்குத் தேவை

டாகி விட்டன. ''பெண் தெய்வமே!'' என்றுதான் கடிதத்தைத் தொடங்கினான் :

'' இப்பொழுது நான் எங்கள் ஊரில் வந்து தங்கியிருக்கிறேன். சீக்கிரத்தில் நான் மதுரைக்கு வருவேன். எந்த நேரமும் உன் நினைவுதான் என்று நான் எழுதித்தான் நீ தெரிந்து கொள்ளவேண்டும் என்பதில்லை. உன்னோடு உன் தந்தையையும் சேர்த்தே இப்பொழுது நான் நினைக்கிறேன். நீயே ஒரு முறை சொன்னது போல, உன்னை மறந்தாலும் அவரை மறக்க முடியாது என்பது உண்மைதான். அதே சமயத்தில் உன்னையும் மறக்க முடியாது என்பதும் உண்மைதான்.

விஜயா, எனக்காக நீ காத்திருப்பாய்; நானும் காத்துக் கொண்டு தான் இருக்கிறேன். நாம் இருவருமே சிறிது காலம் காத்திருக்க வேண்டி வரும். நீ கொஞ்சம் பொறுமை காட்ட வேண்டும். அம்மாவின் ஆசீர்வாதம் நமக்கு எப்பொழுதும் உண்டு.''

இந்தக் கடிதத்தைத் தபாலில் சேர்த்த பிறகுதான், கடிதத்தின் இரண்டாவது பாராவை எழுதியது தவறு என்றும், அவள் வீண் கலவரங்களுக்கு உள்ளாகக் கூடும் என்றும் அவனுக்குத் தோன்றியது. அத்துடன், கலாவைப் பற்றி அவன் ஒரு வரிகூட எழுதவில்லை. விஜயாவின் பெற்றோர்களுக்கு வணக்கம் கூறவுமில்லை. இதுவும் பெருந்தவறு என்று உணர்ந்தான். அடுத்த கடிதத்தில், அல்லது நேரில் போய் ஒன்றுக்குப் பத்தாக அன்புரைகளைப் பொழிந்து கட்டிவிட முடிவு செய்தான்.

அவனுடைய கடிதத்துக்கு விஜயாவிடமிருந்து உடனே பதிலும் வந்தது. அவள் மனக் கலவரம் எதுவுமில்லாமலும், தான் எதிர்பார்த்ததையே அவனும் எழுதியிருக்கிறான் என்று கருதிய பாவனையிலும், இறுதி வெற்றியில் அசையாத நம்பிக்கையைப் புலப்படுத்தியும் எழுதியிருந்தாள். அந்த நம்பிக்கையின் உறுதியில்தான் கடிதத்தை உணர்ச்சிப் பிரவாகமாக எழுதி நிரப்பாமல், சரசமும் அலங்காரமுமாக எழுதியிருந்தாள்:

''பால்வடியும் வதனமே!

உனக்குக் கோடி நமஸ்காரம். நீ இல்லாமல் என் மனம் மட்டுமல்ல, இந்த ஊரே வறண்டு கிடக்கிறது. நான் எப்படிப் பொறுமையோடு காத்திருக்க முடியும்? என்

கணவன்: என் ஜானவாசத்தின்போது வாங்கின 'சூட்'டும் 'கோட்'டும் போட்டுண்டு இருக்கேனே இப்போ... இதைப் பார்த்ததும் உனக்கு என்ன ஞாபகம் வரது?''

மனைவி: ''ஒரு பெரிய எவர் சில்வர் அடுக்கு!''

— சுதாகரன்



'பாப்பா'க்கள் (கண்ணின் கருமணிகள்) பாலில்லாத குழந்தைகளைப் போல் தாங்க முடியாத பசியால் வாடிப் போய் விட்டன; ஒளி இழந்து, உயிர்களையும் இழந்து கிடக்கின்றன. உன்னை எப்பொழுது திரும்பவும் காண்பேன்? உன் தரிசனம் மட்டும் எனக்குத் தினம் தவறாமல் கிடைத்துக் கொண்டிருக்கும் என்றால், 'மற்ற எதற்கும்' நான் எத்தனை யுகங்கள் வேண்டுமானாலும் காத்திருப்பேன்.

கிராமத்து வெயிலில் திரிய வேண்டாம்; என் கண்களைப் போல் நீயும் வறண்டு விடக் கூடாது. வாடிக் கறுத்துப் போய் விடாதே. எனக்காகக் கேட்டுக் கொள்கிறேன்.

இப்படிக்கு உன்
(நான் யாரோ? ஓர் ஏழை என்று வைத்துக் கொள்)

விஜயா.''

''விஜயா ! நீயா....?''

கடிதத்தை வாசித்து முடித்ததும் சித்தப்பா அவனைக் குறிப்பிட்டுப் பேசிய கொடூரமான இழி சொற்களை மனமில்லாமலே நினைவுக்குக் கொண்டு வந்து குமுறினான் ரங்கராஜன். அவரை இழிவாகப் பேசித் தன்னைத் தடுப்பவர்களுக்கு ஒரு பாடம் கற்பிக்க வேணும். அதிர்ச்சி தரக் கூடியவாறு ஒரு செயலைத் துணிந்து செய்தே ஆக வேண்டும் என்று அப்பொழுது அவனுக்கு ஆவேசமே உண்டாயிற்று. அந்த உணர்ச்சி வேகத்தில் அன்று மாலையிலேயே மாடசாமியுடன் வெளியே சென்ற ரங்கராஜன், வேண்டுமென்றே நிர்மலாவின் வீட்டு வாசல் வழியாக நடந்து சென்றான்.

''அவள் வீட்டில் இருப்பாளா?'' என்று ரங்கராஜன் அவனைக் கேட்டான்.

"இருக்காளோ, எங்கேயும், தொலைஞ்சி போயிருக்கிறளோ? எவன் கண்டான்?" என்று வெறுப்போடு சொன்னன் மாடசாமி.

"இப்படிப் பேசாதிங்க. அவளை நான் பார்க்கணும்" என்றன் ரங்கராஜன்.

"ஏன்?" என்று பீதியோடு கேட்டான் மாடசாமி.

"அவள் உள்ளே இருக்கிறளான்னு பார்த்துட்டு வாங்க. மத்ததை அப்புறம் பேசிக்கலாம்" என்றன் ரங்கராஜன்.

"என்னைக் கொன்னலும் அந்தச் சண்டாளி மூஞ்சியிலே முழிக்கமாட்டேன், முதலாளி. நீங்க என்ன சொன்னலும் சரி" என்று சொல்லி ஒரேயடியாக அவன் தலையைக் குலுக்கி விட்டான்.

ரங்கராஜனுக்குக் கோபம் வந்தது. ஆனலும் மாடசாமியின் தார்மீகப் பிடிப்பையும் வைராக்கியத்தையும் பார்த்துச் சிரிப்பும் வந்தது.

"மாடசாமி! நீங்க ரொம்ப நல்லவங்க! எங்க அப்பாவும் சித்தப்பாவும் கூட நல்லவங்கதான். ஆனல், நல்ல காரியம் செய்யறதுக்கு நல்லவங்களே தடங்கலா இருக்கிறங்களே! இதைப் பார்த்தால், எனக்கு என்ன செய்யறதுன்னே தோணலை. ரொம்பப் பரிதாபம்!"

ரங்கராஜனே போய்க் கதவைத் தட்டினன். அது திறந்ததும் உள்ளே போய் விட்டான்.

நிர்மலா இருந்தாள்; அவளுடைய குழந்தைகளும் இருந்தார்கள். அவர் களைத் தவிர 'இருக்கிறது' என்று சொல்லத் தக்கவாறு வேறு எதுவுமே வீட்டில் இல்லை — அழுக்கையும் கந்தலையும் தவிர. ரங்கராஜனைப் பார்த்து எல்லோரும் மிரள மிரள விழித்தார்கள். நிர்மலா முன்பு பார்த்ததை விட மெலிந்து அரை உடம்போடு இருந்தாள். அவள் இன்னும் மெலிந்தாலும் சுற்றுக்கு எட்ட முடியாத ஒரு பழங் கந்தையை உடுத்தியிருந்தாள்.

"அம்மா! யார், என்ன, ஏன், எதுக்குன்னு எதுவும் கேட்காதிங்க. இந்தாருங்க, இந்த நூறு ரூபாயை வச்சிக்குங்க. உங்க கஷ்டத்தைப் பற்றிக் கேள்விப்பட்டேன். உங்களுக்குக் குடியிருக்கச் சொந்த இடமில்லேன்னும் தெரிஞ்சது. சீக்கிரமா இடம் கிடைக்கும். கவலைப்படாதிங்க" என்று சொல்லி ரூபாய் நோட்டுக்களை—அவள் கை நீட்டி வாங்க அஞ்சி நிற்பதைக் கண்டு — எதிரிலேயே போட்டு விட்டுப் போன வேகத்தில் வெளியே வந்தான். வாசலில் நின்று பார்த்துக் கொண்டிருந்த மாடசாமி அவனைத் தொடர்ந்து சிறிது தூரம் போனபின் "முதலாளி! இது என்ன வேலை?" என்று பிரலாபித்தான்.

"மாடசாமி! உங்களுக்குத் தெரியாது. அவளைத் தண்டிக்க நீங்க யார்? இல்லை, நான் யார்? அவள் குழந்தைகளையும் பார்த்துட்டு இப்படிப் பேசு நீங்களே, உங்களுக்கும் குழந்தைகள் இருக்கிறப்போ! இதைப் பத்தி இனிமேல் நாம்ப பேச வேண்டாம். வாருங்க. நல்ல வேளை, இன்னிக்கே இந்தக் காரியத்தையும் செய்துட்டேன்; இந்த வாக்குறுதியும் குடுத்திட்டேன்—நாளைக்கு என் மனசு மாறிட்டால் என்ன பண்ணறது? அவளுக்கு நான் குடியிருக்க இடம் குடுத்தாகணும் — எப்படியாவது. இதைப் பத்தி நீங்க ஒருத்தர்கிட்டவும் ஒண்ணும் சொல்லக் கூடாது."

ரங்கராஜனிடத்தில் மாடசாமிக்கு இருந்த பாசமும் மதிப்பும் அடியோடு தகர்ந்து சரியத் தொடங்கிவிட்டன. இது ரங்கராஜனுக்குத் தெரியாது. தெரிந்திருந்தால் அதை வரவேற்கக் கூடிய மன நிலையில்தான் அப்போது இருந்தான். அத்துடன், உலகமே பார்த்துச் சிரித்துப் பழிக்கும்படியாக ஒரு நல்ல காரியத்தைச் செய்ய நமக்குத் தகுதியும் வந்து விட்டது, துணிவும் வந்து விட்டது என்று சில தினங்களுக்குப் பிறகு அவனுக்கு ஏற்பட்ட பெருமிதமும் அவனுக்கு அன்றே உண்டாகியிருக்கும்.

அவன் சட்டைப் பையில் இரண்டு ஒரு ரூபாய் நோட்டுக்களும் சில்லறைக் காசுகளும்தான் மிஞ்சியிருந்தன. அன்று இரவு பஸ்ஸில் சாத்தூருக்குப் புறப்பட்டுப் போய் விட்டான்.

முதல் பாகம் முற்றும்



சென்னை
மிட்லண்ட்
ஏர்கண்டிஷண்ட்
பிராட்வே
கிருஷ்ணவேணி
சரவணா
மற்றும்
தென்னகமெங்கும்
நடிகர் திலகம்
சிவாஜி கணேசன்
நடிக்கும்
முக்தா பிலிம்ஸ்
நிறைகுடம்
திரைக்கதை
வசனம்
சோ
டைரக்ஷன்
V. சீனிவாசன்
தயாரிப்பு
V. ராமசாமி
MARS

டாக்டர் சுமித்ரா பரபரப்போடு தன் நோயாளிகளைக் கவனித்து விட்டு நிமிர்ந்தாள்.

"இனிமேல் யாருமில்லை, டாக்டர்!" என்றாள் நர்ஸ் மாதவி.

ஸ்டெத்தை மேசை மீது தள்ளி வைத்து விட்டுக் கைகளைச் சோப்பிட்டுப் பேஸினில் கழுவி விட்டு டவலை எடுத்துத் துடைத்துக் கொண்டாள். தன் ஓவர்கோட்டைக் கழற்றி மேசை மீது போட்டு விட்டு மாடிக்குப் படியேறினாள் டாக்டர் சுமித்ரா.

மணி பதினொன்று அடித்தது.

குளியலறையிலிருந்து அவள் வெளிப்பட்ட போது சமையல்காரன் சூடான இட்டிலிகளை மேசை மீது வைத்தான். 'மெடிகல் ஜர்னல்' ஒன்றில் பார்வையைச் செலுத்திய வாறே காலை ஆகாரம் சாப்பிட்ட சுமித்ரா சிறிது நேரம் களைப்போடு சோபாவில் சாய்ந்து கால்களைத் தொய்வாக நீட்டிக்கொண்டாள்.

"டிர்ரிங்.... டிர்ரிங் டிர்ரிங்....!"

பக்கத்திலிருந்த டெலிபோனைக் கையில் எடுத்தாள் சுமித்ரா.

"நான் மித்ரா பேசறேன். அங்கே டாக்டர் சுமித்ரா அவர்கள்தானே?" என்று விளையாட்டுக் குறும்புடன் குரல் கேட்டது.

"ஓ! திரைத் தாரகை மித்ராதேவி அவர்களா?" என்று எதிர்க் கேள்விக் குரல் தந்தாள் சுமித்ரா.

"ஆமாம், ஆமாம்! ஒரு சந்தோஷ சமாசாரம் சொல்லப் போகிறேன், சுமித்ரா. என் மகள் கலா படிப்பில் சூரப் புலி என்றால் விளையாட்டில் பந்தயக் குதிரை தான்! அவள் கல்லூரிப் போட்டிகளில் பாதிப் பரிசுகள் அவளுக்குத் தானும்!"

"முன்பே தெரியுமே! அவள் கல்லூரியில் தலைமை தாங்கிப் பரிசுகள் வழங்க என்னை அழைத்திருக்கிறார்கள். அப்போதுதான் கேள்விப்பட்டேன், உன் மகள் கலா அத்தனை பரிசுகளையும் என்னிட்டேயிருந்துதான் வாங்கப் போகிறாள்!"

"ஓ! இரட்டிப்புச் சந்தோஷம் எனக்கு! உன் பெண் கமலா ஆறு வயசிலே நாட்டிய அரங்கேற்றம் பண்ணிய போது நான் தலைமை வகித்தது ஞாபகம் வர்றது...."

"நல்ல ஒற்றுமைதான் இது! வேறே என்ன விசேஷம்?"

"என்ன அவசரப்படறே?"

"ஒன்றுமில்லை: ரொம்ப 'டல்'லடிக்கிறது! என் கணவரும், கமலாவும் உறவினர் வீட்டுத் திருமணத்துக்குப் போயிருக்காங்க. இன்று ஞாயிற்றுக்கிழமை வேறு, மாலையிலே க்ளினிக் இல்லை. சாயந்திரம் படம் பார்க்கப் போகலாமான்னு யோசனை. நீ நடிச்ச எந்தப் படம் சமீபத்திலே வந்ததிலே நல்லதுன்னு சொல்லேன்."

"சரிதான்! அதுகூடத் தெரிஞ்சுக்காமத் தான் இருக்கிறாயா? 'சோதனை' பார்."

"வேதனையா இருக்காதே?"

"என் நடிப்பையா குறை சொல்லறே?"

"கோபிக்காதே, மித்ரா! சோகமா இருக்காதேன்னு கேட்டேன்."

"ஹாஸ்யப் படம்தான். போய்ப் பார். சுமித்ரா! எனக்கு ரெண்டு நாளா உடம்பெல்லாம் ஒரே வலி. ஏதாவது மருந்து தருகிறாயா?"

"ஓய்வு எடுத்துக் கொள். உன் உடம்புக்கு ஒன்றுமில்லை. நாளுக்கு நாள் பருக்கிறாயே, உடம்பை 'டையட்'டில் போடேன். தானா உடம்பு வலி குறையுது!"

"நீதான் சொல்லாதது பாக்கி. பத்திரிகைகள் கேலி பண்ணறது போதாதா?"

"நான் சொல்றது உனக்கு 'பிளட்பிரஷர்' வராமலிருக்கணுமேன்னு தான்!"

"எப்படியோ உடம்பு எனக்குப்பருத்துடறது."





கோமகள்

'டையட்' பற்றி நேரே பேசறேன்; இங்கே யாரோ வராங்க, வைச் கட்டுமா ?''

சுமித்ரா போனை வைத்து விட்டுச் சோபாவில் சாய்ந்து கொண்டாள். மனத்துள் சிரிப்புக் குமிழ்ந்தது. பழைய பழகிய நாட்களின் கதம்ப மணம் நெஞ்சைச் சூழ்ந்தது:

எத்தனை குட்டிகையாக வெடுக் வெடுக்கென்று பேசிக் கொண்டு கொடி போன்ற உடலோடு வளைய வருவாள் இந்த மித்ரா ! இன்று உடம்பு கொஞ்சம் ஊறி விட்டது. புகழ்பெற்ற பெரிய நடிகை அல்லவா ?

சின்ன வயதிலிருந்தே மித்ராவுக்குச் சினிமாப் பைத்தியம் அதிகம். பார்ப்பதோடு நிற்கவில்லை அது. தானே நடிக்க வேண்டும் என்ற பேராசைக் கனவாக வளர்ந்தது. அதைத் தடுத்துக் கொண்டே வந்தாள் சுமித்ரா. ஆனாலும் மித்ராவின் ஆசை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வந்தது.

இருவரும் பள்ளி இறுதி வகுப்பில் படித்தபோது மித்ராவுக்குத் திருமணம் நடந்தது. நாடக நடிகனை சீனிவாசனை அவள் விரும்பி ஏற்றாள். அதில் புதைந்திருந்த உட்பொருள் அப்போது யாருக்குமே விளங்கவில்லை தான்! கலை உள்ளம் கொண்ட கணவனிடம் தன் ஆசையைக் கூறி யிருக்கிறாள் அவள். அவள் கணவன் முதலில் பிறருக்கு அஞ்சி ஒப்பவில்லையாயினும், அப்புறம் அவள் திறமைக்குச் சந்தர்ப்பம் தேடித் தந்தான். முதல் படத்திலேயே கதாநாயகியாக நடித்தாள் மித்ரா. அவள் பெயருடன் 'தேவி' யும் ஒட்டிக் கொண்டது! பெயரில் கவர்ச்சி வேண்டாமா, என்ன?

வாழ்க்கையின் ஆசைகளும், அபிலாஷைகளும் ஒவ்வொருவரையும் தனி வடிவமாகச் சமைத்து விடுகின்றன. சுமித்ராவும் திருமணம் செய்து கொண்டாலும், தன் விருப்பப்படியே மருத்துவப் படிப்பை முடித்துவிட்டு டாக்டரானாள்.

தனக்கு வாரிசாகத் தனக்கு ஒரே பெண்ணான கமலாவும் டாக்டராக வேண்டும் என்பதும் சுமித்ராவின் அவாவாக இருந்தது.

மருத்துவக் கல்லூரியில் சேருவதற்கான விண்ணப்ப மனுவுடன் உட்கார்ந்தாள் சுமித்ரா. கமலாவின் மதிப்பெண்கள் அவளுக்கு ஒரு 'ஸீட்'டைத் தரும் தகுதியைக் கொடுக்கும் என்ற நம்பிக்கையில் அவள் முகத்தில் புன்முறுவல் ரேகை ஓடியது.

''அம்மா !'' என்று தயங்கியவாறே கதவருகே நின்றாள் கமலா.

''என்ன கமலா ?'' என்று கனிவான குரலில் கேட்ட சுமித்ரா அழகின் வடிவாக நிற்கும் தன் மகளை ஆதுரத்துடன் பார்த்தாள். அழகுக்கு அழகு என்பது போல் கமலாதான் எத்தனை அலங்காரம் பண்ணிக் கொண்டிருக்

றாள்! எப்போதுமே அவள் அலங்காரப் பிரியைதானே ?

"ஒன்றுமில்லை, அம்மா !" என்று மருகித் திரும்ப முயன்றவளை, ஆதரவாகத் தன் அருகே இழுத்து அணைத்தாள் சுமித்ரா.

"சொல்லேன், கமலா! இப்படி எதற்குமே நீ வெட்கப்படவோ, பயப்படவோ மாட்டாயே?" என்று கேட்கும் போதே அவள் மனத்துள் ஒரு சிறு நெருப்புப் பொறி பறந்தது. என்னவாக இருக்கும்? இந்தக் காலத்தில் எந்த விதமாக வளர்ந்திருந்தாலும் எந்தப் பெண்ணை நம்ப முடிகிறது? அவள் உடம்பு மெல்ல நடுங்கியது.

"நீ கோபிப்பாய் அம்மா !"

"கோபிக்கக் கூடியதானால் கோபிக்க வேண்டியதுதானே ?" என்று ஜாக்கிரதை உணர்வோடு கூறினாள் சுமித்ரா.

கமலா தலை குனிந்தாள். அவளின் ஆவல் முகமெல்லாம் கிளர்ச்சியாக மின்னினாலும் தயக்கம் முனைந்து தடுத்தது.

"என்னவென்று சொல்லி விடேன்."

"வந்து.... வந்தும்மா..."

டாக்டர் சுமித்ராவுக்கு அப்பொழுது டெலிபோன் மூலம் அவசரக் கேஸ் ஒன்றுக்கு அழைப்பு வந்தது. உடனே புறப்பட்டு விட்டாள். கமலா தயக்கத்துடன் மேலே தொடராமல் நின்று விட்டாள்.

அடுத்த நாள் நோயாளிகளைப் பார்த்த பின் விச்ராந்தியாகப் படுத்திருந்த டாக்டருக்கு மித்ரா தேவி போன் செய்தாள்.

"சங்கதி தெரியுமா உனக்கு?" என்றாள் மித்ரா தேவி.

"என்ன விஷயம்?"

"கேட்டா நீ பிரமிச்சுடுவே சுமித்ரா. என் பெண் கலா மெடிகல் காலேஜிலே சேர மனுப் போடப் போறாளாம். அது விஷயமாகச் சுமித்ரா 'ஆன்டி'யிடம் போகணும் என்றாள். கொஞ்ச நேரத்தில் அனுப்பி வைக்கட்டுமா?"

"நல்லது! நீ என்னவோ அவளைச் சினிமாத் துறையிலேயே இழுத்து விடணும்னு சொன்னியே?"

"அப்படித்தான் நினைத்தேன். ஆனால் அவள் ஒரே பிடிவாதமாக நிற்கிறாள். எவ்வளவோ சொல்லிப் பார்த்துட்டேன். அவள் உன்னைப் போல் பெரிய டாக்டராகணுமாம். உனக்குக் கீழே பயிற்சி பெறணுமாம். உனக்கு இருக்கிற கண்ணியமான புகழும், கௌரவமான அந்தஸ்தும்தான் அவளுக்கு வேண்டுமாம். உன்னோட சேவை மனப்பான்மைதான் அவளுக்குப் பிடிச்சிருக்காம்."

புகழ்ச்சி போன் வழியே வந்தபோதுகூடச் சுமித்ராவுக்குக் கூச்சமாக இருந்தது. "உன் பெண்ணா அப்படி யெல்லாம் சொல்கிறாள்?" என்று கேட்டாள்.

"என் பெண்ணேதான். இன்னும் என்னென்ன சொல்கிறாள் கேளேன். இந்தச் சினிமா உலகத்தின் கவர்ச்சியான புகழும் நடிப்பான மரியாதையும் அவளுக்குப் பிடிக்கவில்லையாம்!... உன்னைப் பார்த்துக் கொண்டு உங்கிட்டப் பழகுகிறதினாலே, பாரேன், என்கிட்டே இருந்தாலும், உன்னை மனசிலே ஏத்துக்கிட்டு உன் மாதிரி வரணும்னு மனசை வளர்த்துக்கிட்டிருக்கிறாள்! நீதான் அவளோட அட்ராக்ஷன்!"

"அவளை அனுப்பி வையேன்."

"அனுப்பறேன். உன் கையாலே அவள் மனுவை எழுதி அனுப்பு. உன்னைப் போல் நல்ல டாக்டராகப் பிரகாசிப்பாள் அவள். அந்த நம்பிக்கை எனக்கு இருக்கு சுமித்ரா!"

"மித்ரா! ப்ளீஸ்! நீ என்னை ரொம்பப் புகழ்ந்துட்டே. போதும்! நீ நடிச்ச படத்தைப் பார்த்துக்கூட நான் ஒன்னும் புகழலியே!"

மறுபுறம் சிரிப்போசை கேட்டது.

போனை வைத்த டாக்டர் சுமித்ராவின் கண்களில் வாசல் திரையோரம் தயங்கி நிற்கும் கமலா தென்பட்டாள். ஆடம்பரமாக உடுத்திக் கொண்டிருந்தாலும் அவள் முகத்தில் ஒரு சிறு சோர்வு. பரிதாபமான மௌனத்தில் மோவாயின் துடிப்பு.

பாசச் சுரப்பில் நனைந்த சுமித்ரா ஒரு கணம் தன் பெண் எதை விரும்பினாலும் அல்லது எதைக் கேட்டாலும், அதை அந்தக் கணமே நிறைவேற்றி வைப்பதாக உறுதி கூறத் துடித்தாள்.

"வாம்மா கமலா! வந்து உட்கார்!"

கமலா அம்மாவுக்குப் பக்கவாட்டில் இருந்த சோபாவில் வந்து உட்கார்ந்தாள். அவளது அமைதியான ஆழ்ந்த பார்வை தாயைச் சந்தித்த கணமே புடவை நுனியில் ஒட்டிக் கொண்டது!

"என்னென்று சொல்லேன் கமலா. நேற்றிலிருந்து மனசிலே பூட்டி வச்சுக்கிட்டு அவதிப்படறியே ஏன்?"

கமலா தலையை நிமிரும் தைரியமற்றுக் குனிந்து கொண்டே யிருந்தாள்.

"சரி, உன் அப்ளிகேஷனை எடு. சர்டிபிகேட்டுகளை எல்லாம் சரிபார்த்து வைக்கலாம். இப்போது கலாகூட வருவாள். அவளும் உன்னோடு மெடிக்கலுக்குச் சேரப் போகிறாளாம்."

"அம்மா!" சட்டென்று தைரியத்தைத் திரட்டிக் கொண்ட குரலுடன் விளித்தாள் அவள்.

"என்னம்மா? என்னத்துக்கு இந்தப் பதற்றம்? சொல்லிவிடேன் மனசைத் திறந்து."

"நான் மெடிகல் காலேஜில் சேரப்போறதில்லையம்மா...நான்... நான்..." திணறலில் வார்த்தைகள் அதற்கு மேல் வெளிவரவில்லை.

சுமித்ரா தன்னைச் சமாளித்துக் கொண்டு சிரிப்பது போல் கேட்டாள். "ஏன், கல்யாணம் பண்ணிக்கலாம்னு தீர்மானம் பண்ணியிருக்கிறாயா? அதற்கும் படிப்புக்கும் ஒன்றுமில்லையே. நான்கூடக் கல்யாணத்துக்கு அப்புறம்தான் மெடிக்கல்லே சேர்ந்தேன்."

"இல்லேம்மா! நான் சினிமாவிலே சேரப் போகிறேன்!"

சுமித்ராவின் கண்கள் அனலாயின. ரௌத்ராகாரமான கோபப் பொங்கலில் கைகள் பளீரெனக் கமலாவின் கன்னங்களை அறைந்து மீண்டன.

கமலா தலை குனிந்து கேவினாள்.

சுமித்ரா ஒரு நிமிடம் தன்னைக் கட்டுப் படுத்த இயலாத கோபத்தில் தடுமாறினாள்.



அவள் மகள் சினிமா நடிகையாவதா? என்ன துணிச்சல் அந்தப் பெண்ணுக்கு!

''என்னைக் கேட்காமலேயே நீ முடிவுக்கு வந்துட்டே, இல்லையா? அப்பா, அம்மா விருப்பத்தை நீ மதிக்க வேண்டாமா?''

''அது எனக்கு விருப்பமானது. அதனாலே நீயும் அப்பாவும் மறுப்புச் சொல்லாமல் ஒப்பணும்னு நான் எதிர்பார்க்கிறேன் அம்மா....'' கொஞ்சம் மனத்தை விண்டு விட்ட தைரியத்தில் இப்போது அவள் வாயில் வார்த்தைகள் தெளிவாக வந்தன. ''உங்க அநுமதி வேணும்!''

''அது கிடைக்கல்லேன்னு?''

''நான் சேரத்தான் போகிறேன் அம்மா. என்னுடைய மிகப் பெரிய கனவு அது. கலை உலகத்திலே ஒரு நிலைத்த பேரையும், புகழை யும் பெறணும்னு எனக்கு ரொம்ப ஆசை! உங்க விருப்பத்தை நான் மதிக்கணும்னு எதிர்பார்க்கிற மாதிரி, என் விருப்பத்தையும் நீங்கள் பூர்த்தி செய்ய அநுமதிக்க வேண் டியதுதான்! மித்ரா தேவியோடு பழகும் போது ஒரு பிரபல நடிகையோட தோழிங்கற பெருமையை நீ அனுபவிச்சதில்லையாம்மா? நானும் அந்த மித்ராதேவி போல வரணும்னு விரும்பிறே அதை மட்டும் ஏன் தடுக்கணும்?''

சுமித்ரா விரும்பியபடி அவள் மகள் கமலா டாக்டர் கமலா ஆகப் போவதில்லை. அவள் கமலா தேவியோ, கமலகுமாரியோ ஆக லாம்! அவள் தன் பிடியிலிருந்தும் பிறழப் போவதில்லை. பீறிட்டுக் கனன்ற ஆத் திரத்தைச் சிரமத்துடன் பொறுத்துக்கொண் டாள் சுமித்ரா.

சட்டென்று சுமித்ராவுக்கு, மித்ராதேவி கூறியது நினைவுக்கு வந்தது. 'உன்னைப் பார்த்து, உன்னோடு பழகி உன்னைப் போலவே டாக்டராகணும்னு விரும்புகிறாள் என் பெண்' என்றாளே... தன்னைப் பார்த்து இழுபட்டுக் கலா டாக்டராக வேண்டும் என்று விரும்பி யிருந்தால், அதே போல் கமலாவும் மித்ரா தேவியைப் பார்த்துப் பழகி, அவளைப்போல் நடிகையாக வேண்டும் என்று விரும்பியிருப் பாளோ? அப்படியும் இருக்கலாம்தான்! அவளுக்கு ஆட்டமும், பாட்டும் சொல்லித் தந்து, அரங்கேற்றமும் நடத்தி வைத்து, மித்ரா தேவியைக் குடும்பத் தோழியாகவும் ஏற்றதால், அதே சூழலில் வளர்ந்த ஓர் இளம் உள்ளம் பாதை மாறுகிறதா என்ன? சுமித்ராவின் அருகிலேயே கமலா இருந் தாலும், மித்ரா தேவியை மனதிலே வைத் துக்கொண்டு வளர்ந்துவிட்டாளா? அப்படி யானால் அவள் அரவணைப்பில், அன்பு வளர்ப் பில் எங்காவது ஓட்டை விழுந்து விட்டதோ? அல்லது திரைக் கவர்ச்சியின் மாயத்துக்கு அவளும் அடிமையாகி விட்டாளோ?

இந்தக் குழப்பத்தில் தெருவில் குழல் ஒலியுடன் படகுக் கார் வந்து நின்றதோ, அதிலிருந்து கலா இறங்கி வந்ததோ, யாருக் கும் தெரியாது.


''ஆன்ட்டி! உள்ளே வரலாமா?'' என்ற குரல் கேட்டதும்தான் சுமித்ராவும், கமலா வும் தன் நினைவுக்கு வந்தனர்.

''வாம்மா கலா, உள்ளே வா...''


கலா மரியாதையோடும், அடக்கத்தோடும் உள்ளே வந்தாள். ''ஆன்ட்டி! என்னை ஆசீர் வாதம் பண்ணுங்க. உங்கள் கையாலே, கமலாவோட அப்ளிகேஷன் எழுதும்போது என்னுடையதையும் பூர்த்தி பண்ணித் தரணும்!''

''அடடே! இதெல்லாம் என்ன? கீழே விழுந்துதான் கும்பிடணுமா என்ன? எழுந் திரு கலா. உன்னோட அப்ளிகேஷனைக் கொடு. பூர்த்தி பண்ணலாம்.''

சுமித்ரா அவள் மனுவைப் பூர்த்தி பண்ணி விட்டு நிமிர்ந்தாள். பொம்மையாக எதிரே உட்கார்ந்திருக்கும் கமலாவுக்கும், கலா வுக்கும்தான் எத்தனை வித்தியாசம்? ஒருத்தி தன் உடம்பை நடிப்பின் மூலம் புகழுக்குப் பாத்திரமாக்கத் துடிக்கிறாள்! இன்னொருத்தி



சாலை விபத்துகளைக் குறைக்க ஒரு யோசனை!



சாலை விபத்துக்கள் பெரும்பாலும் இரவிலேயே ஏற்படுகின்றன. இவற்றில் நாற்பது சத விகிதம் எதிரில் வரும் வண்டிகள் தங்களுடைய ஹெட் லைட்டின் ஒளியைக் குறைக்காததினால் அல்லது அணைக்காததினால் ஏற்படுவதாகக் கணக்கிடப்பட் டிருக்கிறது.

இத்தகைய விபத்துக்களை டிரைவர் ஆசனத்துக்கு வலப்புறம் உள்ள கதவினருகே பின்னோக்கி ஒளி வீசத்தக்க போக்கஸ் விளக்குகளை அமைப்பதன் மூலம் குறைக்க முடியும்.

ஒவ்வொரு சாலை வாகனத்துக்கும் இவ் விளக்குகள் அமைக்கப்பட்டால் ஒரே சமயத்தில் எதிரெதிர் வாகனங்களின் ஹெட் லைட்டுகளும் அணைக்கப்பட்டு, சைட் போக்கஸ் விளக்குகள் ஒளி வீசுவதால் வழிப்பாதை நன்றாக, தெளி வாகத் தெரியுமாதலால் வண்டிகள் சாதிக்கேற்ப இயக்கம் பெற ஏதுவாயிருக்கும். இதனால் பகலில் ஓட்டுவது போன்ற உணர்வே ஏற்படும். கண் கூச்சம் போன்றவைகளுக்கே இடமில்லாமற் போய்விடுகிறது.

இம்மாதிரி போக்கஸ் விளக்குகள் ஹெட்லைட் ஸ்விச்சுடன் சம்பந்தப்பட்டிருக்கும் வகையில் அமைத்தால் மேலும் அனுகூலமாக இருக்கும்.

மோட்டார் இதழினின்று - ஜி. வெங்கடேசன்

பேருண்மை !



''அமெரிக்காவைப்போல் சந்திரனில் மனிதனை இறக்கும் முயற்சியில் இந்தியா ஈடுபடப் போவதில்லை.'' - இந்திரா காந்தி

(டெக்கான் ஹெரால்டு)

—பாபு

பிறர் உடம்புக்கு வரும் நோயைத் தீர்ப்பதன் மூலம் சேவை செய்யத் துடிக்கிறாள்!

''எனக்கு இடம் கிடைக்குமா ஆன்ட்டி?'' கலா ஆர்வம் குமிழியிடும் ஆவலோடு கேட்டாள்.

''நிச்சயம்! உன் ஆர்வத்துக்குப் பாதை திறக்கும்!'' என்ற சுமித்ராவின் உள்ளம் உதைப்புக் கண்டது. அதே வார்த்தைகள் அவள் மகளுக்கும் பொருந்துமல்லவா?

கலா விடைபெற எழுந்தாள்.

''கொஞ்சம் இரு கலா! கமலாவையும் உங்கள் வீட்டுக்கு அழைத்துப் போ. உன் அம்மாவிடம் அவள் பேசவேண்டியிருக்கும்!''

''தேங்க்ஸ் மம்மி!'' என்று தாயின் ஆமோதிப்புக்கும், தன் விருப்பத்துக்குத் தரும் அநுமதிக்கும் கனிவாக நன்றி செலுத்தினாள் கமலா.

கலாவும், கமலாவும் கிளம்பிச் சென்ற பின் சுமித்ரா எழுந்து கொண்டாள். அவள் நெஞ்சம் எல்லாம் புண்ணாகிக் கிடந்தது. இது என்ன விதி?

கொஞ்ச நேரச் சமாளிப்புக்குப் பின் சுமித்ராவின் விரல்கள் டெலிபோன் எண்களைச் சுழற்றின.

''ஹலோ மித்ராவா? நான் சுமித்ரா பேசறேன்!''

''ஆமாம், சுமித்ரா! என்ன விசேஷம்? கலா வந்தாளில்லையா?''

''வந்தாள். அவள் மனுவைப் பூர்த்தி செய்தாயிற்று. ஆனால் நான்தான் கொஞ்சம் இடிந்து போயிட்டேன். விதின்னு ஒன்னு இருக்கிறதை மனப்பூர்வமாக உணர்கிற நேரம் வந்து விட்டது. அந்த விதி என்னை இப்படிக் குரூரமாகப் புண்படுத்தும்னு தெரியாது மித்ரா....''

''என்ன நடந்தது சுமித்ரா? இப்படி இடிஞ்சு போய்ப் பேசறயே?'' பரிவோடும், கனிவோடும் கேட்டாள் மித்ரா தேவி.

''என் மகள் கமலா என்னைப் போலவே டாக்டரா வரணும்னு கோட்டை கட்டி வச்சிருந்தேன். நொடியிலே அதைத் தகர்த்தெறிஞ்சுவிட்டாள் அவள். டாக்டருக்குப் படிக்க மாட்டாளாம்...'' மூச்சுத் திணறலில் பேச மாட்டாமல் தவித்தாள் சுமித்ரா.

''உன் விருப்பத்துக்கு மாறாக நடக்க மாட்டாளே கமலா? ஏன் அப்படிச் சொல்றே?''

''அவள் இஷ்டத்துக்கு நான் நடக்கணுமாம் மித்ரா! அவள் சினிமாவில் நடிக்கப் போறாளாம். அதுதான் அவளுக்கு ரொம்ப ஆசையாம். அதுதான் அவளுடைய மிகப் பெரிய கனவாம். அதிலே புகழுடைய ஜும்னுதான் அவளுக்குப் பிரியமாம்! பார்த்தியா, என் இஷ்டப்படி நடக்கிறவளோ?'' சுமித்ராவின் நெஞ்சக் கனலில் பாசம் துடித்துப் புரண்டு பரிதவித்தது.

''நான் உனக்கு என்ன சமாதானம் சொல்லட்டும் சுமித்ரா?''

''அதனால்தான் மித்ரா, என் பெண்ணை உன்கிட்டே அனுப்பியிருக்கிறேன். கலா கூடவே அவளும் அங்கே வருகிறாள்!''

''சுமி! சுமி! உன் குரல் ஏன் இப்படி நடுங்கறது?''

''என்னன்னு சொல்வேன் மித்ரா? இப்போது நான் சுயநலக் கௌரவத்துக்கும், பாசச் சுழிப்புக்கும் இடையே போராடிக் கொண்டிருக்கிறேன்...''

''ஓய்வு எடுத்துக்கோ. அப்புறமா உன்னைப் பார்க்க வரேன்.''

விரக்தியாக நகைத்தவாறே போனை வைத்துவிட்டு நெற்றிப் பொட்டை அழுத்திக்கொண்டாள் டாக்டர் சுமித்ரா.

பக்கக் கதவருகே தொங்கும் திரைச் சீலையின் மறைவில் நின்றவாறே ஒட்டுக் கேட்டுக் கொண்டிருந்த நர்ஸ் மாதவியை உலுக்கினாள் சக நர்ஸ் விமலா.

''போனும், போனும், இன்னும் திரும்பவில்லையே என்று பார்த்தால் இங்கே கலாரசியமாக ஒட்டுக் கேட்டாகிறதா? என்ன அத்தனை வயிப்பு? வா, போகலாம்!''

மாதவி சொன்னாள்: ''பதினேழு வருஷங்களுக்கு முன்னே ஒரு டாக்டரம்மாவை நியமிச்சிருந்தாங்க, தாற்காலிகமாக. நம்ப டாக்டரம்மாவுக்கு அது மாதம். அப்போது திரைத் தாரகை மித்ரா தேவியும் இங்கே இருந்தாங்க. ஒரே சமயத்திலே நம்ப டாக்டரம்மாவுக்கும், மித்ரா தேவிக்கும் பிரசவம் நடந்தது. நினைவிருக்கா?''

''நல்லா நினைவிருக்கு. குழந்தைகளுக்குப் போட்டிருந்த நம்பர் கார்டுகள் 'பேசின்'லே விழுந்து போச்சு. அதனாலே எந்தக் குழந்தையை எந்தப் பேசினிலே குளிப்பாட்டினோம்கறது தெரியலே. ஒரு வழியா இப்படித்தானிருக்கும்'னு 'கெஸ்' பண்ணிக் குழந்தையைப் போட்டோம். ஆனால் குழந்தைகள் மாறி விட்டதோன்னு மனசுக்குள்ளே நாம் தவிச்சோம்!''

''அந்தச் சந்தேகம் இன்று எனக்கு ஊர்ஜிதமாகி விட்டது. அன்னிக்குக் குழந்தைகளை நாம் மாத்தித்தான் விட்டிருக்கணும்!'' என்று நீண்ட பெருமூச்செறிந்தாள் நர்ஸ் மாதவி.



ஆற்றங்கரையில் நின்று கொண்டு வெள்ளத்தைப் பற்றிப் பிரமாதமாகப் பேசுவதைவிட வெள்ளத்தில் நீந்தி அக்கரை சென்று பிறரு வாயைத் திறப்பது தான் கெட்டிக்காரத்தனம்.

- மெக்காலே

அனுப்பியது:

வி. ச. வாசுதேவன்



சின்னப் பையன் விஷமம் செய்தான். "உன்னை அடிக்கப் போகிறேன்" என்றாள் அம்மா.

சின்னப் பையன் ஓடிப் போய்ப் புகுந்து கொண்டான் கட்டிலுக்கடியில். அப்பா வந்தார். அம்மா சொன்னாள் நடந்த வற்றை. கட்டிலுக்கடியில் புகுந்து தேடப் போனார் அப்பா. அடியிலிருந்த சின்னப் பையன் கேட்டான்: "உன்னையுமா அடிக்கப் போகிறாள் அம்மா?" "ரோடரியன்" -- "முத்து"



ஆடும் கோயில்!

'பைஸா' நகரின் சாய்ந்த கோபுரம் உலகப் புகழ் பெற்றது. ஆனால் அதைவிட அதிசயமான ஒன்று ருஷ்யாவில் உள்ளது! அதாவது "ஊசலாடும் கோயில்"!

சோவியத் 'ஆர்மேனியா'வில் 'அரகட்' என்ற குன்றின் உச்சியில் ஒரு கோயில் உள்ளது. சில நூற்றாண்டுகளுக்குமுன் ஏற்பட்ட ஒரு நில நடுக்கத்தில், இக்கோயில் அமைந்துள்ள பாறை தனியே பெயர்ந்து நகர்ந்து விட்டது. அது முதல் இக் கோயில் குன்றின் உச்சியில் ஓர் ஓரத்தில் தொத்திக் கொண் டிருக்கிறது. இது அமைந்துள்ள பாறை சிறிதளவே குன்றில் ஒட்டிக் கொண்டிருப்பதால் சில சமயங்களில் இந்தக் கோயில் ஊசலாடுகிறதாம்!

ஆதாரம்: "ஸோவியத் யூனியன்"
தகவல்: வி. ஸம்பத்குமார்

வாழ்க்கை இரகசியம்

வாழ்க்கை என்பது ஒரு மூடியுள்ள இரும்புப் பெட்டிக்கு ஒப்பானது. அதன் இரகசியம் என்பது அந்தப் பெட்டியின் சாவிக்கு ஈடானது. ஆனால் அந்தச் சாவி அந்த இரும்புப் பெட்டியில் வைத்துப் பூட்டப்பட்டு விட்டது. இரும்புப் பெட்டி யைத் திறந்து சாவியை எடுப்பது உன் சாமர்த்தியம்.

-வாழ்க்கை இரகசியம் பற்றி ஓர் அமெரிக்கர்
அனுப்பியவர்: எஸ். எஸ். வைத்தியநாதன்





என்னுடைய தாத்தா யார் என்பது எனக்குத் தெரி யாது. ஆனால் அவர் பேரன் ஒழுக்காக இருக்க வேண்டு மென்பதில் நான் அக்கறை யுள்ளவனாக இருக்கிறேன்.

-- ஒரு பழமொழி

-- வி. ந. ஸ்ரீதரன்



திருப்புகழ் விரிவுரை: திருப்புகழ் (மூலம்)

இந்த விமரிசனம் சிறியதாக இருந்தாலும் விமரிசிக்கப்பெறும் நூல்கள், மிக மிகப் பெரியவை. அந்தப் பெருமை காரணமாகவே எவ்வளவு விமரிசித்தாலும் போதாது என்கிற நிலையில் ஒருசில வார்த்தைகளோடு நிறுத்திக் கொள்கிறோம். ஆகாயத்தை வர்ணிக்கச் சொன்னால் என்ன செய்வது? தமிழ் நாட்டின் பாக்கியமாகிய அருணகிரிநாதரின் திருப்புகழ் ஆகாயமென விரிந்தது. அந்த விரிவுக்கு இப்போது விரிவுரை வந்துள்ளது! திருமுருக கிருபானந்தவாரியார் அவர்கள் **ஆறுபடை வீடுகளில் ஒவ்வொன்றுக்கும் உரிய திருப்புகழ்களுக்குத் தனித்தனியாக விரிவுரை நூல்கள்** எழுதிப் பூர்த்தி செய்திருக்கிறார்கள்.

வாரியார் அவர்களின் மகத்தான புலமையும், அதைவிட மகத்தான பக்தியும் ஒன்று சேர்ந்து, 'மகாவேத பாவ'னாகிய முருகனடியார்களின் வேதமாகிற திருப்புகழுக்கு ஒரு 'மகாபாஷ்யம்' தந்துவிட்டது என்றுதான் சொல்ல வேண்டும். ஆறு தொகுதிகளாக இந்த விரிவுரை வந்திருப்பதோடு, 1300க்கு மேற்பட்ட தீந்தமிழ்த் துதிகள் கொண்ட திருப்புகழ் மூலம் **முழுவதையும்** சுத்தப் பதிப்பாகப் பிரசுரித்துள்ளார் திரு வாரியார் அவர்கள். 800 பக்கங்களுக்கும் அதிகமான இந்நூலுக்கு ஐந்தே ரூபாய் விலை வைத்துள்ளார் என்பதிலிருந்து, மக்கள் முருகனருள் பெறுவதில் அவருக்கு எத்தகைய இதய பூர்வமான ஆர்வம் உள்ளது என்று அறியலாம். இவ்வாறே மற்ற விரிவுரை தொகுதிகளுக்கும் குறைந்த விலையே வைக்கப்பட்டுள்ளது. தமிழர்கள் உள்ளத்துக்கு ஒரு சேமநிதியே உருவாகிவிட்டது. முருகன் அருளால், நமது பாக்கியத்தால், படை வீடுகள் போக எஞ்சியுள்ள பதிகளில் அருணைமுனி பாடிய சுமார் 800 திருப்புகழ் பாடல்களுக்கும் இதே போன்ற விரிவுரை கிடைக்குமாக!

வெளியீடு: திருப்புகழமிர்தம் காரியாலயம், 89, சிங்கண்ண செட்டித் தெரு, சிந்தாதிரிப்பேட்டை, சென்னை — 2.

ஸ்ரீ தேவி மாஹாத்மியம்

பரம் பொருளிடமிருந்து ஜீவர்களைத் தோற்றுவிக்கும் மாயா சக்தியும், ஜீவர்களை மீண்டும் பரம்பொருளிடம் ஒன்ற வைக்கும் ஞான சக்தியுமான அம்பிகைக்கு மிகவும் உகந்த கிரந்தங்களில் ஒன்று ஸ்ரீதேவி மாஹாத்மியம் எனப்படும் ஸப்த சதி மார்க்கண்டேய புராணத்தில் உள்ள இப்புனிதக் கதை, மது — கைடபர், மஹிஷாசுரன், சும்பநிசும்பர் ஆகிய அரக்கர்களின் அழிவுக்கு அன்னை எப்படிக் காரணமாயிருந்தாள் என்பதை அற்புதமாக விளக்குகிறது. மந்திர சக்தி வாய்ந்த நூலாதலால் உலக நலனுக்காக இதன் சுலோகங்களை ஓதி சண்டி ஹோமம் செய்வது உண்டு. இந்நூல் அம்பிகையின் அரிய திருவிளையாடல்களை மொழிவதுடன், ஆங்காங்கு அமரர்கள் அவளை அகம் குளிர்ந்து செய்யும் துதிகளின் மூலம் அடியார்களின் உள்ளத்தை உருக்குகிறது.

தேவி மாஹாத்மியத்தின் தமிழாக்கம் தெளிவாகவும், மூலத்தை அப்படியே அடியொற்றியதாகவும் உள்ளது. ஆங்காங்கு காணும் அடிக் குறிப்புக்கள் மொழிபெயர்ப்பாளரின் வித்வத்தை எடுத்துரைக்கின்றன. தமிழாக்கத்துக்கு முதற்பகுதியாக தேவி தியான சுலோகங்களும், அர்களா ஸ்தோத்திரமும், தேவி கவசமும், தாந்த்ரிக சூக்தமும், மஹாலக்ஷ்மி, மஹாசரஸ்வதி ஆகியோரைக் குறித்த தேவரது துதிகளும் நாகர லிபியிலும், தமிழ் எழுத்திலும் கொடுத்திருப்பது நூற்பயனை அதிகமாக்குகிறது.

தமிழாக்கம்: டாக்டர் வே. ராகவன்; வெளியீடு: ஜோதி நிலையம், சென்னை—18; விலை: ரூ. 2-00.

தியாகராஜரின் உற்சவ சம்பிரதாயக் கீர்த்தனைகள்


சங்கதிகளை விரித்துப் பாடக்கூடிய கிருதிகளைத் தவிர, இவ்வித இசை ஜோடனை அதிகமில்லாமலே உணர்ச்சி மயமாக எடுத்த எடுப்பில் இதயத்தில் ஆழத் தைக்கின்ற திவ்யநாம கீர்த்தனைகள், பிரஹலாத பக்தி விஜயப் பாடல்கள், நௌகா சரிதப் பாடல்கள், உற்சவ சம்பிரதாயக் கீர்த்தனைகள் ஆகியவற்றையும் அருளியுள்ளார் ஸங்கீத ஸத்குருவான ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகள். இவற்றில் உற்சவ சம்பிரதாயக் கீர்த்தனங்களில் ஸ்ரீ ராமனைப் 'பராக்' சொல்லி ராஜோபசாரமாக வரவேற்று, அவனுக்கு வைதேகியை விவாகம் செய்வித்து, நலுங்கு இட்டு, ஆரத்தி சுழற்றி, சோபனம் கூறி, லாலி பாடி, ஊஞ்சலிட்டு, சிரமபரிகாரம் செய்வித்து, சயனிக்க வைத்துப் பின்பு திருப்பள்ளி எழுச்சி சொல்லி, முடிவாக மங்களம் பாடிப் பக்தியின் நானாவித மதுரச் சாயல்களையும் இசையில் வடிக்கிறார் தியாகையர். இத்துறையில் சிறந்த தேர்ச்சி பெற்ற சங்கீத வித்துவான் பேராசிரியர் எஸ். ராமநாதன் அவர்கள், பற்பல சங்கீத சம்பிரதாயங்களையும், சங்கீர்த்தன சம்பிரதாயங்களையும் நன்கு ஆராய்ந்து இப்பாடல்களின் இட்டவட்டமான இசை உருவையும், தெள்ளிய பொழிப்புரையையும், நுண்ணிய குறிப்புரைகளையும் அளித்திருக்கிறார். இசையன்பர்களின் இல்லத்திலும் உள்ளத்திலும் இலங்க வேண்டிய அருமையான நூல்.

வெளியீடு: கலைமகள் இசைக் கல்லூரி, 59ஏ, துளசிங்கப் பெருமாள் கோயில் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை—5; விலை:ரூ. 2-50


அனுபவமுள்ள
மனைவிகள்
எப்பொழுதும்
ஆரதி ப்ளூ
பிரகாசமாகவும்
வெண்மையாகவும் இருக்க
ஆரதி ப்ளூ
ARATI ULTRAMARINE
சேத் கெமிகல்
ஒர்க்ஸ்

உறவின் ஆதாரம்

நா. கிருஷ்ணமூர்த்தி



ராமாமிருதம் கால்கள் இரண்டையும் பிரமிடு மாதிரி மடக்கி, கைகளைப் பின்புறமாக வெண் மணலில் புதைத்தவாறு வானத்தை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான்.

ஒரு பேச்சின்றி — வார்த்தையின்றி வழி முழுதும் தலை குனிந்து வந்தது போலவே வானத்தை வெறித்து நோக்கி உட்கார்ந்திருக்கும் கணவனிடத்தில் கௌரிக்குப் கோபம் கோபமாக வந்தது. ஆனால் எட்டு வருடங்கள் காத்துக் கிடந்து மனசுக்குள்ளேயே எண்ணங்களைப் போட்டுத் தேய்த்துக் கொண்டிருக்கும்போதுதான் அவன் கரம் பற்றினாள். வலது காலை முன்னே எடுத்து வைத்து நுழைந்த வீட்டில் தனக்கு ஆதரவாக எவருமில்லை என்பதை உணர்ந்து கணவனைப் பரக்கப் பரக்கப் பற்றியபோது அவனும் ஒடுங்கினான். நிற்கக்கூட நிழல் கிடைக்காதோ? அவளுடைய உணர்வுகள் பரபரத்தன.

ஆசையோடும், தீராத பரிவோடும் தலையை உயர்த்திக் கணவனை நோக்கினாள் கௌரி. அவன் கரத்தைப் பற்றிக் குலுக்கி, ''இந்தாங்கோ, எங்கேயோ என்னெய் மழை பெய்யறது மாதிரி இருக்கேனே உங்களைத்தான் கூப்பிடறேன்'' என்றாள்.

உலுக்கி அழைத்தவுடன் குத்திட்டிருந்த பார்வையைத் திருப்பிச் சலனமின்றி அவளையே ஒரு கணம் பார்த்து விட்டு முழங்கால்களுக்கிடையில் தலையைப் புதைத்துக் கொண்டான்.

கௌரிக்கு ஆத்திரமும் அழுகையும் பீறிட்டுக் கொண்டு வந்தன. கண்களிடையே பனித்த நீரைக் கொஞ்ச நேரம் கன்னம் நெடுக வழிய விட்டுக் காய்ந்து உலரும் போது துடைத்துக் கொண்டாள். மனம் வெதும்ப, கால் விரல்கள் மண்ணைக் கீறிக் கொண்டே யிருந்தன. அப்புறம் தொண்டை அடைத்துக் கம்மிய குரலில் சொன்னாள்: ''இந்தாங்கோ, நேக்காக நீங்க ஒண்ணும் பரிஞ்சு பேச வேண்டாம். என் தலையெழுத்து அப்படின்னு அப்படியே போகட்டும். ஆனா நீங்க எதுக்கு இப்படி வாயடைச்சுப் போயிருக்கேள்?'' அவள் குரல் நடுங்கித் தழுதழுத்தது.

தலையைச் சற்றே உயர்த்தி அவன் எந்த விதமான சலனமுமின்றி அவளை ஊடுருவி நோக்கினான். வழக்கம்போலவே அவனுடைய முகம் உணர்ச்சியற்றுத்தான் காணப்பட்டது.

''கௌரி!''

யுகம் யுகமாகக் காத்துக் கிடந்தவள்மாதிரி அவள் பக்கமாகத் திரும்பினாள்.

''எனக்கு யாரையும் மீறிண்டு போகத் தெரியலே.''

அவனுடைய சன்னமான குரலில் இழையும் சோகம் கௌரியின் உணர்வுகளைக் கண்டி இழுத்து அப்படியே அழுத்தியது.

நிலைகடந்த நிலையில் அவன் சொன்னான்: ''நேக்கு அம்மா பேசறதுகூட இப்பப் பாந்தமாயிடுத்து. ஆனா வர வர அப்பாவும் கூடச் சேர்ந்துண்டு....'' அடங்கப் போன துக்கம் பொல பொல வென்ற கண்ணீரோடு பீறிட்டது.

அவன் தலையை அசைத்தான். அம்மாவைப் பற்றி அவனுக்குத் தெரியும். ஏனோ கல்யாணமாகிக் கௌரி அந்த வீட்டுக்கு

வந்தது முதல் ஏதாவது நசநச வென்று சொல்லிக் கொண்டேயிருந்தாள். சீர் வரிசையில் ஒன்றும் குறைவில்லை. நகை நட்டிலும் துணிமணிகளிலும் அப்படித்தான். கல்யாணமும் ஏகதடபுடலாகப் பணத்தை வாரி இறைத்துத்தான் நடந்தது. கேட்டதற்கும் மேலாகக் கௌரி வெள்ளிப் பாத்திர வகைகளை அடுக்கடுக்காய்க் கொண்டு வந்தாள். ஆனாலும் மாமியாரின் வாயில் அவள் புகுந்து புறப்பட்டுக் கொண்டேயிருக்க வேண்டியதாயிற்று. ஒவ்வொரு சிறு செயலுக்கும் மாமியாரின் சொல்லைக் கேட்டு, அதையே ஆணையாய் ஏற்று நடந்து கொண்டாலுங்கூட அவளைத் திருப்திப்படுத்த முடியவில்லை.

மாமியாரின் குரல் உச்ச ஸ்தாயியை எட்டும்போது, ''அடி சரிதான்டி போடி! ஒன்னுமில்லாததுக்கு வீணுக் கத்தாதே!'' என்று அடக்கும் மாமனாரும்கூட மெல்ல மெல்லக் கௌரியைக் கைவிட்டு விட்டார். அவளுடைய நம்பிக்கைகள் சிதைவுற்றன.

'ராமாமிருதம் அப்பா பிள்ளையா? அம்மா பிள்ளையா?' என்பதை அவளால் அநுமானிக்க முடியவில்லை. ஆனால் தன்னுடைய முறையீடுகளை — புகார்களை அவன் லட்சியம் பண்ணுவதில்லை என்பதை மட்டும் வெகு விரைவிலேயே தெரிந்து கொண்டுவிட்டாள். ஆரம்பத்தில் அவள் காதோடுகாதாகச் சன்னக் குரலில் கண்ணீரோடு சொல்லும் போது அவன் மௌனமாக விழிகளிரண்டையும் தாழ்த்திப் பரிவோடு நோக்கும்போது அவளுக்கு இதமாகவும் ஆறுதலாகவும் இருந்தது. ஆனால் வர வர அதுதான் அவனுடைய பழக்கமென்று உணர்ந்ததும் அவள் பெருத்த ஏமாற்றம் அடைந்தாள். தன்னுடைய வாழ்க்கையே சூன்யத்தில் உதயமாகி அதிலேயே அஸ்தமித்துப் போய் விடுவது போல அவளுக்கு அடிக்கடி நினைவு துளிர்த்துக் கொண்டிருந்தது.

''நாம எதிலேயும் ரொம்ப நம்பிக்கை வைக்கப்படாது.'' ராமாமிருதம் மெல்லிய குரலில் சொன்னான். அதற்கு என்ன அர்த்தமென்று கேட்பவள் மாதிரி அவள் கண்களை இடுக்கிப் புருவங்கள் நெளிய அவனை நோக்கினாள்.

அவன் எதுவுமே பேசாமல் மணலைத் தட்டிக் கொண்டு எழுந்தான். முன்னே அடி பொறுத்து வைக்கும் கணவனின் பின்னே கௌரி மௌனமாக நடந்து சென்றாள்.

வீட்டுக்குள் நுழைவதற்கு முன்னேயே தாயின் குரல் பலமாகக் கேட்டுக் கொண்டிருந்தது. 'அம்மா பழைய சண்டையைத் தொடங்கி விட்டாளா? இல்லை புதிய யுத்தத்துக்குத் தயாராகிக் கொண்டிருக்கிறாளா' என்பது அவனுக்குத் தெரியவில்லை.

கௌரி தலை குனிந்தபடியே சமையற்கட்டுக்குள் சென்றதும் தாயாரின் குரல் கரகரத்தது. கோபாவேசத்தோடு ஒலித்தது. ராமாமிருதம் பின்புறமாகக் கையைக் கட்டிக் கொண்டு தாயாரை ஏறிட்டுப் பார்த்தான்:

திடீரென்று அவனுடைய குரல் அடங்கி ஒடுங்கி ஊமை ஒலியாய் உருவெடுத்தது.

அவன் தலையை உசுப்பிக் கொண்டான்:

''அம்மா, இது வீடா இல்லியா?''

''என்னடா, சொல்றே, இப்ப?''

''நீ பண்றது கொஞ்சங்கூட நன்னாயில்லே ஆமாம்.''

''சொல்லுவேடா சொல்லுவே. நேக்கு அப்பவே தெரியும். வெளியே அழைச்சிண்டு போறச்சயே நெனைச்சண்டேன். அதேதான் நடக்கிறது.''

அம்மாவின் வார்த்தைகள் அவனை வெகுவாக உலுக்கி விட்டன. மனசுக்குள்ளேயே குமைந்து கொண்டிருந்த மூட்டம் உருண்டு திரண்டு பீறிட்டுக் கொண்டு வந்தது.

''ஏம்மா, இப்ப நான் என்ன சொல்லிட்டேன்?''

''இதோ பாருடாப்பா. இது உன் வீடு; உன் வாசல். இங்க நான் இருக்கப்படாதுன்னு நீ சொன்னாலுஞ் சரி. ஒன்னோட ஆம்படையா சொன்னாலுஞ் சரி இப்பவே பொறப்பட்டுப் போயிடறேன்.'' அவள் அவனுடைய காலடியில் உட்கார்ந்து கொண்டு பிழியப் பிழிய அழுது கண்ணீரை உகுக்க ஆரம்பித்ததுமே ராமாமிருதம் அதிர்ந்து போய் விட்டான். அதற்கப்புறம் அவன் வாயைத் திறக்கவில்லை.

அந்த நிகழ்ச்சிக்குப் பிறகு எந்தச் சச்சரவுக்கும், சமாதானத்துக்கும் அவன் ஒரு வார்த்தையும் சொல்வதில்லை.

தினம் தினம் ஏதாவது பூசல் இருந்து கொண்டேதான் இருந்தது. தவறு எதுவென்றும், யார் செய்தார்கள் என்றும் ஒருவருக்கும் தெரியாது. ஆனால் சண்டை மட்டும் தொடர்ச்சியாகவோ — விட்டு விட்டோ நிகழ்ந்து கொண்டிருந்தது. பகல் முழுதும் விசித்து விசித்து அழுதது போதாதென்று ஒவ்வொரு நாளும் கௌரி இரவு படுக்கையில் ராமாமிருதத்தை ஆரத் தழுவிக் கொண்டு — நடு நடுவில் கண்ணீர் விடுவாள். தன்னோடு சேர்த்து இறுக அணைத்துக் கொண்டு, ஆள்காட்டி விரலையும் நடு விரலையும் சேர்த்து அவள் கண்ணீரைத் துடைப்பதைத் தவிர வேறெதையும் அவன் செய்யவில்லை. இல்லா விட்டால் இரவில் வெகு நேரம் வரை ஆளுக்கொரு பக்கமாக, பரிதாபத்தோடு உட்கார்ந்திருப்பார்கள். ஓரோர் சமயம் அநுதாபத்தோடு அவளின் கருங் கூந்தலை நீவி விட்டு அதோடு நாலு வார்த்தைகள் இதமாகச் சொல்லி, தேம்பித் தேம்பி — விசித்து விசித்து விலாவிலிருந்து அல்லக்கட்டி இழுக்கும் இசுவைத் தணிக்க முயல்வான்.

அவள் விம்மித் தணியும் மார்போடு பரபரப்புடன் ஆவேசமுற்று அவனுடைய கழுத்திலே கையைப் போட்டுக் கட்டி முகத்தை முன்னே இழுத்துத் தன்னுடைய முகத்தோடு அணைத்துப் பேச்சின்றிக் கண்ணீரை உகுக்கையிலே அவனும் குமைவான்: இரண்டு நாட்களுக்கு முன்பு பொறுக்க முடியாமல், ''தனியாகப் போயிடலாம்'' என்று அவள் சொன்னதும் அவன் மருண்டு விட்டான். சட்டென்று அவள் வாயைப் பொத்தி, ''நீங்களா சொல்றேள்?'' என்றான்.

சிறிது நேர இடைவெளிக்குப்பின் அவன் ஏதோ நினைத்துக் கொண்டவன் மாதிரி அவளுடைய கண்களைத் தொட்டுப் பார்த்

தான். பனித்திருந்த நீரை மங்கிய ஒளியில் காண முடியா விட்டாலும் அவளால் நன்ருக உணர முடிந்தது. தாள முடியாமல் உணர்வு மங்கியவள் மாதிரி அவன் மேலே விழுந் தாள். அவன் அப்படியே அவளை அணைத்துக் கொண்டான்.

''என்ன நீங்க வேறெ அழணுமா ?''

அவன் மறுமொழி எதுவும் சொல்ல வில்லை. தீராத வேட்கையோடு அவளைக் கட்டியணைத்துக் கொண்டு, சன்னமான வெம்மைக் காற்றைப் பரப்பிக் கொண் டிருந்தான்.

நாட்கள் நகரும் போது சண்டை சச் சரவுகளும் குறையவில்லை. ஏதோ ஒரு குற்றத்தின் மீது அவளின் தாயார் வசைமாரி பொழிந்து கொண்டிருந்தாள். அநேக சந்தர்ப்பங்களில் அவளுக்கு ஒரு குற்றமும் தேவைப்படவில்லை. அவளே காரணத்தைச் சிருஷ்டித்துக் கொண்டாள். ஆனாலும் ஒரோர் சமயம் கௌரியின் செயல்களே சண்டையை மேலும் தூண்டி விடுவது போலவும் தாயைப் பேச வைப்பது மாதிரியும் அவனுக்குப் பட்டது.

அவன் விஷயத்திலும் கௌரியின் போக்கு அதையே ஒட்டியதாகவும் — பிரதிபலிப்ப தாகவும்கூட எண்ணினான். இரண்டு நாட் களுக்கு முன்னே ஆபீசுக்குப் போகும்போது சட்டையை மடித்துப் பெட்டியில் வைக்கச் சொல்லி விட்டுப் போனான். சாயந்திரம் வந்து பார்த்தபோது அப்படியே கொடியி லேயேதான் அது கிடந்தது. அப்புறம் அன்று துவைத்துப் போடச் சொல்லியிருந்த கைக்குட்டையும் போட்ட இடத்திலேயே இருந்தது. அவனால் தாள முடியவில்லை. பரக்கப் பரக்க அவளை அழைத்துக் கேட்டான்.

அவள் இலேசாகத் தலையை அசைத்தாள். ''மறந்து போச்சு.''

''ஓகோ மகாராணிக்கு எப்படி நினை விருக்கும்? என்ன இங்க வேலே வெட்டி முறிக்கிறேயில்லே?'' அவன் குரல் வர வர உயர்ந்து கொண்டே போனது. தாய்கூட அதைக் கேட்டு அரண்டு போய் விட்டாள்.

''என்னடா, எதுக்கு இப்படிக் கத்தறே?''

''பின்னே என்னம்மா ? இந்தக் கைக் குட்டையைத் தோய்க்கப் போடுன்னு காலம் பற சொல்லிட்டுப் போனேன். இப்ப வந்து கேட்டா மறந்துட்டாளாம்.''

''அதுக்கா இப்படி இரையறே ?''

''ஒனக்குத் தெரியாதும்மா வரவர இவ ளுக்குத் திமிர் ஏறிண்டே போறது.''

அம்மா அவனை ஏறிட்டுப் பார்த்தாள்.

''போடா, கெடக்கு. ரொம்பக் கண்டுட் டான்''. என்று சொல்லி விட்டு அழுகிட்டிருக் கும் கௌரியை அணைத்து அவளது நெற் றியிலே கலைந்து கிடந்த கேசத்தை ஒதுக்கினாள்.

மாமியாரின் வார்த்தைகள் அமுத தாரை யாகக் கௌரியின் இதயம் முழுதும் வியாபித் தது. அவளுடைய அரவணைப்பில் அப்படியே லயித்து மெய்ம்மறந்தாள்.

சந்தடி சாக்கில்....!



சமீபத்தில் சென்னை, தங்கசாலைத் தெருவில் உள்ள சத்திரம் ஒன்றில் என் சகோதரிக்குத் திரு மணம் நடந்தது. என் நெருங்கிய நண்பன் ஒருவன் என்கூட உதவி செய்ய வந்திருந்தான். கல்யா ணத்துக்கு முந்திய தினம் இரவு மாப்பிள்ளை அழைப்பும், மற்ற நிகழ்ச்சிகளும் முடிந்து சாப்பிட்ட பிறகு நண்பர்களும், உறவினர்களும் வீடு திரும்பிக் கொண்டிருந்தனர். அப்போது செருப்புக்கள் விடு மிடத்தில் சிறு சலசலப்பு ஏற்பட்டது.

நானும் நண்பனும் விரைந்தோம். நன்ருக உடை உடுத்திய இரண்டு பிரமுகர்கள் - அதுவரை ஒருவருக்கொருவர் நண்பரைப் போலத் தோன்றும் படி பழகிக் கொண்டிருந்தவர்கள் - ஒரு புத்தம் புதிய ஜோடிச் செருப்புக்காக உரிமை கொண்டாடிக் கூச்சலிட்டுக் கொண்டிருந்தனர். மாப்பிள்ளை வீட் டைச் சேர்ந்தவர்கள் என்று நான் கருதிய அவ்விரு வரும் போட்ட கூச்சலில் நான் புரிந்துகொண்ட தாவது: இரண்டு பேருமே ஒரே மாதிரியான, அள வான, புத்தம் புதிய காலணிகள் அணிந்து வந் திருக்கின்றனர். ஒரு ஜோடி காலணியை யாரோ களவாடி விட்டார்கள். இப்போது மீதமிருந்த ஜோடி யாருடையது? என்பதுதான் கேள்வி.

இந்த ஜோடிச் செருப்பை இருவருமே தன் னுடையதுதான் என்று அடித்துக் கூறினர். விவாதத்துக்குக் காரணமான காலணியைப் பார்த் தேன். எனக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. என் நண்பன் என்னை மெல்ல அடக்கிவிட்டு முன்னுக்குச் சென்றவன் முதலில் அந்த ஜோடிச் செருப்பைத் தனித்தனியாகக் கழற்றிப் போட்டான். பிறகு அவர்களைப் பார்த்து, ''இந்த ஜோடிச் செருப் பின் சரியான விலையை யார் சொல்கிறீர்களோ, அவர்களே இதன் உண்மையான சொந்தக்காரர்'' என்றான்.

ஒரு நபர், ''பதினைந்து ரூபாய் சொச்சம்'' என்றார். மற்றவர் உடனே ''இல்லை, இல்லை! இது பதினாறு ரூபாய் நாற்பத்தெட்டுப் பைசா!'' என்றார்.

''இரண்டு பேருமே தப்பு!'' என்ற என் நண்பன் தொடர்ந்து, ''இதன் விலை பத்தொன்பது ரூபாய் எண்பத்தி நான்கு காசு! வேண்டுமானால் இதோ பில்லைப் பாருங்கள்!'' என்றபடி பர்ஸிலிருந்து பில்லை எடுத்துக் காட்டியவன் - ''இன்று காலையில் தான் வாங்கி வந்தேன்! சாட்சியம் வேண்டு மானால் என் நண்பனைக் கேளுங்கள்!'' என்று என்னைச் சுட்டிக் காட்டினான்.

ஆம். என் நண்பன் கூறியது உண்மைதான். அந்த ஜோடிக் காலணியை நாங்கள் இருவரு மாகத்தான் அன்று காலையில் வாங்கி வந்தோம்.

அவ்வளவுதான். பிரமுகர்கள் இருவரும் முகத்தில் அசடு வழிய மெள்ள நழுவ முனைந்தனர். அவர் களை மடக்கிக் கொண்டு நன்கு விசாரித்ததில், தெரிய வந்ததாவது: ''இப்படி நன்கு உடுத்திக் கொண்டு இதைப் போன்ற பொது நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு திருப்தியாகச் சாப்பிடுவதுடன், கிடைத்தவரையில் சுருட்டிக்கொள்வதுதான் அவர்கள் தொழில்!''


-கார்த்தி

எதிர்பாராத மகிழ்ச்சி

கருணை காத்தது!

புகுமுக வகுப்பில் படித்துக் கொண்டிருந்தேன். பல்கலைக் கழக செய்முறைப் பரீட்சைகள் நெருங்கிக் கொண்டிருந்தன. சுற்றுச் சூழ்நிலையை மறந்து வீட்டில் உட்கார்ந்து கொண்டு தீவிரமாகப் படித்தேன். செய்முறைப் பரீட்சைகளுள் முதல் பரீட்சை பௌதிகம். பரீட்சை நாள் எந்தத் தேதி என்பதைக்கூட மறந்து படிப்பிலே கவனம் செலுத்தினேன்.

அன்று சாயந்திரம் நான்கு மணி இருக்கும். படித்ததினால் ஏற்பட்ட களைப்புத் தீர



வீட்டை விட்டு வெளியே வந்து பிரதான வீதியில் இறங்கிக் காற்றுடச் சிறிது தூரம் நடந்து கொண்டிருந்தேன். அப்போது என் பிரிவைச் சேர்ந்த என்னுடன் பயிலும் மாணவன் எதிரே வந்தான். நான் அவனிடம், ''என்னடா, நாளைய பரீட்சைக்கு எல்லாம் படித்து விட்டாயா?'' என்று கேட்டேன்.

இதைக் கேட்டவுடன் அவன் மிரள மிரள விழித்தான். ''என்ன? நான் இப்போது தான் பரீட்சை முடிந்து வருகிறேன். ஆமாம்! நீ ஏன் பரீட்சைக்கு வரவில்லே?''

'பரீட்சை முடிந்து விட்டதா?' எனக்கு அழுகையே வந்து விட்டது. விழுந்தடித்து ஓடினேன், பேராசிரியர் வீடு சுமார் இரண்டு மைல் தூரத்தில் இருந்தது. அவர் நல்லவர். யாரிடமும் அமைதியாகவும், கருணையாகவும், கோபமின்றியும் உரையாடுவார்.

அவருடைய வீட்டின் கதவைத் தட்டினேன். எனக்கு வியர்த்துக் கொட்டியது. படிப்பிலேயே கவனமாக இருந்ததில், பரீட்சைத் தேதியைக் கூடக் கவனிக்கத் தவறியதைச் சொன்னேன். அவர், தமக்கே உரிய சாந்தமான குரலில், ''இதற்காகவா பயந்து நடுங்குகிறாய்? நாளைக் காலை பத்து மணிக்கு காலேஜ் 'லேபரட்டரி'க்கு வா. வேறு பிரிவுக்கு நடக்கும் பரீட்சையில் உன்னையும் சேர்த்துக் கொள்கிறேன்' என்றார்.

அன்றிரவு எனக்கா தூக்கம் வரும்? இந்த நிகழ்ச்சியைப் பற்றி வீட்டில் யாரிடமும் ஒன்றும் கூறவில்லை. மறுநாள் காலையில் தேவையான புத்தகங்களுடன் கல்லூரியை அடைந்தேன். அப்போது ஆபீஸ் அறையில் பேராசிரியர், கல்லூரி முதல்வரிடம் என்னைப் பற்றி எனக்காக வாதாடிக் கொண்டிருந்தார். அவரும் சம்மதித்தார். மேற்பார்வையாளர்களையும் சம்மதிக்க வைத்தார். அநேக ஆட்சேபங்களுக்குப் பிறகு பரீட்சை இனிதாகவே முடிந்தது.

தேர்வு முடிந்தவுடன் வெளியே வரும் பொழுது ஒரு மேற்பார்வையாளர் ''அடுத்த பரீட்சைகளையும் மறந்து போய் விடாதே'' என்று கூறிச் சிரித்தார். என் மனம் பேராசிரியருக்கு நன்றி கூறியது. அன்று அவர் கருணை காட்டவில்லையென்றால் என் அறியாமையினால் ஓர் ஆண்டுப் படிப்பு வீணாகி இருக்குமே!

எஸ். மோகன்

இரட்டிப்பு இன்பம்

எனக்கு மிக மிக நெருங்கிய நண்பன் சுந்தரம். அவனுக்குத் திருமணமாகியது. திருமணத்தின் போது மாப்பிள்ளைத் தோழனாக நின்று செய்த கேலிக்கைகளும் விளையாட்டுக்களும் கொஞ்ச நஞ்சமல்ல. பின்பு என் நண்பனை அவன் மனைவியுடன் பிளாக்கு வழியனுப்பச் சென்னை சென்ட்ரல் ஸ்டேஷனை அடைந்தேன். வண்டி புறப்படுகையில் ''நீ அடுத்த தடவை வரும்போது இருவருக்கும் பதில் மூவராக வந்து, எனக்கு ஒரு பாலசுப்பிரமணியத்தைத் தரவேண்டும்'' என்று சொன்னேன்.

சில மாதங்களுக்குப் பின் என் நண்பனின் மனைவி பிள்ளைப் பேற்றுக்கான அறிகுறிகளைக் கொண்டதாகச் செய்தி வரவே, நான் திருத்தணி சென்று குமரனை வேண்டிக் கொண்டு சென்னையை அடைந்தேன். திருத்தணிகையில் என் நண்பனுக்காக ஒரு முத்துக்குமரனின் படத்தைப் பெற்றுக் கொண்டு அந்த வெகுமதியுடன் நான் பிளாக் சென்றேன். இதே சமயத்தில் பெண்ணின் தாயாரும் மதுரை மீனாட்சியைத் தரிசனம் செய்துவிட்டு, தேவியின் பிரசாதத்துடனும், மீனாட்சியம்மை படத்துடனும் அங்கு வந்திருந்தாள். நான் குமரனையே அளிக்க வேண்டும் என்றேன் தம்பதி



யிடம். பெண்ணின் தாயாரோ மீனாட்சி பிறக்க வேண்டும் என்று சொல்லி விட்டாள்.

விசாக நட்சத்திரம். நண்பனின் மனைவிக்குப் பிரசவ வேதனை ஏற்பட்டது. நண்பன் வெளியே சென்றிருந்தான். டாக்டரைக் கூப்பிட நான்தான் சென்றேன். சற்று நேரத்தில் குழந்தையின் அழுகைச் சத்தம் என் காதுக்குக் கேட்டது. பிறந்தது பெண் குழந்தை என்பதை அறிந்ததும் பெண்ணின் தாய்க்குத் தான் சொன்ன சொல் பலித்ததில் சந்தோஷம். எனக்கோ ஒருசிறிது வருத்தம். ஆனால் என்ன ஆச்சரியம்! கொஞ்ச நேரத்துக்கெல்லாம் மீண்டும் பிரசவ வலி என் நண்பன் மனைவிக்கு ஏற்பட்டது. மறுபடியும் வீல் என்ற சத்தம். இம்முறை ஆண் குழந்தை! நாங்கள் அடைந்த சந்தோஷத்துக்கு எல்லை உண்டோ?

— என். பாலசுப்பிரமணியம்


தையல் இயந்திரம் வேகமாக இயங்கிக் கொண்டிருந்தது. அதை இயக்கிக் கொண்டிருந்த அப்துலின் கைகளும் இயந்திரம் போலத்தான் இயங்கிக் கொண்டிருந்தன. ஆனால் அவனுடைய மனம் தையலிலேயே இல்லை. டாலிகஞ்சில் இருந்த அவனுடைய வீட்டில் — இல்லை, குடிசையில் — அவனுக்காகக் காத்திருந்த அவன் மனைவி சபீதாவும் மகன் கரீமுமே அவனது நினைவில் நிறைந்திருந்தார்கள். அவர்களுடைய நிலை இப்போது எப்படி இருக்கிறதோ என்று உள்ளூறக் கவலை அப்துலுக்கு.

அப்துல் வசித்தது ஏழை மக்கள் வாழும் பகுதியில். அங்கு வசித்தவர்களில் அப்துலின் குடும்பம் ஒன்றுதான் முஸ்லிம் குடும்பம். நூற்றுக்கணக்கான இந்துக் குடும்பங்களிடையே தனியே வாழ்வதில் எவ்வித அசௌகரியத்தையோ ஆபத்தையோ இது வரை அப்துல் உணர்ந்ததில்லை. ஆனால் இப்போது ஊர் இருக்கும் நிலைமையில் கவலைப் படாமல் இருக்க முடியுமா ?

சில நாட்களாகவே ஊரெங்கும் ஒரே பரபரப்பு. எங்கு பார்த்தாலும் பேச்சில் அடிபட்டது எல்லைக்கப்பால் நிகழ்ந்து வரும் வகுப்புக் கலவரந்தான். அங்கு வாழ்ந்த மக்களில் பெரும்பாலோர் நாட்டுப் பிரிவினை காரணமாகக் கிழக்கு வங்காளத்திலிருந்து அகதிகளாக வந்தவர்கள். அவர்களுடைய உறவினர்களில் பலர் இன்னும் பாகிஸ்தானில் இருந்தார்கள். ஆகவே, அங்கு நிகழும் கலவரங்கள் பற்றிய செய்திகள் அவர்களிடையே கவலையையும் பரபரப்பையும் உண்டாக்கியதில் வியப்பில்லை.

உணர்ச்சி வசப்படும் மனிதன் நிதானமிழந்து விடுகிறான்; எவ்விஷயத்தையும் பகுத்தறிவுடன் ஆராயும் சக்தி மறைந்து விடுகிறது; அவன் மனிதத் தன்மைக்கு ஒவ்வாத உந்தல்களுக்கு அடிமைப்படுகிறான். கலவரங்கள் பற்றிய செய்திகளால் ஆத்திரம் கொண்ட கல்கத்தாவாசிகளிடையேயும் இத்தகைய மன நிலை உருவெடுத்தது. பாகிஸ்தானில் இந்துக்களுக்கு இழைக்கப்படும் அநீதிக்குப் பதிலாக இங்குள்ள முஸ்லிம்களைத் துன்புறுத்த வேண்டும் என்று சிலர் பேச ஆரம்பித்தார்கள். பல்லாண்டுகளாக வேற்றுமையின்றி வாழ்ந்து வந்து கொண்டிருந்த இரு வகுப்பினரிடையேயும் பரஸ்பர அவநம்பிக்கை தோன்றலாயிற்று. இந்தச் சூழ்நிலையைப் பயன்படுத்திக் கொண்டு கொலை, கொள்ளைகளில் ஈடுபட்டு அகப்பட்டதைச் சுருட்டிக் கொண்டு ஓடத் தயாரானார்கள் ஊரிலிருந்த காலிகள்.

இந்நிலையில் மனைவியையும் பிள்ளையையும் தனியே விட்டு விட்டுக் கடைக்கு வந்தது பெரிய முட்டாள்தனம் என்று தோன்றியது அப்துலுக்கு. அவன் கடைக்குப் புறப்பட்ட



போது அவனைப் போக வேண்டாமென்று ஆன மட்டும் தடுத்துப் பார்த்தாள் சயீதா. அவன்தான் பிடிவாதமாகக் கிளம்பி விட்டான். வாடிக்கைக்காரர்கள் அவனிடம் ஒப்படைத்திருந்த துணிகள் எல்லாவற்றையும் தைத்துத் தர முடியாவிட்டாலும் அவற்றை அவர்களுக்குத் திருப்பிக் கொடுக்கவாவது ஏற்பாடு செய்ய வேண்டாமா? உயிர் போனாலும் நாணயம் தவறக் கூடாது என்பது அப்துலின் கொள்கை. விரைவில் திரும்பி விடுவதாகச் சயீதாவிடம் சொல்லி விட்டுக் கடைக்கு வந்திருந்தான் அவன். துணிகளை மூட்டை கட்டி வீட்டுக்காரர் பட்டாசாரியாரிடம் ஒப்படைத்து, தன் வாடிக்கைக்காரர்கள் வந்தால் அவர்களிடம் துணிகளைத் திருப்பித் தந்து விடும்படி சொல்லி விட்டுப் போவதற்குத்தான் அவன் கடைக்கு வந்திருந்தான். ஆனால் கடையில் பாதி தைக்கப்பட்ட துணி ஒன்றைப் பார்த்த போது அதை அப்படியே திருப்பிக் கொடுக்க மனம் வரவில்லை அவனுக்கு. அதைத் தைத்து முடிக்க உட்கார்ந்ததில் எதிர்பாராத விதமாகத் தாமதம் ஏற்பட்டு விட்டது.

சயீதா மிகவும் பயந்து போயிருந்தாள். அவளுடைய பயம் அர்த்தமற்றதல்ல என்று உணர்த்துவது போல் அன்று காலை ஒரு சம்பவம் நிகழ்ந்து விட்டது....

நூற்றுக்கணக்கான குடும்பங்கள் வாழும் அந்தப் பகுதியில் எல்லோருக்கும் பொதுவாக ஒரே ஒரு தண்ணீர்க் குழாய். குழாயில் தண்ணீர் மிகவும் குறைவாக வரும் நேரங்களில் தண்ணீர் எடுக்க வந்திருக்கும் பெண்களிடையே சண்டை சச்சரவுகள் ஏற்படுவது உண்டு என்றாலும் பொதுவாக அங்கு எல்லோரும் வரிசைப்படி தண்ணீர் பிடித்துக் கொள்ள வேண்டும் என்ற ஒழுங்கு இருந்தது. அன்று காலையில் சயீதா வழக்கம் போல் தன் பானையைக் குழாயருகில் வைத்து விட்டுத் தன் முறைக்காகக் காத்திருந்தாள். அவளுடைய முறை வந்து அவள் தன் பானையைக் குழாயடியில் வைக்கப் போன போது வேறொருத்தி அவளை ஒதுக்கி விட்டுத் தன் பானையை வைத்து விட்டாள். ஒரு நிமிஷம் விக்கித்துப் போய் நின்று விட்டாள் சயீதா. அவள் ஓர் அப்பாவி; சண்டை போடவே தெரியாது அவளுக்கு. "ஏனம்மா, என் முறையல்லவா இப்போது! நீ ஏன் என்னை ஒதுக்கிவிடுகிறாய்?" என்று அவள் கேட்டாள்.

"ஆமாம், பெரிய முறையைக் கண்டு விட்டாய்!" என்று மற்றவள் சீறினாள். "உங்கள் ஊரில் எல்லாம் முறைப்படிதான் நடக்கிறதோ?"

"அப்படிச் சொல்லு!" என்று ஆமோதித்தார்கள் கூட இருந்த மற்ற பெண்கள்.

சயீதாவுக்கு ஒன்றும் புரியவில்லை. அவளுடைய ஊரா? அவளுடைய புக்ககம், பிறந்தகம் இரண்டுமே கல்கத்தாவில்தான். அவள் தன் வாழ்நாளில் கல்கத்தாவை விட்டு வேறெங்கும் போனதுகூட இல்லை! 'அவளுடைய ஊர்' என்று அவர்கள் எதைக் குறிப்பிடுகிறார்கள்?

சயீதா அவளையே கேட்டாள்: "நீ என்னம்மா, சொல்லுகிறாய்?"

"சொல்லுகிறேன், சுரைக்காய்க்கு உப்பில்லை என்று!" படபடத்தாள் மற்றவள். "உங்கள் ஊரில்—அதுதான், பாகிஸ்தானில்—நடக்கும் அக்கிரமத்தைத்தான் சொல்லுகிறேன்! தலைமுறை தலைமுறையாக அங்கு வசித்து வரும் இந்துக்களை அழித்துக் கொண்டிருக்கிறீர்களே, இந்த அநியாயத்தைக் கேட்பாரில்லையா?"

"ஏனில்லை! நாம்தான் கேட்க வேண்டும்!" இன்னொருத்தி பதில் சொன்னாள். "நேற்றிரவு என் புருஷன்கூடச் சொல்லிக் கொண்டிருந்தார், இங்குள்ள முஸ்லிம்களை ஒழித்துக் கட்டினால் பாகிஸ்தானுக்குப் புத்தி வருமென்று."

சயீதா அதற்கு மேல் அங்கு நிற்கவில்லை. நிலைமை ரசாபாசமாக ஆகிக் கொண்டு போவதைக் கவனித்த அவள் தண்ணீர் எடுக்காமலேயே வீடு திரும்பி விட்டாள். அவள் திரும்பிப் போகும் போது மற்றவர்கள் கேலியாகக் கை கொட்டிச் சிரித்தது அவள் காதுகளில் விழுந்தது.

அப்துல் அந்தப் பகுதியில் சுமார் பதினாறு வருடங்களாக வாழ்ந்து வருகிறான்—அதாவது நாட்டுப் பிரிவினையின் விளைவாக வகுப்புக் கலவரங்கள் நடைபெற்று ஓய்ந்ததிலிருந்து அதற்கு முன்னால் அப்துலின் குடும்பத்தார் கல்கத்தாவின் முஸ்லிம்கள் அதிகமாக

நடுவே...

எஸ். கிருஷ்ணமூர்த்தி



வாழும் நகரின் மத்தியப் பகுதியில்தான் பல தலைமுறைகளாக வசித்து வந்தார்கள். அப்துலின் தந்தை பரம வைதிகர்; குரானை முறைப்படி ஓதியவர்; புனித மெக்காவுக்கு யாத்திரை செய்தவர். ஆயினும் அவருக்குச் சற்றும் மதவெறி என்பதே கிடையாது. அவருடைய அகால மரணத்துக்கும் இதுவே காரணமாகியது.....

பிரிவினைக்கு முந்தைய ஆண்டு. 'கல்கத்தாப் படுகொலை' என்று பிற்காலத்தில் சரித்திரப் பிரசித்திபெற்ற மதவெறியாட்டம் நிகழ்ந்த காலம். மொத்தமாகப் பார்க்கப் போனால் கல்கத்தாவில் முஸ்லிம்கள் சிறுபான்மையோர்தான். ஆனால் நகரத்தின் சில பகுதிகளில் அவர்கள் பெரும் எண்ணிக்கையில் இருந்தார்கள். வங்காளத்தில் அப்போது முஸ்லிம் லீகின் ஆட்சி நடைபெற்று வந்தது. 'பாகிஸ்தான் வேண்டும்' என்ற கோரிக்கையை வலியுறுத்த முஸ்லிம்கள் எடுத்துக் கொண்ட 'நேரடி நடவடிக்கை' ஆயிரக்கணக்கான இந்துக்களின் படுகொலையில் முடிந்தது. முஸ்லிம் பெரும்பான்மைப் பகுதிகளில் தங்கியிருந்த இந்துக்கள் குடும்பம் குடும்பமாக அழிக்கப்பட்டார்கள். அப்துல் அப்போது இருபது வயது வாலிபன்; அப்போதுதான் மணமாகியிருந்தது அவனுக்கு. அவனும் அவன் தந்தையும் அப்பகுதியில் பேயாட்டம் ஆடிய மதவெறியை எதிர்த்து நின்றார்கள். மதவெறிக்காளான பல இந்துக் குடும்பங்களுக்கு அவர்கள் தங்கள் வீட்டில் தஞ்சமளித்தார்கள். வெறியர்கள் அந்த இந்துக்களைத் தங்களிடம் ஒப்படைத்து விடும்படி கேட்ட போது அப்துலும் அவன் தந்தையும் அந்தக் கோரிக்கைக்கு இணங்க உறுதியாக மறுத்து விட்டார்கள். இந்துக்களின் மேல் வெறியர்களுக்கு இருந்த ஆத்திரம் அவர்களைக் காப்பாற்ற முன்வந்த அப்துல் குடும்பத்தாரின் மேல் பாய்ந்தது. அவர்கள் தந்தையையும் தனயனையும் நையப் புடைத்துவிட்டு ஓடி விட்டார்கள். அப்துலின் வயதான தந்தை இத்தாக்குதலின் விளைவாகவே கொஞ்ச காலத்துக்குப்பின் உயிர் துறந்தார். வாலிபனான அப்துல் சில நாட்கள் சிகிச்சைக்குப் பிறகு உயிர் பிழைத்து எழுந்து விட்டான்.

தந்தை இறந்த பிறகு அந்த வீட்டிலேயே இருக்கப் பிடிக்கவில்லை அப்துலுக்கு. மேலும் அவரைக் கொலை செய்த தன் வகுப்பினரிடமே அவனுக்கு வெறுப்பு ஏற்பட்டுவிட்டது. இதனிடையில் நாட்டுப் பிரிவினையும் நிகழ்ந்து விட்டது. இந்தச் சமயத்தில்தான் அவன் கல்கத்தாவின் மத்தியப் பகுதியை விட்டு விட்டு டாலிகஞ்ச பகுதியில் வந்து குடியேறினான். அங்கு வாழ்ந்தவர்களுக்கு அப்துலின் பூர்வ வரலாறு நன்றாகத் தெரியும். ஆகவே, அவர்கள் அவனிடம் மிகுந்த அன்பும் மதிப்பும் வைத்திருந்தார்கள். வயதானவர்கள் அவனை அன்புடன் 'கோகா' (குழந்தை) என்று கூப்பிடுவார்கள். அவனை விட வயதில் சிறியவர்கள் எல்லோருக்கும், அவன் 'தாதா' (அண்ணா)தான்.

ஆனால் மனித மனம் எவ்வளவு எளிதில் சலனமடைந்து விடுகிறது!

தன் பகுதியில் வசிக்கும் மக்களே தன்னைச் சில தினங்களாக 'ஒரு மாதிரி'யாகப் பார்ப்பதை அப்துல் உணர்ந்திருந்தான். அவன் அதைக் கவனித்தும் கவனியாததுபோலிருந்தான். எல்லாம் தானாகவே சரியாகப் போய் விடும் என்பது அவன் நம்பிக்கை. ஆனால் விஷயம் அவ்வளவு சாதாரணமானதல்ல என்பதை அவன் அன்று மாலைதான் சந்தேகமின்றி உணர்ந்து கொண்டான்.

அவன் வழக்கம் போல் கடையை மூடிவிட்டு வீட்டுக்கு வந்து கொண்டிருந்தான். வீதி முனையில் இருந்த டீக்கடையில் வழக்கத்துக்கு மாறாகக் கூட்டம் நிரம்பி வழிந்தது. பாகிஸ்தான் கலவர நிலைமை பற்றி அங்கே நிகழ்ந்து கொண்டிருந்த விவாதம் அவன் காதில் விழுந்தது. அவன் கடையைக் கடந்து செல்லும் போது கடையிலிருந்த சிலர் அவனைச் சுட்டிக்காட்டித் தங்களுக்குள் ஏதேதோ பேசிக் கொள்வதையும் அவன் கவனித்தான்.

அப்துல் வேகமாக வீட்டை நோக்கி நடந்தான். தன் நிலைமை என்னவென்பது அவனுக்குத் தெளிவாகத் தெரிந்து விட்டது. எந்த நேரத்திலும் அவனுடைய குடும்பம் வெறியர்களால் தாக்கப்படலாம். கூடிய சீக்கிரம் — நிலைமை மோசமாவதற்குள் — அவன் தன் குடும்பத்தை ஒரு பத்திரமான இடத்துக்கு மாற்ற வேண்டியதுதான். ஆனால் அதற்குமுன் கடைக்குப் போய்த் துணிகளையெல்லாம் வீட்டுக்காரரிடம் ஒப்படைத்து விட்டுத் தையல் இயந்திரத்தை எடுத்துக் கொண்டு வந்துவிட வேண்டும். அவனிடமிருந்த ஒரே ஒரு ஆஸ்தி அந்தத் தையல் இயந்திரந்தான். இந்தக் கலவரங்கள் எவ்வளவு நாட்கள் நீடிக்குமோ! அவனுடைய கடையும் சூறையாடப்படலாம். ஆகையால் அவன் தையல் இயந்திரத்தைப் பத்திரப்படுத்திக் கொள்ள வேண்டும். அவன் அதை இழந்து விட்டால் சாப்பாட்டுக்குத் திண்டாட வேண்டியதுதான்......

அவன் வீட்டுக்குள் நுழைந்த போது சயீதா கிலி பிடித்துப் போய் உட்கார்ந்திருந்தாள். அவன் பத்திரமாக வீடு வந்து சேர வேண்டுமே என்று அவளுக்குக் கவலையாயிருந்தது. அவனைக் கண்டதும் அவனைக் கட்டிக் கொண்டு 'ஓ'வென்று கதறி விட்டாள் அவள். காலையில் குமாரபடியில் நிகழ்ந்த வற்றை விவரித்து, ''எனக்கு இங்கே இருக்கப் பயமாயிருக்கிறது. உடனே இங்கிருந்து போய் விடுவோம். இந்த அமளி முடியும் வரை எங்காவது பத்திரமாக இருப்போம்'' என்றாள். அவன் மறுபடியும் கடைக்குப் போய்விட்டு வருவதாகச் சொன்ன பொழுது அவன் கால்களில் அவள் விழுந்து அவனைத் தடுத்தாள். ''தயவுசெய்து இப்போது வெளியே போகாதீர்கள். நன்றாக இருட்டிப் போய் விட்டது. நீங்கள் திரும்பி வரும் வரையில் எங்களுக்குப் பயமாக இருக்கும். எனக்காக இல்லா விட்டாலும் நம் செல்வன் கரீமுக்காகவாவது என் பேச்சைக் கேளுங்கள்!'' என்று கெஞ்சினாள்.

''அடி, அசடே! ஏன் இப்படிப் பயப்படுகிறாய்? பவானிப்பூர் இங்கிருந்து வெகு

நேரமா? இதோ அரை மணியில் திரும்பி வந்து விடுகிறேன்'' என்று அவருக்குத் தைரியம் சொல்லிவிட்டு வந்திருந்தான் அப்துல்....

அப்துல் துணியைத் தைத்து முடித்த போது இரவு வெகு நேரமாகி விட்டது. கடையிருந்த தெரு நகரின் முக்கியத் தெருக்களில் ஒன்று. சாதாரணமாக அதில் நள்ளிரவு வரை ஜனநடமாட்டமும், டிராம், பஸ் போக்குவரத்துமாக ஜே ஜே என்றிருக்கும். ஆனால் இப்போது நகரத்தில் நிலவிய அமைதியற்ற சூழ்நிலை காரணமாக அதற்குள்ளேயே தெரு வெறிச்சோடிப் போய் விட்டது.

அப்துல் தையல் இயந்திரத்தைப் பெட்டிக்குள் போட்டுக் கொண்டான். துணிகளை மூட்டையாகக் கட்டி எடுத்துக் கொண்டான். கடையிலே மிஞ்சியிருந்தவை ஒரு மேஜை, ஒரு 'ஷெல்ப்' இரண்டு பெஞ்சுகள் இவைதான். அவற்றையெல்லாம் ஒரு தடவை பார்த்து விட்டுப் பெருமூச்சுவிட்டான் அப்துல். இனி அவன் அங்கு மறுபடியும் உயிருடன் திரும்பி வர முடியுமோ முடியாதோ, யார் கண்டார்கள்! இப்போது ஊர் இருக்கும் நிலையில் எதுவும் நிச்சயமாகச் சொல்ல முடியாது. எட்டடி நீளமும் ஆறடி அகலமும் கொண்ட அந்தக் குறுகிய அறையில் அவன் கடந்த பதினாறு ஆண்டுகளாக வேலை செய்து வந்திருக்கிறான். அந்தத் தொடர்பால் அந்த அறையிடம் அவனுக்கு ஒரு பாசம் பிறந்திருந்தது.

வீட்டுக்காரர் பட்டாச்சாரியார் பின்புறத்தில் வசித்து வந்தார். அப்துல் பின்புறம் போய் அவருடைய வீட்டுக் கதவைத் தட்டினான். வீட்டுக்குள்ளே ஏதோ பேச்சுக் குரல் கேட்டது. என்ன பேசுகிறார்கள் என்பது மட்டும் அவனுக்குக் கேட்கவில்லை. ஆனால் ஒருவரும் கதவைத் திறக்கவில்லை. கொஞ்ச நேரங் கழித்து மறுபடியும் கதவைத் தட்டினான் அப்துல்.

'' யாரது ?'' என்று குரல் வந்தது.

''நான்தான் அப்துல்.''

இப்போது உள்ளே இன்னும் அருகில் குரல்கள் கேட்டன. முதலில் ஸ்ரீமதி பட்டாச்சாரியாரின் குரல் விழுந்தது. ''இவன் இந்த அகாலத்தில் ஏன் கதவைத் தட்டுகிறான் ? நீங்கள் ஒன்றும் கதவைத் திறக்க வேண்டாம். காலம் கெட்டுக் கிடக்கிறது. அவன் இப்படியே தட்டிப் பார்த்து விட்டுப் போய் விடட்டும்.''

''சீ, என்ன சொல்லுகிறாய் நீ !'' இது பட்டாச்சாரியாரின் பதில். ''அப்துல் ரொம்ப நல்லவன். அவன் நமக்கு இன்றைய நேற்றையப் பழக்கமா ?''

'' என்னவோ எனக்குத் தோன்றியதைச் சொன்னேன். அப்புறம் உங்கள் இஷ்டம். என்னதான் நல்லவனாக இருந்தாலும் அவனும் துலுக்கன்தானே !''

பட்டாச்சாரியார் கதவை மெதுவாகத் திறந்து வெளியே எட்டிப் பார்த்தார். வெளியே அப்துலைத் தவிர வேறு யாரும் இல்லை என்பதை நிச்சயப்படுத்திக் கொண்டபிறகு கதவை நன்றாகத் திறந்து கொண்டு வாசலுக்கு வந்தார்.

இவர்கள் அனைவரிடத்திலும் ஓர் ஒற்றுமை உண்டு அது என்ன?

ஹரி ராம், ஆர். கே. மிட்டல், ரூபாய் ராம், ராமன்லால் வியாஸ், சந்தோஷ் சிங் கச்வாரா, ஐ. என். சிங், குருசரண் கவுர்.

(78ம் பக்கம் பார்க்க)

''என்ன அப்துல் ? ஏன் இந்த அகாலத்தில் வந்திருக்கிறாய் ?''

''இதைக் கொடுத்து விட்டுப் போகத்தான் !'' அப்துல் துணி மூட்டையை அவரிடம் கொடுத்தான். ''நான் திரும்பி எப்போது வருவேனோ, சொல்ல முடியாது. திரும்பி உயிருடன் வரத்தான் வருவேனோ, இல்லையோ அதுவும் தெரியாது. என்னுடைய வாடிக்கைக்காரர்கள் வந்தால் அவர்களிடம் அவரவர்களுடைய உருப்படிகளைக் கொடுத்து விடுங்கள். அப்புறம்... அப்புறம்.... இந்தாருங்கள், கடைச் சாவி ! நான் திரும்பி வராவிட்டால் அதிலுள்ள மேஜை, பெஞ்சுகளை நீங்கள் எடுத்துக் கொள்ளுங்கள். வாடகை அட்வான்ஸ்தான் உங்களிடம் இருக்கிறது. ஆகையால் நான் உங்களுக்குத் தர வேண்டியது ஒன்றுமில்லை. நான் போய் வருகிறேன்.''

''எங்கே போகப் போகிறாய், அப்துல் ? பாகிஸ்தானுக்கா?'' பட்டாச்சாரியார் தயங்கியவாறே கேட்டார்.

''பாகிஸ்தானா? அங்கே எனக்கு என்ன வேலை, ஸியாம் பாபு? என்னுடைய நாடு இந்தியாதான்; கல்கத்தாதான் என் ஊர்; கல்கத்தாவைத் தவிர வேறெந்த ஊரையும் எனக்குத் தெரியாது. இந்த வயதில் இனி ஒரு புதிய ஊருக்குப் போய் வாழ ஆரம்பிக்கவும் எனக்கு விருப்பம் இல்லை. நான் இங்கேயேதான் இருக்கப் போகிறேன். இறக்க நேர்ந்தாலும் இங்கேயேதான் இறக்கப் போகிறேன்! நாங்கள் இருக்கும் பகுதியில் நிலைமை மோசமாக இருக்கிறது. ஆகையால் கொஞ்ச நாட்கள் என் குடும்பத்தை ஏதாவதொரு பத்திரமான இடத்தில் வைத்திருக்கப் போகிறேன். அவ்வளவுதான். அல்லாவின் அருள் இருந்தால் இந்த அமளி ஓய்ந்ததும் திரும்பி வருவேன்...... உங்களிடம் ஒருவேண்டுகோள் ஸியாம் பாபு?''

'' என்ன அப்பா ?''

''நான் உயிரோடிருந்தால் இங்கே நிச்சயம் திரும்பி வந்து விடுவேன். என்னைப் பற்றிய செய்தி நிச்சயமாகத் தெரியும் வரை நீங்கள் கடையை வேறு யாருக்கும் வாடகைக்கு விட வேண்டாம்.''

''ஆகட்டும், அப்பா !'' என்றார் பட்டாச்சாரியார். அவருடைய குரல் நெகிழ்ந்திருந்தது.

''ஸியாம் பாபு! நீங்கள் எனக்குத் தந்தை போல. என்னையும் என் குடும்பத்தையும் ஆசீர்வதியுங்கள்.'' அப்துல் குனிந்து அவருடைய கால்களைத் தொட்டுத் தலையில் ஒற்றிக் கொண்டான்.



ஒற்றுமை என்ன?

அவர்கள் எல்லோருமே நமது நாட்டு ஜனாதிபதி தேர்தலுக்கு நின்றவர்கள் !

'பாலி'

பட்டாச்சாரியார் பரம வைதிகர். பழைய ஆசாரங்களிலும் கட்டுப்பாடுகளிலும் ஊறிப் போனவர். அவர் அன்று தம்மை மறந்து அப்துலை இறுகத் தழுவிக் கட்டிக் கொண்டார். "காளி மாதா கிருபையால் உனக்கு ஒரு கெடுதியும் நேராது அப்பா! நீயும் உன் குடும்பமும் பத்திரமாக இருப்பீர்கள் ! நீ திரும்பி வர எவ்வளவு மாதமானாலும் சரி, நான் கடையை உனக்காக வைத்திருப்பேன். போய் வா" என்று அவர் நாத் தழுதழுக்க அப்துலை ஆசிர்வதித்தார்.

வாசற்படியில் கால் வைத்து இறங்கப் போன அப்துல் ஏதோ நினைவுக்கு வந்தவனாகத் திரும்பி வந்து அவரிடம் சொன்னான், "இன்னொரு முக்கியமான விஷயம், சியாம் பாபு! நாளைக் காலையில் ஞாபகமாக என் கடையின் விளம்பரப் பலகையை எடுத்து விடுங்கள். இல்லா விட்டால் யாராவது விஷமிகள் இந்த இடம் முஸ்லிமுக்குச் சொந்தமாக்கும் என்று நினைத்து வீட்டையே அழிக்க முற்படலாம்...."

அப்துல் கனமான தையல் இயந்திரத்தைத் தூக்க முடியாமல் தூக்கிக் கொண்டு வீட்டை நோக்கி வேகமாக நடந்தான். ஊரின் நிலைமையை எண்ண எண்ண அவனுக்கு ஆச்சரியமாகவும், வேதனையாகவும் இருந்தது.

மத வெறிதான் மக்களை எப்படி மாற்றி விடுகிறது! பல ஆண்டுகள் அவனுடன் ஒற்றுமையாக வாழ்ந்து வந்தவர்கள் அவனை அன்புடன், "தாதா, தாதா" என்று அழைத்தவர்கள் இன்று அவன் முஸ்லிம் என்ற ஒரே காரணத்துக்காக அவன்மீது அவநம்பிக்கை கொள்ளவும் அவனை வெறுக்கவும் ஆரம்பித்து விட்டார்களே! என்ன கொடுமை இது !

வீதியில் சந்தடியே இல்லை. ஆனால் தூரத்தில் மக்களின் ஆரவாரமும் அதைத் தொடர்ந்து துப்பாக்கிச் சத்தமும் காதில் விழுந்தன. சத்தம் வந்த பக்கத்தில் ஆகாயம் சிவந்து கிடந்ததைப் பார்த்து அப்துல் அங்கே கலகக்காரர்கள் எங்கோ தீ வைத்து விட்டார்கள் என்று உணர்ந்தான்.

அவன் மனத்தில் தன் வீடு என்ன வாயிற்றோ என்ற திகில் பிறந்தது. இன்னும் வேகமாக நடந்தான் அவன்.

அவன் வீடு சேர்ந்த போது சபீதா வாசலில் அவனுக்காகக் காத்திருந்தாள். உள்ளே அவர்களுடைய துணிமணிகளும், சாமான்களும் மூட்டை கட்டி வைக்கப்பட்டிருந்தன. கரீம் மட்டும் ஒரு பக்கம் தூங்கிக் கொண்டிருந்தான். கொஞ்ச நேரத்துக்கு முன்னால் போலீஸ்காரர்கள் அங்கு வந்து விட்டுப் போனார்களாம். அவர்கள் சபீதாவிடம் மூட்டை முடிச்சுக்களைக் கட்டிக் கொண்டு தயாராயிருக்கும்படியும் சற்று நேரத்தில் லாரியில் ஏற்றி அவர்களைப் பத்திரமான இடத்துக்கு அழைத்துப் போவதாகவும் சொன்னார்களாம்.

கவலை ஏதும் இல்லாமல் தூங்கிக் கொண்டிருந்த பச்சிளம் பாலகனின் கள்ளங்கபடமற்ற முகத்தைப் பார்த்துப் பெருமூச்சுவிட்டான் அப்துல். கரீமின் தலைமாட்டில் ஒரு பூச்செடித் தொட்டி இருந்தது. பக்கத்துத் தெரு மோதிலால் விசுவாஸ் அவர்களின் பையன் சமீர் கரீமின் நெருங்கிய நண்பன். அவனுடைய வீட்டில் ஒரு பெரிய தோட்டம். கரீம் அங்கே அடிக்கடி விளையாடப் போவான். அங்கே பெரிய தாமரை இலை அளவுக்கு மலர்ந்திருக்கும் பிரும்மாண்டமான சிவப்புச் சூரியகாந்திப் பூக்களின் மேல் கரீமுக்குக் கொள்ளை ஆசை. ரத்தக் காடாக மலர்ந்த அந்தப் பூக்கள் மாலை வெயிலில் காற்றில் அசைந்தாடும் அழகை மணிக்கணக்காகப் பார்த்து ரசிப்பான் கரீம். இதைக் கவனித்த சமீர் கரீமுக்கு ஒரு சூரிய காந்திச் செடியைத் தொட்டியுடன் தந்திருந்தான். தனக்கென்று ஒரு செடி கிடைத்ததில் எல்லையில்லாத சந்தோஷம் கரீமுக்கு. சாப்பிட்ட நேரம் போகப் பாக்கி எல்லா நேரங்களிலும் அவன் அந்தச் செடியை விட்டு நகருவதில்லை. தூங்கும் போதுகூட அவன் அந்தத் தொட்டியைத் தன் தலைமாட்டிலேயே வைத்துக் கொண்டு செடியில் பூக்கப் போகும் சூரிய காந்திப் பூக்களைப் பற்றிய கனவுகள் கண்டுகொண்டே தூங்குவான்.

செடி இன்னும் பூக்க ஆரம்பிக்கவில்லை. ஆனால் மொட்டுக்கள் தோன்ற ஆரம்பித்து விட்டன. இன்னும் ஒரு வாரத்தில் அவை மலர்ந்து விடும்.

தூரத்தில் போலீஸ் லாரி வரும் ஒலி கேட்டது. அப்துல் சாமான் மூட்டைகளையும், துணி மூட்டைகளையும் எடுத்து வந்து லாரியில் வைத்தான். சபீதா கரீமை எழுப்பிக் கூட்டிக் கொண்டு வந்தாள். பக்கத்து வீடுகளில் விளக்கு வெளிச்சம் தெரியவில்லை. ஆனால் அங்குள்ளவர்கள் எவரும் தூங்கவில்லை என்பதும், அவர்கள் இருட்டிலிருந்து கொண்டே தங்களைக் கவனிக்கிறார்கள் என்பதும் தெரிந்தது அப்துலுக்கு. போலீஸ் பாதுகாப்புடன்தான் அங்கிருந்து வெளியேறுவது அவர்களுடைய ஆத்திரத்தைக் கிளப்பி விட்டிருக்கிறது என்று அவன் உணர்ந்தான். ஏதோ குற்றம் செய்தவன் போல் இரவோடு இரவாகத் திருட்டுத்தனமாக ஓட நேர்ந்த நிலையை எண்ணி அவன் நொந்து கொண்டான்.

வண்டியில் ஏறும்போது கரீமுக்குத் தூக்கம் நன்றாகத் தெளிந்துவிட்டது. அத்துடன் பூச்செடியின் நினைவும் வந்துவிட்டது. தன்னுடன் பூச்செடியையும் வண்டியில் வைத்தால்தான் ஏறுவேன் என்று பிடி

வாதம் பிடித்து அழ ஆரம்பித்தான் அவன். அப்போதிருந்த மன நிலையில் அப்துலுக்குக் கரீமின் பிடிவாதம் எரிச்சலூட்டியது. "போடா, தடியா! நீயும் உன் பூச்செடியும். பேசாமல் கிடக்கிறாயா, உதைக்கட்டுமா?" என்று அவன் பிள்ளையை அதட்டினான். கரீம் இன்னும் பலமாக அழ ஆரம்பித்தான். பொறுமையை இழந்த அப்துல் கரீமை நையப் புடைத்து விட்டான். இரவின் அமைதியில் கரீமின் அலறல் தெரு வெங்கும் எதிரொலித்தது. லாரி அப்துல் குடும்பத்தினரை ஏற்றிக் கொண்டு புறப்பட்டது.

ஒரு வார காலம் நகரின் பல பகுதிகளில் மத வெறியின் பேய்க் கூத்து; வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு அகப்பட்டதைச் சுருட்டிக் கொள்ளத் துணிந்த காலிகளின் ஆர்ப்பாட்டம்; எங்கும் அமைதியற்ற சூழ்நிலை. காலிகள் ஒருசிலரேயானாலும் அவர்களால் ஆயிரக்கணக்கான நல்லவர்களைப் பயமுறுத்த முடிந்தது. தொழிற்சாலைகள், கடைகள், காரியாலயங்கள் எல்லாம் பெரும்பாலும் மூடிக் கிடந்தன. சமூக வாழ்வின் சீரான ஓட்டம் தடைப்பட்டது. ரகளை நடந்த இடங்களில் ஊரடங்குச் சட்டம் அமுலாகியது. ஆர்ப்பாட்டம் நிகழ்ந்த இடங்களில் போலீஸ் தடியடியும் துப்பாக்கிப் பிரயோகமும் நடைபெற்றன. இந்துப் பகுதிகளில் உள்ள முஸ்லிம்களும், முஸ்லிம் பகுதிகளில் உள்ள இந்துக்களும் மனத்தில் கிலியுடன் காலங் கடத்தினார்கள். அகதிப் பராமரிப்பு நிலையங்களில் அகதிகள் வந்து குவிந்தனர். நகரமே களையிழந்து கிடந்தது.

வெறி என்பது ஒரு வகை மயக்கம். மயக்க நிலை எவ்வளவு நாட்கள்தான் தொடர்ந்திருக்க முடியும்? மத வெறியும் கடைசியில் ஓய்ந்தான் செய்தது. கொஞ்சங் கொஞ்சமாக நகரமும் பழைய நிலைக்கு வரத்தான் செய்தது. அகதிகளின் சீரமைப்புக்கான ஏற்பாடுகள் துரிதமாக நடந்தன. அமைதி காரணமாகத் தங்கள் வீடு வாசலைத் துறக்க நேர்ந்தவர்கள் அவரவர்களுடைய இடங்களுக்குத் திருப்பியனுப்பத் தலைப்பட்டார்கள். அவர்களுடைய சேதமடைந்த வீடுகளைச் செப்பனிடப் பொருளுதவி அளிக்கப்பட்டது.

அப்துலும் குடும்பத்துடன் தன் வீட்டுக்குத் திரும்பினான் — அதாவது வீடு இருந்த இடத்துக்கு. ஏனென்றால் இப்போது அங்கே வீடு இல்லை. அது இருந்த இடத்தில் கூரை எரிந்த சாம்பலும், பாதி எரிந்த கதவுகளும் குட்டிச்சுவர்களுந்தான் இருந்தன. இது அவன் எதிர்பார்த்ததுதான்.

அப்போது அவன் எதிர்பாராததும் ஒன்று நிகழ்ந்தது. அப்துல் அங்கு வந்து சேர்ந்ததும் அவனுடைய பக்கத்து வீட்டுக்காரர்களான அனில்மண்டலும், ரமேஷ்கோஷும் அவனை அன்புடன் வரவேற்றார்கள். அவனை இறுகக் கட்டித் தழுவிக் கொண்ட கோஷ், "உன் வீடு சீராகும் வரை நீ உன் குடும்பத்துடன் என்னுடனேயே தங்கிவிடு" என்றான்.

அப்துலின் கண்களில் நீர் முட்டியது. சமீபத்தில் நிகழ்ந்த சம்பவங்கள் குறித்துப் பேச அவர்கள் வெட்கப்படுகிறார்கள் என்று உணர்ந்து கொண்டான் அப்துல்.

அவன் தன் குடும்பத்துடன் ரமேஷ் கோஷின் வீட்டுக்குள் சென்றான். சபீதாவுக்கு ஸ்ரீமதி கோஷிடமிருந்து அமோகமான வரவேற்புக் கிடைத்தது.

"கரீம், கரீம்!" என்று குரல் கேட்டது வெளியே.

கரீம் வேகமாக வெளியில் ஓடி வந்தான். அப்துலும் வெளியே வந்தான்.

அங்கே சமீர் ஒரு பூச்செடித் தொட்டியைத் தூக்க முடியாமல் தூக்கி வைத்துக் கொண்டு நின்றிருந்தான். அதில் மலர்ந்திருந்தது, தாமரை இலை அகலத்துக்கு ஒரு பெரிய சிவப்புச் சூரியகாந்திப் பூ.


மலர்ந்த பூவைப் போல் மலர்ந்தது கரீமின் முகமும். அவன் சமீரிடமிருந்து தொட்டியை வாங்கிப் பத்திரமாகக் கீழே இறக்கி வைத்தான்.

சமீர் சொன்னான், "நீங்கள் எல்லாரும் திடீரென்று எங்கே போய் விட்டீர்கள், கரீம்? நான் ஒரு நாள் காலையில் உன்னுடன் விளையாட இங்கு வந்த போது இங்கே ஒரே கும்பலாக இருந்தது. சாமான்கள் சிதறிக் கிடந்தன. நல்ல வேளையாகப் பூந்தொட்டி மட்டும் பத்திரமாக ஒரு மூலையில் இருந்தது. அது உடைந்து போனால் நீ எவ்வளவு வருத்தப்படுவாய்! ஆகையால் நான் அதை எடுத்துக் கொண்டு போய் எங்கள் வீட்டில் பத்திரமாக வைத்திருந்தேன்.... எவ்வளவு பெரிய பூ பார்த்தாயா, கரீம்!"

சிறுவர்கள் இருவரும் மகிழ்ச்சியுடன் செடியைச் சுற்றிச் சுற்றி வந்து குதித்தார்கள். செக்கர் வானத்தின் செம்மை படிந்த அவர்களுடைய முகங்களும் சூரிய காந்தி மலர்களாகத் திகழ்ந்தன.

இரு மலரையும் சிறுவர்களின் முகமலர்களையும் பார்த்து ஆனந்தத்தில் மெய் மறந்தவனாக உட்கார்ந்திருந்தான் அப்துல். வெறி நடுவே அவன் கண்ட அன்பு அவன் நெஞ்சை நிறைத்தது. நன்றிப்பெருக்கு அவனது கண்களைக் குளமாக்கியது.

"அல்லா! உன் அருளால் இந்த இளம் தலைமுறையாவது மத வெறியை உணராமல் வளரட்டும்!" என்று பிரார்த்தனை செய்து கொண்டான் அப்துல்.



"கிரிக்கெட் மாட்ச் நடந்த தேதி எல்லாம் மட்டும் சரியா ஞாபகம் வைச்சுக்கிட்டு இருக்கியே! உன் தம்பி பிறந்த நாள் தெரியுமா, சொல்லு. பார்க்கலாம்!"

"ஓ, தெரியுமே! பாம்பேயிலே இண்டியா வெஸ்ட் இண்டீஸ் டெஸ்ட்லே ஓர்ரல் மூன்று விக்கெட் போட்ட அன்னிக்குத் தம்பி பொறந்தான்."

ஸ்புட்னிக் துணுக்கின் தழுவல்: மூர்த்தி



இந்தவாரம் 'பொன்னியின் செல்வ'னில் வரும் அருள்மொழி வர்மரும் இராமாயணத்தில் வரும் இராம பிரானும் ஒரே நிலையில் இருப்பதாகத் தோன்றியது. முன்னதில் இளவரசர் தந்தைக்குக் கீழ்ப்படிந்து விருப்பத்துடன் சிறைப்படுகிறார். பின்னதில் இராம பிரான் தந்தையின் ஆணைப்படி கானகம் புகுகிறார். அமரர் 'கல்கி' அவர்கள் பண்டைத் தமிழ் வேந்தர் தம் பண்பை எவ்வளவு உயர்த்திக் காட்டுகின்றார் என்பதை நினைக்கும்போது, இன்றைய தமிழகத்தில் இருக்கும் நமக்கு ஏக்கம் உண்டாகிறது.

சென்னை
12–8–69 பி. பத்மா

'அம்புலிக்குஅப்பால்' என்னும் சித்திரத் தொடர்கதையை அமெரிக்க வீரர்கள் அம்புலிக்குச் சென்று அடைவதற்கு முன்னமேயே ஆரம்பித்ததோடு அல்லாமல், இந்தத் தருணத்தில் வெளியிட்டது மிகப் பொருத்தமே. விறுவிறுப்புடன் உள்ளது அக்கதை.

மதுரை—10
12–8–69 எச். ராமகிருஷ்ண சாஸ்திரிகள்

பாங்குகளை எல்லாம் தேசிய மயமாக்கி உள்ளது மத்திய அரசு. இனிமேல் தோற்றுப் போன காங்கிரஸ் அரசியல்வாதிகள்பாடு சௌகரியம்தான். அயல்நாட்டுத் தூதர் பதவிகள், கவர்னர் பதவிகள் எல்லாம் தீர்ந்து போய் விட்டாலும்கூட இருக்கவே இருக்கிறது அரசாங்க உடைமையாக்கப்பட்ட பாங்குகள். அவற்றில் உயர் உத்தியோகங்களில் அமரலாம். தேர்தலுக்கு முன்னால் விலகிக் கொண்டு, கட்சி சார்பில் நிற்கலாம்; ஜெயித்தால் எம். எல். ஏ., தோற்றால் மீண்டும் பாங்கில் உத்தியோகம்.

பாளையங்கோட்டை
13–8–69 ச. அரங்கராசன்

தற்போது அரசினர் மேற்கொள்ளும் முயற்சிகளும் வைத்தியத் துறையின் யதார்த்த நிலையை அறியாதவர்கள் கூறும் ஆலோசனைகளும் வைத்தியத் துறையின் எதிர்கால நம்பிக்கையைத் தகர்த்திடுவதாகத் தோன்றுகிறது.

அரசாங்கம் புள்ளி விவரங்களைக் குறிப்பிட்டு வைத்தியக் கல்லூரிகளையும் மாணவர்கள் அனுமதியையும் ஆண்டுதோறும் அதிகரித்து வருகிறது. இவற்றினால் வைத்திய வசதி மக்களுக்கு அதிகரித்து விடுமா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

டாக்டர்கள் அதிகம் வேண்டும் என்று கூறுபவர்கள் ஆஸ்பத்திரிகளில் என்ன வைத்திய வசதி இருக்கிறது என்பதைப் பற்றிக் கவலைப்படுவதே இல்லை. கிராமங்களில் இருக்கும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் தேவையான மருந்துகள் இல்லை. நோயைப் பற்றி அறிந்து கொள்ளப் பக்கத் துணையாக இருக்கும் பரிசோதனைச் சாலைகள் இல்லை; எக்ஸ்ரே நிலையங்கள் இல்லை; சிறு ஆபரேஷன்கள் செய்வதற்குரிய உபகரணங்களும் தகுந்த கட்டட வசதிகளும் இல்லை. இவ்வளவு குறைகளும் ஓர் ஆஸ்பத்திரியில் இருக்கும்போது, கிராம மக்களுக்கு எப்படித் தகுந்த வைத்திய வசதி கிடைக்கும்? தகுதி வாய்ந்த டாக்டர் கிராமத்தில் எவ்வாறு முறைப்படி வைத்தியம் செய்ய முடியும்? காய்ச்சலுக்கும் ஜலதோஷத்துக்கும் ஏதாவது மருந்து எழுதிக் கொடுத்து விட்டு ஒரு சிக்கலான கேஸ் வந்தால் பல மைல்களுக்கு அப்பாலுள்ள நகர ஆஸ்பத்திரிக்குச் செல்லுமாறு ஆலோசனை கூற வேண்டிய பரிதாபமான நிலையில் இருக்கிறார். ஆஸ்பத்திரிகளில் நிலைமை இவ்வாறு படுமோசமாக இருக்கும் போது அவற்றை நிவர்த்திக்க ஆலோசனைகள் கூறாமல் டாக்டர்கள் எண்ணிக்கை அதிகரிக்க வேண்டும் என்பது நியாயமானதாகத் தோன்றவில்லை.

நான்கு ஆண்டுகளுக்கு முன்பு ஆரம்பிக்கப்பட்ட திருநெல்வேலி வைத்தியக் கல்லூரியில் மாணவர்களுக்கென்று அமைக்கப்பட வேண்டிய சோதனைச் சாலைகள் அமைக்கப்படவில்லை; தகுந்த ஆசிரியர்கள் இல்லை. ஆஸ்பத்திரியில் பரிசோதனைச் சாலைகள் இல்லாததால் மாணவர்கள் தங்களுக்கு வேண்டிய பரிசோதனைகளைத் தனியார் பரிசோதனைச் சாலை ஒன்றில் செய்து கொள்ள வேண்டியதிருக்கிறதாம். இது போன்ற குறைகளை உடனே நிவர்த்திக்க வேண்டுமென்று மாணவர்கள் போராட்டம் நடத்தினர். ஆராய்ச்சித் துறைக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்துப் பல புதுப் புது உண்மைகளை மேல்நாட்டினர் வெளியிட்ட வண்ணமாக இருக்கிறார்கள். நாம் அதை அப்படியே 'காப்பி' அடிக்கிறோமே தவிர ஆராய்ச்சியைப் பற்றிக் கவலைப்படுவதாகவே தெரியவில்லை.

என்ஜினீயர்கள் அதிகம் வேண்டும் என்று கூறி இன்று என்ஜினீயர்கள் 'பள்ளிக்கூட வாத்தியாராகவும் வருகிறோம்' என்று விண்ணப்பிக்கும் அளவு அந்தக் கல்வியைக் கெடுத்தாகி விட்டது. அதே நிலைமை டாக்டர்களுக்கும் வருவதற்கு அதிக காலம் இல்லை.

மதுரை — 13
24–7–69 ந. முருகேசன் (இறுதி எம்.பி.; பி.எஸ்.)

Printed & published by R. Ananthanarayanan on behalf of Messrs Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-31
Managing Editor: T Sadasivam

மற்றவர்களை விட முன்னு லிருக்க வழி...

எதிர்காலத்திலும் இவளை முன்னுவிருக்கச் செய்யுங்கள். பணவசதி குறைவுகாரணமாக வாழ்க்கையில் இவள் முன்னேறுவது தடைப்படாம லிருக்க, இவளுக்கென்று தவறுமல் பணம் சேமித்து வாருங்கள்.

யூகோ பாங்கில் சேமியுங்கள், உங்கள் பணம் பெருகி, உங்களுடைய அன்புக்குழந் தைகளின் இன்பகரமான எதிர் காலத்திற்கு உத்தர வாதம் அளிக்கும். நீங்கள் சிறு தொகையான ரூ 5/- க்கு யூகோ பாங்கில் ஒரு சேமிப் புக் கணக்குத் தொடங்க முடியும்.



யுனைடெட் கமர்ஷியல் பாங்க்

தலைமை ஆபீஸ் : கல்கத்தா

நீங்கள் பணம் சேமிக்கலாம், யுகோ பாங்க் உங்களுக்கு உதவி செய்ய முடியும்.

ASP/UCO-1/69

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

